உ ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சியம்

தொகுதி-2

அவதாரங்களும் அருளிச்செயல்களும்



தமிழ்மறை மாமணி
முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம்

உ ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம்

இரண்டாம் பாகம்

அவதாரங்களும் அருளிச்செயல்களும்

திருநெறிய தமிழ்மணி

பேராசிரியர். முனைவர். **சிவ. திருச்சிற்றம்பலம்**

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,

தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர் '2004

விலை ரூ. 90.00

Title : **Sri Vaishnava Samaya Kalai Kalangiam II**
Avatharankalum Arulich Cheyalkalum

Author : **Dr. Siva. Thiruchitrambalam**

Subject : Encyclopedia of Sri Vishnavism

Language : Tamil

Edition : First Edition December 2004

Pages : XII + 232 = 244

Published by : **GANGAI PUTHAKA NILAYAM**
23, Deenadayalu Street,
Thyagaraya Nagar,
Chennai - 600 017.

Price : **90.00**

அட்டைப்பட உதவி, திருச்சி. A. நீலா அனந்தசேகரன்

Laser Typeset at : **KALYANI COMPUTER PRESS,**
Kumbakonam - 612 001. Ph : (0435) 2425442.

Printed at : **பாலாஜி** ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794

25-21

அணிந்துரை

முனைவர். **தி. அரங்கநாதன்**
தமிழ் இணைப் பேராசிரியர்
முதன்மை ஆய்வாளர்,
பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் பெருந்திட்ட ஆய்வு,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்.

மூவரில் முதல்வனாய ஒருவனை உலகம் கொண்ட
கோவினை குடந்தைமேய குருமணித்திரளை இன்பப்
பாவினை பச்சைத் தேனை பைம்பொன்னை அமரர்சென்னிப்
பூவினை புகழும் தொண்டர் என்சொல்லிப் புகழ்வர் தாமே.

(திருக்குறுந்தாண்டகம்)

உலகப் பண்பாடுகளில் இந்தியப் பண்பாடு மிகப் பழமைமிக்கது. இந்தியப் பண்பாட்டில் ஆன்மீக உணர்வு அடிப்படையாக அமைந்த ஒன்று. அவ்வுணர்வின் அடிப்படையில் தான் உலகத்தில் வேறெங்கும் காண இயலாத அளவிற்கு இந்திய நாட்டில் சமயங்களும், வழிபாடுகளும், சடங்குகளும், மிகுந்து காணப்படுகின்றன. அதுவே இம்மண்ணுக்குரிய சிறப்பாக அமைந்துவிட்டது. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் இணைந்த நிலையே இன்று இந்து சமயம் என்றழைக்கப்படுகிறது. இவை வைதிக சமயங்க ளாதலின் இவற்றுக்கு வேதங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் இந்து சமய வளர்ச்சியை இருவகைகளில் கூறுவது மரபு. வேதம், சம்கிதை, பிராமணம், உபநிடதம், புராணம் என ஐந்து நிலைகளில் கொள்ளுவது ஒரு மரபு; வேதம், உபநிடதம், ஆகமம் எனக் கொள்ளுவது இன்னொரு மரபு.

வேதகாலம் தொடங்கிப் பெருந்தெய்வ வழிபாட்டு மரபு இன்றளவும் நிகழ்ந்து வரக் காண்கிறோம். மிகப் பழமையானது என்று போற்றப்படும் இருக்கு வேதத்தில் முப்பத்து மூன்று கடவுளர் பற்றிய குறிப்பு உண்டு என்று கூறுவர். சிவனும் திருமாலும் அதில் அடங்குவர். இந்திய மக்களின் மிகப் பழமையான வழிபாட்டுக் கடவுள் திருமால் என்பது இதிலிருந்து விளங்கும். திருமால் பேரழகு உடையவனாகவும், இளமை உடையவனாகவும் வேதங்களில் போற்றப்படுகிறான். அவன் மூன்றடி கொண்டு இவ்வுலகு அளந்தது வேதத்தில் இடம்பெற்ற செய்தி. வேதங்களை அடுத்து வசனத் தொகுப்பாய் வந்த பிரமாணங்களிலும் திருமால் பற்றிய குறிப்பு உண்டு.

ஆத்திரேயப் பிராமணம் திருமாலைக் காக்கும் கடவுளாகக் குறிக்கின்றது. சதபதப் பிராமணம் திருமாலைத் தியாக உணர்வின் கருவாகக் கூறுகின்றது.

பிரம்மத்தைப் பற்றிய கருத்துக்களை உபநிடதங்கள் மிகத் தெளிவாக விளக்குகின்றன. உபநிடதங்கள் நூற்றெட்டு ஆகும். திருமாலின் திருநாமங்களில் ஒன்றாக அமையும் விஷ்ணு என்ற சொல் கட்டுப்பாடு இல்லாத சக்தியையும் எல்லாப் பொருள்களிலும் இருக்கிற தன்மையையும் எப்பொருளாலும் இயலாத குணத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. அவனே இவ்வுலகைப் படைப்பவனாகவும் காப்பவனாகவும் அழிப் பவனாகவும் இருக்கும் தன்மையைத் தைத்ரீய உபநிடதம் கூறுகின்றது. திருமாலே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தான். அவனே இவ்வுலகத்துப் புகுந்தான் எனச் சாந்தோக்கிய உபநிடதம் விளக்குகின்றது.

வடமொழி நூல்களான வேதம், பிராமணம், உபநிடதம் என மிகப்பழையானவை எல்லாம் திருமாலை உயர்தனிக் கடவுளாகப் போற்றுகின்றன. இருவேறு பண்பாட்டு மொழி, இனம் கொண்ட இத்திருநாட்டில் வடமொழி நூல்களில் திருமால் வழிபாடு பற்றிய சிறப்புக்கள் காணப்படுவது போலவே தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் திருமாலைப் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில் ‘மாயோன் மேய காடுறை உலகமும்’ என்த் தொடங்கும் நூற்பா அதற்குச் சான்று. தமிழகத்தில் தொல்காப்பியர் காலம் தொடங்கி இன்றளவும் திருமால் வழிபாடு சமயம், தத்துவம், வாழ்க்கை என்ற பலபரிமாணங்களைப் பெற்றுத் தமிழக மக்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இடம்பெற்றுவிட்டது.

சங்க காலத்திலும் அதையொட்டிய காலத்திலும் முல்லை நிலக் கடவுளாகவும் வழிபடு கடவுளாகவும் இருந்த திருமால் பக்தி இயக்க காலத்தில் பெருங்கடவுள் வடிவம் கொண்டதைத் திவ்வியப் பிரபந்தம் எடுத்துக்காட்டுகிறது. திருமாலை வழிபட்டு வாழ்வதே வாழ்க்கை என்ற நிலையை ஆழ்வார்கள் உணர்த்திக் காட்டினர். அதையே

உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதே நமோ நாராயணா என்பன்
வன்மையாவது உன்கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மைகண்டாயே (பெரியாழ். 5.1.3)

என்று பாடினார் பெரியாழ்வார்.

வழிபாடாகவும், வாழ்க்கையாகவும் இருந்த நிலை சமுதாயத்தில் தத்துவமாகவும் வேரூன்றிவிட்டது. ஆழ்வார்களுக்குப் பின் தோன்றிய இராமாநுசர் விசிஷ்டாத்வைதம் கண்டார். பின்னர் தோன்றிய மத்துவரும் நாராயணனே தனிப்பெரும் தத்துவம் ஏன்று துவைதம் கண்டார்.

பிற்காலத்தில் தோன்றிய அரசர்களும் திருமால் வழிபாட்டையும் கலையையும் இணைத்துத் திருமாலுக்குப் பெருங்கோயில்கள் கட்டினர். மக்களும் அக்கோயில்களைப் பேணிக் காத்தனர்; வழிபட்டனர். ஆதலின் திருமால் வழிபாடும், வைணவ சமயமும், தத்துவமும் இன்றும் தமிழக மக்களின் பண்பாட்டு நிலைகளில் ஒன்றாக மாறிவிட்டது.

இத்தகைய உயர்ந்த பண்பாட்டு, சமய, தத்துவ, வைணவ வழிபாட்டுச் சிந்தனைகளைத் தொகுத்தளிக்க வேண்டும் என்னும் அரிய முயற்சியின் உருவாக்கமே ஸ்ரீ வைணவ சமயக் கலைக்களஞ்சியம் என்னும் இந்த நூல். பேராசிரியர், முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் படைத்த நூல்கள் பல. சைவ சமயக் கலைக்களஞ்சியம், விநாயகர் கலைக் களஞ்சியம், திருமுருகன் கலைக் களஞ்சியம் என்பன அவற்றுள் சில. சைவக் கடவுளரான விநாயகர், முருகன், சிவபெருமான் பற்றிய வேறு சில தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றை முழுமைபெறச் செய்து கடவுளர் பற்றிய அனைத்துச் செய்திகளும் ஒருங்கே தொகுக்கப்பட வேண்டும் என்னும் பேராசிரியரின் முழுமையான முயற்சியில் உருவானவை அக்கலைக் களஞ்சிய நூல்கள். அந்நூல்களின் உருவாக்கத்திற்குத் தொகுப்பு முயற்சி பெரிது. முழுமையாக்க முயற்சி அரிதுமாக இருந்திருக்கக்கூடும்.

வைணவச் சம்பிரதாயம் மிகக் கடுமையானது. இக்கடுமையான கட்டுப்பாட்டின் காரணமாக வைணவம் பற்றிய நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றன. சைவம் போல வைணவ சமயத்திற்குரிய சிந்தனைகள், கோவில்கள், அடியார்கள், நூல்கள் பற்றிய தொகுப்பினைக் காணுவது அரிது. நெகிழ்ச்சியின்மையே அதற்குக் காரணம். அதுவே அச்சமயத்திற்குரிய பெருமையும் ஆகும். அது தவிர இன்னொரு இடர்ப் பாடும் உண்டு. வைணவ சமய நூல்கள், விளக்கங்கள், மணிப் பிரவாள நடையில் அமைந்தவை. ஆதலின் வைணவ சமயக் கருத்துக்களை அறிவதே அரிதான ஒன்று, வைணவ விளக்க நூல்களில் பழங்காலத்தில் அச்சான நூல்கள் மணிப் பிரவாள நடைக்குக் கிரந்தம், தெலுங்கு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. அதையடுத்து வெளியான நூல்கள் தேவநாகரி எழுத்துக்களாலானவை. தற்காலத்தில்தான் சுலோகங்களும், வடமொழிச் சொற்களும் தமிழ் எழுத்துக்களால் அச்சிடப்படுகின்றன. ஆதலின் இக்கலைக் களஞ்சியத்திற்குக் கருத்துச் சேகரிப்பு என்பது எளிதாக இருந்திருக்க இயலாது. தொகுப்பு முயற்சியே அரிய ஒன்றாக இருந்திருக்க வேண்டும். மேலும் முழுமையாக்க முயற்சியும் மிக அரிய ஒன்றாகவே தோன்றுகின்றது. ஆதலின் இந்நூலாக்கம் பேராசிரியருடைய வாழ்க்கைக் குறிக்கோளாக அமைந்துள்ளதை உணரமுடிகிறது.

வைணவம் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய நூலாகிய இந்த ஆய்வுக் களஞ்சியம் ஒரு நிறுவனத்தால் மட்டுமே முழுமையாக்கம் பெறக்கூடியது. ஆனால் தேவாரமணி. பேராசிரியர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் தனியொருவராய் அம்முயற்சியை மேற்கொண்டு சாதித்திருக்கிறார். அதற்கு முன்னதாக அவர் வெளியிட்ட கலைக் களஞ்சியங்கள் ஒருவகையில் மட்டுமே உதவி இருக்கின்றன. இந்த நூல் அவருடைய வைணவ நூல் வெளியீட்டு வரிசையில் இரண்டாவது முயற்சி. கலைக்களஞ்சியத்தைப் பொறுத்தவரை முதல் முயற்சி. முழு முயற்சி. அம்முயற்சிகளில் அவர் வெற்றியும் கண்டுள்ளார்.

- *இந்தியாவைக் கடந்தும் திருமால் வழிபாடு பரவி இருந்தமை.*
- *ஆழ்வார்கள் ஆச்சாரியர்கள் பற்றிய குறிப்புகள்.*
- *தமிழகத்தில் உள்ள திருமால் திருக்கோயில்களின் மாவட்ட வாரியான முழுமையான பட்டியல் மற்றும் தென்னிந்தியா, வடஇந்தியாவில் உள்ள திருமால் திருக்கோயில்களின் பட்டியல்.*
- *தமிழில் அமைந்த திருமால் பற்றிய இலக்கியங்கள்.*
- *திருமாலிய நெறியாளர்களின் பட்டியல்.*
- *வைணவத் தத்துவ நூல்கள் மற்றும் தத்துவங்கள்*

முதலானவை இக்கலைக் களஞ்சியத்தில் இடம்பெற்ற தொகுப்புக்களில் மிகக் குறிப்பிடத் தகுந்தனவற்றுள் சிலவாகும். திருநெறிய தமிழ்மணியான பேராசிரியர் முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் இன்பக்கதி நல்கும் திருமாலிய நெறிவிளக்கும் அரிய நூலை நம் கைகளில் இன்று தவழவிட்டுள்ளார்.

சமயத்தைப் பற்றி வெளிவரும் நூல்களில் சரியானவை சிலவே. அதிலும் வைணவத்தைப் பற்றி வெளிவருபவை மிகச் சிலவே. அச்சிலவற்றுள் முழுமையானதாக, பல சிறப்புக்களைக் கொண்டதாகத் திகழ்கிறது இந்நூல். தமிழறிந்த அனைவரும், சமய உணர்வு கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய நூல் இது. திருமாலிய நெறியைப்போற்றும் அனைவரும் தம் இல்லில் தவறாது வைத்திருக்க வேண்டிய நூல்களில் இன்று இந்நூலும் ஒன்றாகிவிட்டது.

இந்த நூலின் ஆசிரியரான பேராசிரியர். முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் இது போன்ற நூல்கள் பலவற்றை இத்தமிழுலகிற்கு அளிக்கவேண்டும். அவற்றைப் படித்துச் சமயநெறி தழைத்துத் தமிழினம் சிறக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல திருவேங்கடமுடையானைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

அன்பன்

கும்பகோணம் **தி. அரங்கநாதன்.**

ஆசிரியர் உரை

பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே!

- ஸ்ரீ திருமங்கையாழ்வார்

ஸ்ரீ இராமாவதாரத்தின் மாண்பினைப் பாடமுனைந்த கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார்

'ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்கு புக்கென
காசில் கொற்றத்து இராமன் கதையினை
ஆசை பற்றி அறையலுற் றேனரோ'

என்று அவையடக்கமாய்க் கூறிப்போந்தார். அவதாரம் ஒன்றின் மேன்மையை உரைக்கப்போந்த அவர்நிலையே அதுவென்னில் பரந்து விரிந்து தோன்றும் வைணவ சமயக் கருத்துக்களை 'ஸ்ரீவைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சியம்' என்று நூலாய்த் தொகுக்க முனைந்துள்ள ஒன்றுக்கும் பற்றா எளியேனுடைய நிலைமை என்னாவது?

சைவசமயக்கலைக் களஞ்சியம், விநாயகர் கலைக் களஞ்சியம், திருமுருகன் கலைக் களஞ்சியம் முதலான நூல்களைத் தொகுத்துள்ள அடியேற்கு வைணவ சமயக் கலைக் களஞ்சிய நூல்தொகுப்பு முயற்சி சற்று அதிகப் பிரசங்கித்தனமானதாகத் தோன்றினாலும் என்னைத் தமிழ் ஆய்வுலகத்திற்கு அறிமுகம் செய்து ஏற்றம் தந்த வைணவ சமயத்திற்கு என்னாலான சிறு பணியினைச் செய்யவேண்டும் என்னும் மன உந்துதலே இந்நூலை வரைவதற்கான அடிப்படைக் காரணம் என்பதே உண்மை.

குடந்தை அரசு கல்லூரியில் 1965ஆம் ஆண்டில் முதலாமாண்டு தமிழ் இலக்கிய வகுப்பில் படித்து வந்தபோது, 'திருமங்கையாழ்வார்

வாழ்வும் வாக்கும்' என்னும் பொருள் குறித்து மதுரை தியாகராயர் கல்லூரி நடத்திய மாநில அளவிலான ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு என்னை அழைத்து ஆற்றுப்படுத்திய பெருந்தகையாளர் பேராசிரியர். திரு. கோ. சங்கரராசன் அவர்கள் ஆவார்கள்.

அவர்கள் காட்டிய நெறியில் அடியேனால் முதன்முதலாக அந்நாளில் 120 பக்க அளவில் எழுதப்பெற்ற **வைணவ சமய ஆய்வுக் கட்டுரை தமிழ் மாநில அளவிலான முதற்பரிசினைப் பெற்றுத்** தந்ததோடு பேரறிஞர்களான டாக்டர். தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர். சி. இலக்குவனார், டாக்டர். அ. கி. பரந்தாமனார், பெருந்தகையாளர் பி.ஆர். புருஷோத்தம நாயுடு, ஐயன்பெருமாள் கோனார் முதலான பல்துறைத் தமிழ்ப் பேரறிஞர் களுடைய நல்வாழ்த்துக்களையும் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரிய சுவாமிகளின் நல்லாசியையும் ஒருங்கே பெற்றுத் தந்தது. அவ்வித்தினைத் தொடர்ந்து சென்னை லயோலாக் கல்லூரியினால் நடத்தப்பெற்ற மாநிலக் கல்லூரிகள் அளவிலான ஆய்வுக் கட்டுரைப் போட்டியிலும் என்னால் கலந்துகொண்டு முதல் பரிசினைப்பெற இயன்றது.

இவ்வாறு எளியேனை ஆய்வுலகிற்கு அறிமுகம் செய்து ஏற்றம் தந்த ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் நூற்றிஎட்டு திவ்யதேசங்களுள் ஒன்றான திருநந்திபுர் விண்ணகரத் தல வரலாற்றினை அண்மையில் அடியேன் எழுதி வெளியிட மாலவன் திருவருள் துணை நின்றது.

ஏனைய சமயங்கள் போலன்றிக் கட்டுப்பாடுகள் பல நிறைந்துள்ள வைணவ சமயத்தின் வைகானசர்/ பாஞ்சராத்திரர்/ வடகலையார்/தென்கலையார்/புராணிகர்கள்/ வரலாற்றாசிரியர்கள் எனவரும் பல்வேறு வைணவ சமயப்பிரிவினரும் மனம் கோணாத வண்ணம் இக்களஞ்சிய நூலைத் தொகுப்பதில் பல்வேறு சிக்கல்களும் சிரமங்களும் அடியேற்குத் தோன்றின என்பதே உண்மை. அவற்றின் விளைவாக இந்நூலின்கண் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில கருத்துக்கள் முரணாக அமையப்பெற்றுள்ளதாகத் தோன்றிடினும்,

'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ!'

எனும் கம்பன் கவிமொழிக்கிணங்க, சிறியேன் செய்துள்ள சிறுபிழைகளையெல்லாம் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையரான

வைணவ சமயச் சான்றோர் பெருமக்கள் பொறுத்தருளி எளியேனை ஆசீர்வதித்து அருளுமாறு அன்புடன் பணிந்துவேண்டுகின்றேன்.

என்னை உருவாக்கிய என் அன்புத்தாயார் அமரர் சிவ. கமலாம்பிகை அம்மையார் மற்றும் எழுத்துலகில் என்னை ஊக்குவித்த இனிய தந்தையார் சைவத்தமிழ்மணி வித்துவான். மா. சிவகுருநாதப் பிள்ளை ஆகியோரைப் பணிந்து போற்றுகின்றேன்.

இந்நூலை எழுதும்போது பல்வகையானும் உடனின்றுதவிக் கட்டுரைகளைப் படியெடுத்துப் பணிசெய்த தி. மலர்க்கொடி, துணைநின்ற துணைவியார். தி. இராணியம்மாள், 'சிவ சிவ' இதழாசிரியர். அன்பு மகன். தி. திருநாவுக்கரசு, பிழைதிருத்தம் செய்துதவிய முனைவர். தி. பாலசுப்பிரமணியன், சென்னை கிரிசுந்தரி சரவணன், தி. இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

வைணவ சமய பூஷணமாகத் திகழும் குடந்தை அரசு கலைக் கல்லூரி தமிழ் இணைப்பேராசிரியர் முனைவர். தி. அரங்கநாதன் அவர்கள் வைணவ சம்பிரதாயங்களில் தாம் ஆழங்காற் பட்டுள்ளமையோடு என்னையும் அச்சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமையர் ஆவார். அன்னார் இந்நூலுக்கு முன்னுரை எனத்தக்க அணிந்துரையை உவந்தளித்துள்ளார். அவர்கட்கு என் நன்றி.

என் முப்பத்து ஆறு ஆண்டுக் காலக் கல்லூரிப் பேராசிரியர் பணியில் கண்டெடுத்த முத்துமணிகள் இருவர். அவருள் சைவமுத்து கி. மணிவாசகன். வைணவமணி இரா. புருஷோத்தமன். மாணவ வைணவமணியின் அறிமுக உரை இந்நூலில் அமையப்பெற்றுள்ளது. தனிச்சிறப்புடையதாகும். அவருக்கு என் வாழ்த்துக்கள்.

இந்நூலைச் சிறப்பான முறையில் வடிவமைத்த செல்வி. க. திலகவதி, அட்டைப்படம் அமைத்துதவிய செல்வன். டி. சிவா, அச்சக உரிமையாளர். கே.எம்.செந்தில்குமார் ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

சமய உலகம் சீர்பெறும் வகையினில் சிறப்புடைய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுவரும் சென்னை வானதி பதிப்பக அதிபர் பெருந்தகை. திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கும், அன்னாரின் அன்புத்தோன்றல் சைவ நூற்பதிப்புச் செம்மல் திரு.தி. இராமநாதன் அவர்கட்கும் இறையருளால் நலம் பல பெருக வேண்டியமைகின்றேன்.

கும்பகோணம். **சிவ. திருச்சிற்றம்பலம்**

பதிப்புரை

பாரத நாட்டின் பழஞ்சிறப்புடைய மதம் இந்து மதம் ஆகும். இந்து மதத்தின் ஆறு பிரிவுகளாக ஆதிசங்கரர் காணாபத்தியம், கௌமாரம், சைவம், வைணவம், சாத்தம், சௌரம் எனும் ஆறு பிரிவுகளை அருளிச்செய்துள்ளார். இவ்வாறு பிரிவுகளின் முழு முதற் கடவுளர்கள் ஆன கணபதி, முருகன், சிவன், விஷ்ணு, சக்தி மற்றும் சூரியன் பற்றிய விரிவான புராணங்கள் தோத்திர நூல்கள் ஆகியன மிகப் பலவாக வடமொழி, தென்மொழி ஆகியவற்றில் அமைந்து காணப்படுகின்றன.

அவை அனைத்தையும் ஒருங்கே திரட்டிப் படித்து புரிந்து கொள்வது என்பது சாமன்ய மக்களுக்கு மிகவும் அரிய செயல் ஆகும். அவர்களுக்கு உதவும் வகையில் அனைத்துத் தரப்பினரும் எளிதில் படித்து புரிந்து கொள்ளவேண்டும் என்னும் உயரிய குறிக்கோளின் அடிப்படையில் விநாயகர் கலைக்களஞ்சியம் என்னும் நூலை ஆராய்ந்து எழுதி வெளியிட்ட குடந்தை அரசு கலைக் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர். முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களால் எழுதப்பெற்று எம்மால் பதிப்பித்து வெளியிடப்பெற்றுள்ள நூல்கள் வருமாறு

(1) சைவ சமயக் கலைக்களஞ்சியம் - தோத்திரமும் சாத்திரமும், (2) சிவன் திருத்தலங்கள், (3) சிவன் திருவடிவங்கள், (4) சைவத் தமிழ் இலக்கியங்கள் (அச்சில்), (5) சைவத் தொகையகராதி (அச்சில்), (6) திருமுருகன் கலைக்களஞ்சியம், முதலானவை ஆகும். அவற்றைத் தொடர்ந்து தற்பொழுது வைணவ சமயத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும் வகையிலான (8) ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம் -அவதாரங்களும் அருளிச்செயல்களும்; தொகையகராதியும் திருத்தலங்களும் என்னும் இரண்டு நூல் தொகுதிகளும் தற்போது எம்மால் பதிப்பித்து வெளியிடப்பெறுகின்றன. இந்நூல்கள் அனைத்தும் நூலாசிரியரின் அரும்பெரும் முயற்சியினை நன்கு எடுத்துக் காட்டுவன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்நூல்கள் அனைத்தையும் சமய ஈடுபாடுடைய அன்பர்கள் அனைவரும் வாங்கிப் பயின்று பயன்பெற வேண்டி ஸ்ரீ வைஷ்ண சமயக் கலைக் களஞ்சியத் தொகுதிகளை வைஷ்ணவ அடியார்கள் திருமுன்னர் பணிவுடன் சமர்ப்பிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கங்கை புத்தக நிலையத்தார்,

சென்னை.

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம்

அவதாரங்களும் அருளிச்செயல்களும்

பொருளடக்கம்

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென்மனனே!

- நம்மாழ்வார்



ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம்

அறுவகைச் சமயங்கள்

நீராரும் கடல்உடுத்த நிலவுலகின் திலகமெனத் திகழும் தமிழ்நாட்டில் வாழும் மக்களின் வாழ்வியல் சமய உணர்வுடன் பெரிதும் இணையப்பெற்றனவாகும். தமிழர்கள் வாழ்வில் ஒன்றிக்கலந்த சமயக் கடவுளர்களாக விநாயகர், முருகன், சிவன், சக்தி, சூரியன், விஷ்ணு ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். கணபதியைக் கண்கண்டக் கடவுளெனக் கருதிப் போற்றுவோர் காணாபத்தியர் எனவும், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வணங்குவோர் கௌமாரர் எனவும், சிவபெருமானைச் செழுந்தமிழ் இறைவனாகப் போற்றுபவர் சைவர் எனவும், சக்தியாம் உமையை முக்திபெற வணங்குவோர் சாக்தர் எனவும், சூரியனேச் செம்பொருள் என வாழ்த்துவோர் சௌர் எனவும், விஷ்ணுவே தன்னிகரற்ற தனிப்பெருங் கடவுள் என்று தாழ்ந்து அடிபணிவோர் வைணவர் எனவும், பெயர் சுட்டி வணங்கப்பெறுவர்.

வைஷ்ணவத் தொன்மை

உலகையும், உலக உயிர்களையும் காக்கும் கடவுளாகக் கருதப் பெறும் திருமால் பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்து தோன்றும் அற்புதக் காட்சியைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய

மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாகத்
விசும்பு மெய்யாகத் திசை கையாக
பசுங்கதிர் மதிமொடு சுடர்கண்ணாக
இயன்றவெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேதமுதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

என்ற நற்றிணை கடவுள் வாழ்த்துப் பாடல் நமக்குப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

முல்லை நிலக்கடவுள்

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் தம் தொல்காப்பியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணை நிலப்பகுதிகளுள் காடும், காடு சார்ந்த இடமும் ஆன முல்லை நில மக்களின் முழுமுதற் கடவுளாகத் திருமால் திகழ்ந்த பெற்றியினை, ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்னும் தொடரால் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளாவிய திருமால்

தமிழகம் மட்டும் இன்றி உலகளாவிய நிலையில் நாடுகள் பலவற்றில் திருமால் வழிபாடு திகழ்ந்து வந்தமையினை வரலாற்று நூல்கள் பல விரிவாக எடுத்துரைத்துள்ளன. சுமத்திராவில் உள்ள லாராயோங்ராங் என்னும் இடத்தில் அமைந்துள்ள இடிபாடுகள் நிறைந்த பழம்பெரும் கோயிலில் சிவபெருமானுடைய வலதுபுறத்தில் திருமாலும், இடதுபுறத்தில் பிரமனும் அமையப்பெற்றுள்ள சிற்பம் ஒன்று காணப்பெறுகின்றது. அதுபோல் ஜாவாத்தீவில் அமைந்துள்ள கோவில் ஒன்றில் அரியணைமீது சங்கு சக்கரத்துடன் கூடிய திருமால் வீற்றிருக்கும் கோலத்தில் அமையப் பெற்றுள்ளார். திருமால் அருகில் இலக்குமி, சத்யபாமா ஆகியோருடைய வடிவங்களும் காணப்பெறுகின்றன. இம்மரபினை ஒட்டி இருபத்திஒன்றாம் நூற்றாண்டில் உலக நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்கள் தத்தம் தகுதி நிலைமைக்கு ஏற்பத் தத்தம் பகுதிகளில் திருமால் ஆலயங்களைச் சிறப்புற அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

இவ்வாறு உலகளாவிய நிலையில் உவந்து போற்றப்பெறும் பரம புருஷோத்தமனான திருமால் அடியவர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு, மேற்கொண்ட பல்வேறு அவதாரச் சிறப்புகளையும், அத்திரு அவதாரங்களைப் புகழ்ந்து போற்றிப் பாசுரங்களாக அருளிச் செய்துள்ள பன்னிரு ஆழ்வார்களின் சிறப்பினையும், வைணவத் தத்துவ விளக்கங்களை அருளி போந்துள்ள ஆச்சாரியர்களின் அருள் சிறப்பினையும் திவ்ய தேசங்கள் தோறும் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களுடன் எழுந்து அருளிச் சேவை சாதிக்கும் சிறப்பினையும், திவ்யதேசங்கள்தோறும் சிறப்பிடம் பெற்றுள்ள தீர்த்தங்கள், விமானங்கள் மற்றும் விருட்சங்கள் பற்றிய குறிப்புகளும், திருமாலின் வடிவங்கள், வண்ணங்கள், படைக்கலன்கள், ஊர்தி மற்றும் கொடி, விரதங்கள் திருமாலிய நெறியை உணர்த்தும் நூல்களைப் படைத்துள்ள சான்றோர்கள் மற்றும் இலக்கியங்களைப் பற்றிய செய்திகளையும், பலரும் ஒருங்கே அறிந்து பயன்பெறும் வகையில் ஸ்ரீ வைணவ சமயக் கலைக் களஞ்சியம் என்னும் இந்நூலின் கண் ஒரளவு தொகுக்கப்பெறுகின்றன.

இலக்கியங்களில் திருமால்

சங்க இலக்கியங்களில் எட்டு அவதாரங்கள்

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களில், காத்தல் கடவுளாகச் சித்தரிக்கப்பெறும் திருமாலைப் பற்றித் தொல் காப்பியத்திலும், அதனை அடுத்துத் தோன்றிய சங்க இலக்கியங்களான பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை ஆகிய ஆறு எட்டுத்தொகை நூல்களிலும், முல்லைப் பாட்டு, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் முதலான நான்கு பத்துப்பாட்டு நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருமாலின் பத்து அவதாரங்களுள் கூர்மாவதாரம், வராக அவதாரம், வாமனாவதாரம், நரசிம்ம அவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலான எட்டு அவதாரச் செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன.

திருமாலின் பெயர்களாக மால், மாயோன், திருமறுமார்பன், நேமியான், திகிரியோன், செல்வன், வேதமுதல்வன், நெடியோன், வெய்யோன், முந்நீர்வண்ணன், அறிதுயிலோன், கேசவன், அச்சுதன் முதலான திருப்பெயர்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. திருமாலின் துணைவியான திருமகள் பாற்கடலில் இருந்து தோன்றியவளாகவும், திருமால் மார்பில் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளார். திருமால் நீருண்ட மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி ஆகிய ஐந்து பொருள்களையும் ஒத்த நிறத்தவனாகக் குறிப்பிடப்பெற்றுள்ளான்.

திருமால் துழாய் மாலையினை அணிந்தவன்
பாம்பணையில் பள்ளி கொண்டவன்
சங்கு சக்கரத்தை உடையவன்
மன்மதனின் தந்தை
முல்லைநிலக் கடவுள்
வேதமுதல்வன்
கருடக் கொடியோன்

திருவோண நாளிற்கு உடையோன்
ஊழிக்காலத்தில் ஆலிலையில் கிடந்தவன்
பீதாம்பர ஆடையினை அணிந்தவன்

முதலான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை நிலத்தின் கடவுளான திருமாலின் கோவில்களாகத் திருமாலிருஞ்சோலை, திருவனந்தபுரம், இருந்தையூர் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மற்றும் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் முத்தொள்ளாயிரம் ஆகிய இலக்கியங்களில் திருமால் செய்திகள் இடம்பெற்றுள்ளன. திருக்குறள், பழமொழி நானூறு, நான்மணிக் கடிகை, கார்நாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், இன்னிலை, திணைமாலை நூற்றைம்பது முதலான எட்டுகீழ் கணக்கு நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான காப்பியங்களிலும், முத்தொள்ளாயிரத்திலும் திருமாலின் திறம் பலவாறாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இவ்விலக்கியங்களில் திருமால் கடல் வண்ணன், பூ வண்ணன், மாமணிவண்ணன், அஞ்சன வண்ணன், கரியவன் என்று பல நிறம் உடைய கடவுளாகக் குறிப்பிடப்பெறுவதுடன் கோவலன், நாராயணன், நெடியோன், 'நீணி' லம் அளந்தோன் நெடுமுடி அண்ணல், அரி, துழாய்மாலையன், அரிதுயில் அமர்ந்தோன், அரவணைக்கிடந்தோன் ஆழியான், திகிரிபொருபடையான், சேவகன், விஷ்ணு, திருவமர் மார்பன் முதலான திருப்பெயர்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

திருமாலின் தேவியராகத் திருமகள், நிலமகள் ஆகியோரும், கண்ணனின் துணைவியாக நப்பின்னையும் குறிப்பிடப்பெறுகின்றனர். திருமாலின் கோயில்களாகத் திருவேங்கடமலை, திருமால் கோட்டம், திருமால் குன்றம் ஆகிய இடங்களும், திருமால் அவதாரங்களுள் கூர்மாவதாரம், வாமனாவதாரம், நரசிம்மாவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலான ஏழு அவதாரச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

பிற்காலச் சோழர்காலத்தில் தோன்றிச் சிறப்பிடம் பெற்ற மூவர் தேவாரப் பாடல்களில், திருமால் பற்றிய செய்திகள் மிக அதிக

அளவில் இடம்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தருடைய பெரும்பாலான பதிகங்கள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றுள்ள ஒன்பதாவது பாடலில் சிவன் திருவடியைக் காணத் திருமால் வராக அவதாரத்தை மேற் கொண்டு திருவடி காண இயலாது அலமந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்களிலும் சிவபெருமான் திருமாலை இடப்பகுதியில் கொண்டு தோன்றும் சங்கரநாராயண வடிவத்தைக் குறிப்பிடும் பாடல்களிலும் திருமாலின் பல்வகைச் சிறப்புகள் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. திருமாலின் அவதாரங்கள் பலவற்றுள் வராக அவதாரம், பரசுராம அவதாரம், நரசிம்ம அவதாரம், ராமா வதாரம், வாமன அவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகிய ஆறு அவதாரங்கள் பற்றிய குறிப்புகள் தேவாரத் திருமுறைகளில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சிவனது இடப்பாகம் பெற்றமை, திரிபுரம் எரித்தபோது சிவனது அம்பாக அமைந்தமை, சிவனிடம் சக்கரம் பெற்றமை, சிவனுக்கு மால்விடையாக மற்றும் மேகவாகனமாக அமைந்தமை, சிவனுடைய ஆமை ஓடாகவும், பன்றிக் கொம்பாகவும், ஆபரணமாக அமைந்தமை, தேவர்கள் அமுதுகடைய உதவியாகத் திருமால் மோகினி அவதாரத்தை மேற்கொண்டமை முதலான பல செய்திகள் தேவாரத்துள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

திருமால் சிவன் அடியாராக, சிவனை வணங்கிப் பூசித்த திருத்தலங்களாக இராமேசுவரம், திருமாற்பேறு, இராமனதீச்சரம், சிவபுரம் முதலான பல திருத்தலங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. நெடியான், திருமால், கார்வண்ணன், மேகவண்ணன், கடல்வண்ணன், மணிவண்ணன், தாமரைக்கண்ணன், அரி, மால், மாயன், கண்ணன், மாதவன், மதுசூதனன், கேசவன், கோவலன், நாரணன் முதலான பல பெயர்களால் திருமால் தேவாரப் பாடல்களில் சுட்டப் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

ஆழ்வார் அருளிச் செயல்கள்

திருமாலையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பெற்ற பாசுரங்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்யபிரபந்தப் பாசுரங்கள் திருமாலின் பல்வகை வடிவத் திறத்தினை நம்கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் காட்டுகின்றன.

திருமால் வண்ணங்கள்

ஆழ்வார்கள் திருமால் வண்ணத்திற்கு உவமையாக,

கடல்	-	கடல் வண்ணன்
நீர்	-	நீர் வண்ணன்
கார்	-	கார்வண்ணன்
முகில்	-	முகில் வண்ணன்
கமலம்	-	கமலத்து இழைபோலும் திருமேனி
காயாமலர்	-	காயாமலர் வண்ணன்
காவி	-	காவிசேர் வண்ணன்
குவளை	-	குவளை வண்ணன்
பூவை (கிளி)	-	பூவை வண்ணன்
அனல்	-	கனல் உருவன்
மணி	-	மணிக்குன்றன்
அஞ்சனம்	-	அஞ்சனவண்ணன்
கருமை	-	கோலம் கரியபிரான்
தவளம்	-	தவளவண்ணர்
நீலம்	-	நீலமேனி
பச்சை	-	பச்சை மா மலைபோல் மேனி
மணி	-	மணிவண்ணன்
வெள்ளை	-	வெள்ளியான்
பொன்	-	பொன்னப்பன்
இருள்	-	இருளார் திருமேனி
குழல்	-	குழல் நிற வண்ணன்
சங்கு	-	சங்கு வண்ணன்
ஞாயிறு	-	இளஞாயிறு எழுந்தாற் போல என்று

பல்வேறு உவமைகளின் வாயிலாகத் திருமாலின் பன்னிரு தோற்ற மாண்பினை ஆழ்வார்கள் குறித்துக் காட்டியுள்ளனர்.

திருமாலின் வடிவ உறுப்புகள்

திருமாலுடைய கேசாதிபாத வர்ணனையாகக் குழல் முகம், புருவங்கள், மூக்கு, கண், வாய், மார்பு, ஸ்ரீவத்ஸம், தோள், கை, இடை, உந்தி, கால் ஆகிய உறுப்புகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

குழல்	-	வண்டார்குழல்
முகம்	-	கதிர்மதியம் போல் முகத்தான்
புருவங்கள்	-	நீண்ட புருவங்களும்
மூக்கு	-	கோலநீள் கொடிமூக்கு
கண்	-	தாமரைக்கண்ணன்
வாய்	-	பவளவாய்
மார்பு	-	தடமார்பின்
ஸ்ரீவத்ஸம்	-	திருமருமார்பன்
தோள்	-	மல்லாண்ட திண்தோள்
கை	-	எண்கையான்
இடை	-	துடிசேர் இடை
உந்தி	-	மூவுலகம் விளைத்த உந்தி
கால்	-	குரைகழல்கள்

அணிகலன்கள்

திருமால் அணிந்துள்ள அணிகலன்களாக நீள்முடி, பொற்பூண், மயிற்பீலி, மகரக்குழை, கௌத்துவம், ஐம்படைத்தாலி, பூணாரம், முப்புரிநூல், பொன்நாண், கிண்கிணி, சிலம்பு, செறிகழல், அக்குவடம், ஆமைத்தாலி, குண்டலம், தோள்வளை, நூல் ஆரம், உதரபந்தம் முதலான அணிகல்கள் ஆழ்வார்களால் குறிப்பிடப்பெற்றுள்ளன.

திருமாலின் தேவியர்

திருமாலின் தேவியராக நீளாதேவி, பூதேவி, ஸ்ரீதேவி ஆகிய மூவரும் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இம்மூவருள் நீளாதேவி திருமங்கை ஆழ்வாரால் மட்டும் குறிப்பிடப்பெற்றுள்ளார். பூதேவியைப் பற்றிய குறிப்புகள் ஒரு சிலவாகவே அமைந்திருக்க, திருமகளைப் பற்றிய குறிப்புகள் மிக அதிகமான அளவில் பிரபந்தப் பாசுரங்களில் இடம் பெற்றுள்ளன.

கண்ணனின் தேவியான ஆயர்மகள் நப்பின்னை பற்றிய குறிப்பும் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், பொய்கை ஆழ்வார் ஆகியோரால் தரப்பெற்றுள்ளன.

மலர்மாலை

திருமால் உகந்த மலராகத் துளபம் குறிப்பிடப்பட்டுள்ளது. முடிமுதல் அடிவரை துளபம் அணிந்த மேனியராக ஆழ்வார்களால் திருமால் சுட்டப்பெற்றுள்ளார்.

படைக்கலன்கள்

திருமால் தன்னுடைய திருக்கரங்களில் ஏந்தியுள்ள படைக் கலன்களாகச் சங்கு, சக்கரம், வாள், வில், தண்டு, கலப்பை, அம்பு முதலானவை குறிப்பிடப்பெற்றுள்ளன.

சங்கு	-	வெண் சங்கே
சக்கரம்	-	சக்கரக் கையவன்
வாள்	-	உடைவாள்
வில்	-	சாரங்கபாணி
தண்டு(கதை)	-	கொடுந்தண்டு
கலப்பை	-	அலங்கெழு தடக்கை
அம்பு	-	வலங்கைவாளி.

திருமால் வாகனமும், கொடியும்

திருமாலின் வாகனமாகவும், கொடியாகவும் கருடன் குறிப்பிடப்பெற்றுள்ளான்.



கருடக்கொடி - கருடக்கொடியோனே

வாகனம் - புள்ளூர்தியான்

'அரியணை அனுமன் தாங்க'

எனும் கம்பராமாயணத் தொடர் இராமன் வாகனமாக அனுமன் திகழ்ந்ததைச் சுட்டியுள்ளது.



அஞ்சிலே ஒன்று பெற்றான்; அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறுஆக ஆருயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அன்னையைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் எம்மை அளித்துக் காப்பான்.

எனும் பாடல் அனுமனின் திறத்தைப் போற்றும் வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

பாதாதி கேச வர்ணனை

1. திருவடி

செந்தாமரை அடிகள்	நம். 2-5-1
காலில் சங்கு சக்கரம்	பெரி. 1-7-6
கிண்கிணி ஆர்ப்ப	பெரி. 1-4-1

2. உந்தி

மூவுலம் விளைத்த உந்தி	நம்.திருவா. 4
வயிறு	
திருவயிற்றில் உதர பந்தம்	அமல -4

3. இடை

துடிசேர் இடையும்	நம். 8-5-3

4. கழுத்து

தாழிக்கொழுந்தை தடங்கழுத்தில் பூண்டு	பெரி. 2-6-1

5. கை

கைத்தலங்கள்	பெரி. 1-2-12

6. எண்

எண் கையான்	மங். 1-8-5


7. நாண்

நாண்மலர் கையிற்கு	நம். 6-6-6
கரநான்குடையான்	பூத. 2-16

8. தோள்

மல்லாண்டதிண்தோள்	பெரி.பள்.1
சதுப்புயன்	பெரி.4-7-3
ஆயிரம் தோள்	மங். 5-7-4
எண் தோளன்	மங். 8-1-6
மார்பில் மரு(ஸ்ரீவத்சம்)	
மார்பணிந்தவனமாலை	ந.13-3

அருளிச்செயல்களில் திருமால் வடிவம்



கற்பனை ஓவியம் தி.மலர்க்கொடி

மார்பில் திருமழுவும்	நம். 5-5-2
ஐம்படை தாலி அழகார்	
ஐம்படையும்	பெரி.13-5
பூணாரம் பூண்டான்	பொய். 1-72
வெண்புரிஜாலனை	நம்.திரு. 79

9. மார்பு

தடங்கொள்தார்மார்பினில்	நம். 4-2-7

10. முகம்

கதிர்மதியம் போல்முகத்தான்	திரு.பா.1

11. நெற்றி

திருநெற்றியில் சுட்டி அசைதர	குல. 7-5

12. புருவம்

நீண்ட புருவங்களும்	நம். 5-5-5

13. மூக்கு

கோல நீள்கொடிமூக்கு	நம். 5-5-6

14. கண்கள்

வடிகொள் அஞ்சனம் எழுது	
செம்மலர்க்கண்	குல. 7-2

15. காது

பொழிலிமகரகாது திகழ்ந்து இகழ	பெரி 1-5-1

16. வாய்

பவளவாய்	பெரி. 1-6-1

17. குழல்

மைத்த கருங்குஞ்சு	மங்.10-4-7
முடிசேர் சென்னி	நம்.8-5-3
மயில்பீலி	
மயில்தலைபீலிசூடி	குல. 6-9

18. ஆடைகள்

அரசிலையும் பீதகசிற்றாடையொடும்	பெரி 1-7-3

19. தேவியர்

பெருநிலமங்கை மன்னர்,	
மலர்மங்கை நாதர், குலமங்கை கேள்வர்	மங். 11-4-6
படைகலங்கள்	
ஆழி சுடர் ஆழி படையானை	மங். 3-6-10

20. சங்கு

ஆனிறை இனம் மீள குறித்தசங்கம்	பெரி. 3-4-3

21. பாஞ்சசைன்யமே — ந.7-5

வலம்புரிந்த வான்சங்கம்	பேய். 3-70
இடங்கை வலம்புரி	பூத. 2-71

22. வாள்

கொற்ற ஒள்வாழி	குல. 1-8

23. வில்

சார்ங்கம் என்னும் வில்லாண்டான்	பல்லா.12

24. தண்டு

வெய்ய கதை	குல.1-8

25. கதை

வெய்யகதை	பேய். 3-36

26. கலப்பை

அலங்கெழு தடக்கை ஆயன்	மங்.2-7-8

27. அம்பு

செம்பொன் இலங்கு வலங்கைவாளி	மங்.2-8-3

28. சக்கரம்

சங்கும் வெண்சுடர் திருச்சக்கரம் ஏந்துகையான்	பெரி. 4-1-7

29. கொடி

கருடகொடி	
கருடகொடியானே	பெரி. 5-1-1

30. கருடவாகனம்

கெருடவாகனமும்	தொண்டதிரு. 10



திருமால் அவதாரங்கள்


திருமால் உறைவிடம்

ஆதிசேஷன்

திருமால் பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரமனாக ஆழ்வார்களால் குறிப்பிடப்பெற்றுள்ளான். பாம்பணை உள்ள நீர்நிலை கடல், பாற்கடல், பௌவம் முந்நீர் முதலான இடங்களில் காணப் பெறுவதாகவும் பாம்பணையில் திருமால் மேற்கொண்டுள்ள உறக்கம், கண் வளர்தல், அறிதுயில், கள்ளநித்திரை, யோக உறக்கம், துயில் ஆகிய தொடர்களால் பாசுரங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

கோயிலா ளுடையபைங் கொண்டலார் கண்துயில்
பாயலாய வாழநீ பாக்கியம் செய்ததென்
தீயலா துவமைவே றில்லெனத் தீய நின்
வாயெலாம் நஞ்சுகால் வாளெயிற் றுரகமே.

- வில்லிபாரதம்.



தேவுடைய மீனமாய் ஆமையாய்
ஏனமாய் அரியாய் குறளாய்
மூவுருவில் ராமனாய் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்

- பெரியாழ்வார்

மீனோடு ஆமை கேழல்அரி
குறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய் பின்னும் இராமனாய்த்
தாமோ தரனாய்க் கற்கியும்

ஆனான் தன்னைக் கண்ணபுரத்து
அடியன் கலியன் ஒலிசெய்த
தேனார் இன்சொல் தமிழ்மாலை
செப்பப் பாவம் நில்லாவே.

- திருமங்கையாழ்வார்

1. மச்சாவதாரம்

ஒரு கற்பத்தின் முடிவில் உலகமெல்லாம் கடலில் மூழ்கியது. இமையோர்கள் புகலிடமின்றித் திருமாலைச் சரண்அடைந்தனர். திருமால் மச்சாவதாரத்தினை மேற்கொண்டு கடலுள் புகுந்து மறைந்திருந்த சோமுகாசுரனைக் கொன்று வேதங்களை மீட்டு, பிரமனுக்கு அவற்றை அருளினன்.



கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்ட காலம்
குலவரையின் மீதோடி அண்டத் தப்பால்
எழுந்தினிது விளையாடும் ஈசன் எந்தை
இணையடிக்கீழ் இனிதிருப்பீர் இனவண்டாலும்
உழுஞ்செறுவில் மணிகொணர்ந்து கரைமேல் சிந்தி
உலகெல்லாம் சந்தனமும் அகிலும் கொள்ளச்
செழும்பொன்னி வளங்கொடுக்கும் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின் களே

- திருமங்கைமன்னன்

2. கூர்மாவதாரம்

மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது திருமால், தேவர்கள் வேண்ட, கரியநிற ஆமைவடிவேற்று அமுதம் தோன்றும் வரை அம்மலையைத் தாங்கி நின்றார்.

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கிய கை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட் கைத்தே

- சிலம்பு



வெள்ளை வேலை வெற்புநாட்டி
வெள்ளெயிற்ற நாவளாய்
அள்ளலாக் கடைந்த அன்று அருவரைக்கோர்
ஆமையாய்
உள்ள நோய்கள் தீர்மருந்து வானவர்க்
களித்துஎம்
வள்ளலாரை அன்றி மற்றோர் தெய்வம்
நான்மதிப்பனே!

- திருமழிசையாழ்வார்.

3. வராக அவதாரம்

இரணியாட்சன் என்னும் அசுரன், பூமியைக் கவர்ந்து, கடலுள் மூழ்கிச் சென்றான். அவ்வமயம் திருமால் வராக அவதாரத்தை மேற்கொண்டு தன் கொம்பினால் இரணியாட்சனைக் கொன்று நீரினுள் அமிழ்ந்த நிலத்தை மீட்டருளினார். வராகமூர்த்தி சிறப்புத்தலம் - ஸ்ரீமுஷ்ணம்.

தேவாரத்துள் இடம்பெற்றுள்ளவராக அவதாரக் குறிப்புகள்

சிவபுராணங்களில், சிவனுடைய திருவடியைக் காணத் திருமால் வராக அவதாரம் மேற்கொண்டதாகவும், பிரமன் சிவன் திருமுடியைக் காண ஹம்சமாக அவதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.



வள்ளெயிற்றுக் கேழலுமாய் வாளெயிற்றுச் சீயமுமாய்
எல்லையில்லாத் தரணியையும் அவுணனையும்
இடந்தானூர்
எல்லியம்போ திருஞ்சிறைவண் டெம்பெருமான்
குணம்பாடி
மல்லிகைவெண் சங்கூதும் மதிரைங்கம் என்பதுவே

- பெரியாழ்வார்

4. நரசிம்மாவதாரம்

பெரும் வரங்களைப் பெற்ற இரணியன், செருக்கு மிகக் கொண்டு தேவர்களுக்கும், ஸ்ரீமந் நாராயணனைக், கடவுளாக வணங்கிய பக்த பிரகலாதனுக்கும், பல துன்பங்களைத் தொடர்ந்து செய்து வந்தான். அவ்வமயம்; இறைவன் தூணிலும் இருப்பான்,

தூரும்பிலும் இருப்பான்; என்று கூற, இரணியன் தூணைக் கதையால் புடைத்தான். அதுசமயம் பிரகலாதனுக்காகப் பெருமாள் நரனும், சிங்கமும் கலந்த வடிவொடு நரசிம்மமூர்த்தியாய்த் தூணில் தோன்றி அந்தியம் பொழுதில் இரணியன் மார்பைத் தன் கூர்மையான நகங்களினால் பிளந்து அழித்தார்.

திருமால் நரசிம்ம அவதாரத் திருக்கோலத்தில் காணப்பெறும் திவ்ய தேசங்கள்

திருவாலி திருநகரி	-	ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர்
திருத்தஞ்சை	-	நரசிம்மப்பெருமாள்
திருவேளுக்கை	-	அழகியசிங்கர்
திருநீர்மலை	-	சாந்த நரசிம்மர்
திருக்கடிகை	-	யோக நரசிம்மர்
அகோபிலம்	-	நவநரசிம்மர்கள்
நாமக்கல்	-	குன்றின்மேல் நரசிம்மர்

பள்ளியில் ஓதிவந்ததன் சிறுவன்
வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளியவாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர்
பொறுப்பிலனாகி
பிள்ளையைச் சீறிவெகுண்டு தூண்புடைப்பப்
பிறையெயிற் றலைவிழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத் திருவல்லிக்
கேணி கண்டேனே

-திருமங்கையாழ்வார்.



5. வாமனாவதாரம் (திரிவிக்கிரமாவதாரம்)

தேவர்கள் வேண்டுகோளால், தேவர்களுக்குத் துன்பம் தந்த மாவலிச் சக்கரவர்த்தி செய்த பெருவேள்வியில் முப்புரி நூலும், மான்தோலும் கொண்ட மார்பினை உடைய குறுகிய வாமனனாகச் சென்று தனக்கு 3அடி மண் தருமாறு வேண்டினான். மாவலியும் அவ்வாறு தானம் செய்து கொடுத்த நீரைத் தன் உள்ளங்கையில் ஏற்றான். நீர் ஏற்றரர். மாவலியிடம் தானம் பெற்ற நிலையில் நில உலகம் திருவடியாக, வாயுமண்டலம் திருமேனியாக, திசைகள் எட்டும்

தோள்களாக, அண்டமுகடு திருமுடியாக, திருமால் பேருருவம் கொண்டு, தன் ஓர் அடியால் நில உலகையும், மற்றொரு அடியால், விசும்பையும் அளந்து எஞ்சிய அடியை மாவலியின் தலைமீது வைத்து அவனைப் பாதாளத்தில் அழுத்திச் சிறை வைத்தார்.



ஈரொரு பிறப்பின் ஒருசிறு குறளாய்
யாவரும் தேவரும் வியப்பக்
காரொரு வடிவு கொண்டெனச் சென்று
காவல்கூர் மாவலி அளித்த
நீரொரு கரத்தில் வீழுமுன் தரங்க
நீல்நிற மகரநீர் உடுத்த
பாரொரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாதனார் நமக்கே

- வில்லிபாரதம்

6. பரசுராம அவதாரம்

உலகில் தோன்றிய அரசவம்சத்தினர் முறைதவறி நடந்த பொழுது அவர்களை நாசம்செய்ய ஜமதக்கினி முனிவர் - ரேணுகை ஆகியோருக்கு மகனாய்த் தோன்றி மழுப்படையை ஏந்திய திருமால் வடிவம் பரசுராமர் வடிவம் ஆகும். தனது தந்தையின் உடைமையாய் இருந்த காமதேனுவைக் கவர்ந்த கார்த்தவீரி யார்ச்சுனனுடைய கைகளையும், சிரத்தையும் தன் மழுவினால் அழித்தார். அதுமுதல் இருபத்தோரு தலைமுறை அளவும் அரசரின் குலங்களை மழுவினால் துணித்து வந்தார்.



நஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார் தவநெறியைத்
தரியாது
கஞ்சனைக் கொன் றன்றுலகம் உண்டுமிழ்ந்த
கற்பகத்தை
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன் விசையுருவை
அசைவித்த
சுஞ்சிறைப் புட்பாகனையான் கண்டது தென் அரங்கத்தே.

- திருமங்கையாழ்வார்

7. ராமாவதாரம்

இதிகாசச் செய்திகள்

இருபெரும் இதிகாசங்களுள் இராமாவதார ஆழ்வார்கள் விசுவாமித்திரருடைய வேள்வியைக் காக்க வேண்டி தாடகையைக் கொன்று அரக்கர்களின் உயிர் உண்ட செய்தியினையும், சீதையின் பொருட்டு ஜனகரின் வில்லை முறித்தமை, பரசுராமனின் வலிமையை அடக்கியமை, கூனி, கைகேயி சூழ்ச்சியினால் பரதனுக்குப் பாதுகையினை அளித்து தம்பி, மனைவியுடன் கானகம் செய்தமை, குகனுடன் நட்பு பூண்டமை, நாகாசுரனின் கண்ணை அறுத்தமை, விராதனை கொன்றமை, அகத்தியனிடம் வில் பெற்றமை, சூர்ப்பனங்கையின் மூக்கு அரிந்தமை, கரதூடணனைக் கொன்றமை, மாயமாரீசனையும், கவந்தனையும் வதைத்தமை, சுக்கரீவனுடன் நட்புபூண்டு ஏழு மராமரங்களை துளைத்து வாலியை வதம் செய்து சுக்ரீவனை அரசனாக்கி அனுமனை இலங்கைக்குத் தூது அனுப்பி இலங்கைக்கு அணைகட்டி விபீடணனுக்கு அடைக்கலம் அளித்து 'இந்திரஜித், இராவணன், கும்பகர்ணன்' ஆகியோரை வதைத்துச் சீதையை மீட்டமை ஆகிய செய்திகள் ஆழ்வார்களால் விரிவாக எடுத்து உரைக்கப் பெற்றுள்ளன.

ராமாவதார நிகழ்வுகளாகத் தமிழ் இலக்கியங்கள்

கூனியின் முதுகில் உண்டை தெறித்தல்

மாமுனி வேள்வி காத்தல்

அகலிகையின் சாபநீக்கம்

வில்லை முறித்துச் சீதையை மணத்தல்

பரசுராமனது தவத்தை வாங்குதல்

ராமன் வனத்துள் ஏகுதல்

குகனோடு தோழமை கொள்ளுதல்

பரதனுக்குக் கூறிய உறுதிமொழி

காகத்தின் கண்ணைப் போக்குதல்

பஞ்சவடி வாசம்

சூர்ப்பனகையின் செவியையும், மூக்கையும் அரிதல்

கரன், தூடணன், திரிசிரன் முதலானவரை அழித்தல்

மாய மானின் மாயையும் இராமன் பிராட்டியைப் பிரிதலும்

கவந்தனது தோள்களைத் துணித்தல்
சடாயுவுக்கு வைகுந்தம் அருளல்
சவரியின் கனி விருந்து
சுக்கிரீவனோடு தோழமை
சீதையை வானரவீரர் தேடவிட்டமை
கடலை நோக்கித் தவம் செய்தலும், அம்பு எய்து கடலைச் சுடுதலும்
அணைகட்டுதல்
இராம - இராவணயுத்தம்
அனுமன் மருத்துமலையைக் கொணர்ந்தது
வீடணனுக்கு முடிசூட்டுதல்
அயோத்தியில் வாழ்ந்த உயிர்களை வைகுந்தத்து ஏற்றுதல்

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் அருளிச் செய்த பாசுரப்படி ஸ்ரீராமாயண பாலகாண்டம்

''திடமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ
நலம் அந்தம் இல்லதோர் நாட்டில்
அந்தம் இல் பேரின்பத்து அடியரோடு
ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வறும் அமரர்கள் அதிபதியான
அணியார் பொழில் சூழ் அரங்க நகரப்பன்
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய்போல்
ஆவார் ஆர்துணை என்று துளங்கும்
நல் அமரர் துயர்தீர
வல்ல ரக்கர் இலங்கை பாழ்படுப்பற்கு எண்ணி
மண்உய்ய மண்உலகில் மனிசர் உய்ய
அயோத்தி என்னும் அணிநகரத்து
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர்விளக்காய்க்
கௌசலைதன் குல மதலையாய்த்
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக்
குணம் திகழ் கொண்டலாய்
மந்திரம் கொள் மறைமுனிவன் வேள்விகாக்க நடந்து

வந்து எதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வல்அரக்கர் உயிர்உண்டு கல்லைப் பெண்ணாக்கிக்
காரார்திண் சிலை இறுத்து
மைதிலியை மணம் புணர்ந்து
இருபத்தொருகால் அரசு களைகட்ட
மழுவாளேந்தி வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு
அவன் தவத்தை முற்றும் செற்று,
அம்பொன்நெடு மணிமாட அயோத்திஎய்தி
அரயணைமேல் மன்னன் ஆவான் நிற்க

அயோத்தியா காண்டம்

கொங்கைவன் கூனி சொற்கொண்டு
கொடிய கைகேயி வரம்வேண்ட
கொடியவள் வாயக் கடிய சொற்கேட்டு
மலக்கியமா மனத்தினனாய் மன்னவனும் மறாது ஒழிய
குலக்குமரா! காடுறையப்போ என்று விடை கொடுப்ப
இருநிலத்தை வேண்டாது.
ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து
மைவாய களிறொழிந்து மா ஒழிந்து தேர் ஒழிந்து
கலன் அணியாதே காமர் எழில் விழல் உடுத்து
அங்கங்கள் அழகுமாறி
மான் அமரும் மெல்நோக்கி வைதேகி இன்துணையா
இளங்கோவும், வாளும் வில்லும் கொண்டுபின் செல்லக்
கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் நடந்து போய்ப்
பக்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து
வனம் போய்ப்புக்குக் காயோடுநீடு கனிஉண்டு
வியன்கானகானகம் மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயின்று
சித்திரக் கூடத்து இருப்ப, தயரதன் தான்
'நின் மகன் மேல் பழிவிளைத்திட்டு

என்னையும் நீள் வானில் போக்க
என்பெற்றாய் கைகேசீ!
நானும் வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்''
என்று வான் ஏறத்
தேன் அமரும் பொழில்சாரல் சித்திரக்கூடத்து
ஆனை புரவி தேரொடு காலாள்
அணிகொண்ட சேனை சுமந்திரன்
வசிட்டருடன் பரதநம்பி பணியத்
தம்பிக்கு மரவடியை வான்பணையம் வைத்துக் குவலயமும்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி விடைகொடுத்துத்
திருவுடை திசைக்கருமம் திருந்தப்போய்த்
தண்டகாரண்யம் புகுந்து

ஆரண்ய காண்டம்

தயங்குமறை முனிவர்க்கு
'அஞ்சேன்மின்! என்று அருள் கொடுத்திட்டு
வெங்கண் விறல் விராதன் உக வில்குனித்து
வண் தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி,
புலர்ந்து எழுந்த காமத்தால்
சுடுசினத்துச் சூர்ப்பனகா
பொன்னிறம் கொண்ட
சீதைக்கு நேராவன் என்று வரக்
கொடிமூக்கும் காது இரண்டும்
கூரார்ந்த வாளால் ஈராவிடுத்துக்
கரனொடு தூடணன் தன் உயிரை வாங்க
அவள் கதறித் தலையில் அங்கை வைத்து
மலை இலங்கை ஓடிப்புக,
கொடுமையில் கடுவிசை அரக்கன்
அலைமலி வேற்கண்ணாளை அகல்விப்பான்
ஓர் உருவு ஆய மானை அமைத்து, சிற்றெயிற்று,
முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து

இலைக்குரம்பையில் தனி இருப்பில்
கனிவாய்த் திருவினைப் பிரித்து
நீள்கடல் சூழ் இலங்கையில்
அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோந்து
வம்புலாம் கடிகாவில் சிறையாவைக்க
அயோத்தியர் கோன் மாயமான் மாயச்செற்று
அலைமலிவேற் கண்ணாளை அகன்று தளர்வெய்தி
சடாயுவை வைகுந்தத்து ஏற்றிக்
கங்குலும், பகலும் கண்துயில் இன்றிக்
கானகப்படி உலாவி உலாவிக்
கணை ஒன்றினால் கவந்தனை மடித்துச்
சவரிதந்த கனி உவந்து,

கிஷ்கிந்தா காண்டம்

வனமருவு கவி அரசன் தன்னொடு காதல்கொண்டு
மராமரங்கள் ஏழும் எய்து
உருத்து எழுவாலி மார்பில்
ஒருகணை உருவஒட்டி
கருத்துடைத் தம்பிக்கு
இன்பக் கதிர்முடி அரசு அளித்து
வானரக்கோன் உடன் இருந்து வைதேகி தனைத்தேட
விடுத்த திசைக் கருமம் திருத்தித்
திறல்விளங்கு மாருதியும்
மாயோன் தூது உரைத்தல் செய்ய

சுந்தர காண்டம்

சீராரும் திறல் அநுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதிள் நீள் இலங்கை புக்குக் கடிகாவில்,
வாராரும் முலைமடவாள் வைதேகி தனைக்கண்டு
'நின் அடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!
அயோத்தி தன்னில் ஓர்,
இடவகையில் எல்லி அம்போது இனிது இருக்க

மல்லிகை மாமாலை கொண்டு அங்கு ஆர்த்ததுவும்
கலக்கியமா மனத்தினளாய்க் கைகேயி வரம் வேண்ட
மலக்கியமா மனத்தினனாய் மன்னவனும் மறாதொழியக்
'குலக்குமரா! காடு உறையப்போ' என்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடு அங்கு ஏகியதும்
கங்கை தன்னில்
கூர் அணிந்த வேல்வலவன் குகனோடு
சீர்அணிந்த தோழமை கொண்டதுவும்;
சித்திரக்கூடத்து இருப்பப் பரதநம்பி பணிந்ததுவும்;
சிறுகாக்கை முலைதீண்ட அனைத்துலகும் திரிந்து ஓடி
'வித்தகனே! ராமவோ! நின் அபயம்!' என்ன
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும்;
பொன் ஒத்த மான் ஒன்று புகுந்து இனிது விளையாட
நின் அன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரான் ஏகப்
பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்
'அயோத்தியர் கோன் உரைத்த அடையாளம்;
ஈது அவன் கை மோதிரம்' என்று
அடையாளம் தெரிந்து உரைக்க
மலர்க்குழலாள் சீதையும்
வில் இறுத்தான் மோதிரம்கண்டு
அநுமான் அடையாளம் ஒக்கும் என்று
உச்சிமேல் வைத்து உகக்க,
திறல் விளங்கு மாருதியும்
இலங்கையர்கோன் மாக்கடிகாவை இறுத்துக்
காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர் கோன் சினம் அழித்து, மீண்டு, அன்பினால்
அயோத்தியர்கோன், தளிர்புரையும் அடிஇணை பணிய;

யுத்த காண்டம்

கான எண்கும் குரங்கும் முசுவும்
படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று
அலையார் கடற்கரை வீற்றிருந்து

செல்வ வீடணற்கு நல்லவனாய்
விரிநீர் இலங்கை அருளிச்
சரண்புக குரைகடலை அடலம்பால் மறுக எய்து,
கொல்லை விலங்கு பணிசெய்ய
மலையதனால் அணைகட்டி மறுகரையை ஏறி
இலங்கை பொடிப்பொடியாகச்
சிலை மலி செஞ்சரங்கள் செல வுய்த்துக்
கும்பனொடு நிகும்பனும்பட
இந்திரசித் தழியக் கும்பகர்ணன்பட
அரக்கர் ஆவி மாள, அரக்கர்
கூத்தர் போலக் குழமணி தூரம் ஆட,
இலங்கை மன்னன் முடி ஒருபதும்
தோள்இரு பதும் போய் உதிரச்
சிலைவளைத்துச் சரமழை பொழிந்து
வென்றிகொண்ட செருக்களத்துக்
கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்
எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்
மற்றமுள்ள வானவர் மலர்மழைபொழிந்து
மணிமுடி பணிதர அடியிணை வணங்கக்
கோலத்திருமாமகளொடு
செல்வ வீடணன் வானரக் கோனுடன்
இலகுமணி நெடுந்தேர் ஏறிச்
சீரணிந்த குகனோடு கூடி
அரங்கண் நெடு மதிள்புடைசூழ் அயோத்தி எய்தி
நன்னீராடிப்
பொங்கிள ஆடை அரையில் சாத்தித்
திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கலன் அணிந்து
சூட்டுநன் மாலைகள் அணிந்து
பரதனும் தம்பி சத்ருக் கனனும்
இலக்குமணனோடு இரவும் நண்பகலும்

வடிவினை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்காதனத்திலிருந்து ஏழுலகும்
தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்.''

திருமால் இராமவதாரக் கோலத்தில் காணப்பெறும் திவ்யதேசங்கள்

திரு அயோத்தி	-	இராமன்
திருப்புல்லாணி	-	சக்கரவர்த்தித் திருமகன்
புள்ளம்பூதங்குடி	-	வல்வில்ராமன்
திருப்புட்குழி	-	விஜயராகவப் பெருமாள்
திருநீர்மலை (மலையடிவாரம்)	-	சக்கரவர்த்தித் திருமகன்
நைமிசாரண்யம் (சங்கதீர்த்தக்கரை)	-	ராமன்
திருப்பதி	-	வெங்கட்ராகவன், வேங்கடராமன்

ராமன் தனக்கு உண்டான பிரமகத்தி தோஷம் நீங்க நான்கு நாட்கள் தங்கியிருந்து தங்கத்தினாலான பசு ஒன்றினை அந்தணர்க்கு தானம் செய்த இடம் திருநாங்கூர்.



மல்கொண்டு வகுத்தனைய சிகரத்திண்டோள்
வாளரக்கன் குலத்தோடும் மடியமுன்னம்
வில்கொண்டு சரம்தொடுத்துப் புரையில்கேள்வி
விண்ணவர்தம் துயர்தீர்த்த வீர ராமன்
கல்கொண்ட அகலியைதன் உருவம்மீளக்
கவின்கொள்ளக் கொடுத்ததிருக் கமலபாதம்
சொல்கொண்டு துதித்தெழுந்து துள்ளிநாளும்
தொழும்அவரே எழுபிறவித் துவக்கற்றாரே.

- வில்லிபாரதம்

8.பலராம அவதாரம்

இராமாவதாரத்தின் பின் திருமால், ரோகிணியின் வயிற்றில் கண்ணனுக்கு மூத்தோனாகப் பிறந்தான். தனது கட்டளைக்குப் பணியாமல் சென்ற யமுனா நதியைத் தன் கலப்பை ஆயுதத்தினால் நிறுத்திப் பின் யமுனாதேவி வேண்ட அதன் போக்கிலேயே செல்ல

விட்டார். கிருஷ்ண குமாரரான, சாம்பனைத் துரியோதனன் சிறை வைத்தபொழுது, அவனை மீட்பதற்காகத் தன் கலப்பையை அஸ்தினா புர மதிலில் மாட்டி இழுக்க நகரமே அசைந்து சாயத்தொடங்கியது. கௌரவர்கள் நடுங்கிச் சாம்பனை விடுவித்தனர்.



சுளைகொண்ட பலங்கனிகள் தேன்பாய கதலிகளின்
திளைகொண்ட பழங்கெழுமு திகழ்சோலைத் திருநறையூர்
வளை கொண்ட வண்ணத்தன் பின்தோன்றல் மூவுலகோடு
அளைவெண்ணெய் உண்டான்தன் அடியிணையே
அடைநெஞ்சே

- திருமங்கையாழ்வார்.

௯. கிருஷ்ணாவதாரம்

திருமால் கிருஷ்ணாவதார கோலத்தில் காணப்பெறும் திவ்யதேசங்கள்

திருவடமதுரை	-	பாலகிருஷ்ணன்
ஆய்ப்பாடி	-	நவமோகனகிருஷ்ணன்
துவாரகை	-	துவரகா நாத்ஜி
திருக்காவளம்பாடி	-	கோபாலகிருஷ்ணன்
திருஅரிமேயவிண்ணகரம்	-	குடமாடுக்கூத்தன்
திருப்பார்த்தன்பள்ளி	-	பார்த்தசாரதி
திருப்பாடகம்	-	பாண்டவதூதர்
திருப்பதி	-	வேங்கடகிருஷ்ணன்
தொலைவில்லி மங்கலம்	-	செந்தாமரைக்கண்ணன்
திருக்குளந்தை	-	மாயக்கூத்தன்

மகாபாரதச் செய்திகள்

கிருஷ்ணாவதாரத்தின் திறம்கூறும் கதைக்கூறுகளாக

கண்ணனின் பிறப்பு
ஆயர்பாடியில் வளர்ந்தமை
பூதனையை கொன்றமை
சகடம் உதைத்தமை
மண், வெண்ணெய் உண்டமை
மருதிடை தவழ்தமை
ஆநிரை மேய்த்தமை

காளிகாநர்த்தனம் புரிந்தமை
அக்ரூரருக்குக் காட்சி அளித்தமை.
குசேலருக்கு செல்வம் தந்தமை.
தேனுகாசுரன் / அரிஷ்டாசுரன்
ஆகியோரைக் கொன்றமை.
நப்பின்னைக்காக ஏறுவை அடர்த்தமை
கேசியின் வாய் கீண்டியமை
கொக்கின் வாயை கிழித்தமை
கன்றினால் விளவெறிந்தமை
குருந்தமரம் உசித்தமை
குன்றெடுத்து ஆநிரை காத்தமை
குரவைக்கூத்து ஆடியமை
கம்சனைக் கொன்றமை
சிசுபாலனைக் கொன்றமை
பாண்டவர்க்காக தூது சென்றமை
பார்த்தனுக்குத் தேர் ஓட்டியமை
பகவதக்கீதை அருளியமை

முதலான பல்வகைச் செய்திகள் ஆழ்வார்களால் விதந்துரைக்கப் பட்டுள்ளன.

வானவர் துயர் தீரவும், மனிதர்கள் உய்யவும், வடமதுரையில் வசுதேவர், தேவகி மைந்தனாய்த் திருவோண நாளில் திருமால் கிருஷ்ணா வதாரத்தினை மேற்கொண்டு மண்ணுலகில் அவதரித்தார். கிருஷ்ணா வதாரத்தில் திருமால் மேற்கொண்ட பல்வேறு அருளிச் செய்திகளை ஆழ்வார் பாசுரங்கள் மற்றும் வில்லிபாரதம் முதலான பல்வேறு தமிழ் இலக்கியங்கள் விரிவாக எடுத்துக் கூறியுள்ளன. அவை வருமாறு.

திவ்யதேசப் பெயர்களிலே கண்ணன் பெயர் அமைந்துள்ள தேசங்கள்

திருக்கண்ணமங்கை,
திருக்கண்ணபுரம்,
திருக்கண்ணங்குடி

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய
வஞ்சக் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு
போதர உண்ட புயல்வண்ணா
மாதவ யாதவ வாசவ கேசவ
மாயா ஆயா மதுசூதா
ஆதியும் அந்தமும் ஆகிய நின்புகழ்
அல்லா துரையேன் அடியேனே.



- வில்லிபாரதம்

10. கல்கி அவதாரம்

உலகில் தருமம் தவறி, பொறுமை அழிந்து, உண்மை ஒழிந்து, அன்பும், அருளும் கலங்கி, பூசனைகள் சிதைவுற்று, பாவங்களே வெற்றிபெறும் இக்கலியுக முடிவில் இவ்வையத்தினைக் காக்கக் குதிரைமீது அமர்ந்து கல்கி வடிவில் திருமால் அவதாரம் செய்வார்.



உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்த
விளையாட வல்லானை வரைமீ கானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையம்காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டு கொண்டேன்
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

- திருமங்கையாழ்வார்

திருமால் தசாவதார நோக்கங்கள்

விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களுக்கும் ஒவ்வொரு நோக்கமுண்டு

மச்ச அவதாரம்	-	நான்கு வேதங்களைக் காத்தமை.
கூர்ம அவதாரம்	-	தேவர்கள் அமுதம் பெற உதவியது. மலையைத் தாங்கியமை.
வராக அவதாரம்	-	இரணியாட்சனிடமிருந்து பூமியைக் காத்தமை.
நரசிம்ம அவதாரம்	-	எல்லாவற்றிலும் தான் இருப்பதை உணர்த்தியமை.
வாமன அவதாரம்	-	மகாபலி ஆணவம் அழித்தது. பூமியை அளந்தமை
பரசுராம அவதாரம்	-	நீதி மறந்த மன்னர்களை ஒழித்தமை.
ராம அவதாரம்	-	தந்தை சொல்லை நிலை நாட்டியமை.
பலராம அவதாரம்	-	அண்ணனின் கடமையைச் செய்தமை.
கிருஷ்ண அவதாரம்	-	பூபாரம் தீர்த்துப் பசுக்களைக் காத்தமை.
கல்கி அவதாரம்	-	பாவம் பெருகும்போது எடுக்க இருப்பது.

முதல் ஏழு மன்வந்தரங்களில் விஷ்ணுவின் அவதாரங்கள்

மன்வந்தரம்	*தாயார்*	*அவதாரம்*	*தேவகணங்கள்*
ஸ்வாயம்புய	ஆகூதி தேவி	யஞ்ஞன்	-
ஸ்வாரோசிஷ	துஷிதாதேவி	அஜிதர்	துஷிதர்
உத்தம	சத்யாதேவி	சத்யன்	சத்யர்கள்
தாமஸ	ஹர்யா தேவி	ஹரி	ஹரி
ரைவத	சம்பூதி	மானசன்	ரைவதர்கள்
சாட்சுச	விகுண்டா	வைகுண்டன்	வைகுண்டர்கள்
வைவஸ்த	அதிதி	வாமனர்	-

திருமாலின் முப்பத்தாறு அவதாரங்கள்

1) பத்மநாபர்
2 துருவன்
3) அநந்தன்
4) சாக்தயாத்மா
5) மதுசூதனன்
6) கபிலன்
7) விசுவரூபன்
8) விஹாங்கமன்
9) பாதலவக்தரன்
10) தர்மன்
11) வாகீஸ்வரன்
12) ஏகாம்போநிதிசாயி
13) கமடேஸ்வரர்
14) வராகர்
15) நரசிம்மர்
16) பியூஷஹரணர்
17) ஸ்ரீபதி
18) காண்டாத்மா
19) ராகுஜித்
20) காலநேமிக்கா
21) பாரிஜாத ஹரா
22) லோகநாபா
23) சாந்தாத்மா
24) தத்தாத்ரேயர்
25) நியக்ரோதசாயி
26) ஏகருங்கதாணு
27) திரிவிக்கிரமன்
28) நரன்
29) நாராயணன்
30) ஹரி
31) கிருஷ்ணன்
32) பரசுராமன்
33) இராமன்
34) வேதவித்
35) கல்கி
36) பாதாள சாயிதர்

- யதீந்திர மயதீபிகை

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி!
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி!
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி!
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி!
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம்! இரங்கேலோர் எம்பாவாய். - ஆண்டாள்

திருமாலின் அருளாடல்கள்

ஹம்ஸாவதாரம்

மண்ணையும், விண்ணையும் இருள் மூடியபோது தேவர்கள் வேண்ட, திருமால் அன்னமாகி வேதங்களைப் பிரமனுக்கு எடுத்துரைத்தார்.

வேத வியாசர் அவதாரம்

பாரத யுத்தத்தில் மடிந்த மன்னர்களைத் திருதராஷ்டனுக்கு மீண்டும் காட்டுவதற்காகப் பராசரமுனிவனின் மகனாய், வேத வியாசராகத் திருமால் தோன்றினார்.

உபேந்திரன் அவதாரம்

காசிப முனிவரின் மனைவியான அதிதியின் வயிற்றில் இந்திரன் தம்பியாகப் பிறந்து உபேந்திரன் எனப் பெயர்கொண்டு இந்திரன் உடன் இருந்து அவன் துயர் களைந்து அருளினான்.

அருளாடல்கள்

மேலும் திருமால் அருளிச் செயல்களாக மார்க்கண்டேயனுக்குப் பிரளயத்தில் அழிந்துபோன அண்டசராசரங்களைத் தம் திருவயிற்றில் காட்டியருளியமை.

— உந்திமேல் நான்முகனைப் படைத்து உலகையும் உயிரையும் மீண்டும் படைத்தமை.

— தேவர்களைத் துன்புறுத்திய மது - கைடபர்களைக் கோபித்து அழித்தமை.

— மாவலி செய்த தானத்தைத் தடுக்கமுயன்ற சுக்கிரனின் கண்களைச் சிதைத்தமை.

— ஆதிமூலமே என்று அழைத்த கஜேந்திரனுக்கு முக்தி அளித்தமை.

— தன் அருள்பெற்ற துருவனுக்கு எல்லா நட்சத்திரங்களுக்கும் முனிவர்களுக்கும் மேலான பதவியைத் தந்தமை.

— சிவபிரானது அவதாரமாகிய சரபத்தின் செருக்கை அழித்தமை.

— சிவபெருமான் கையில் பற்றிக் கொண்ட கபால ஓட்டினை அகற்றியமை.

— திருக்கோவலூரில் முதல் ஆழ்வார்கள் மூவரிடையே தோன்றி அருளியமை.

— ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை உவந்து ஏற்றுக்கொண்டமை

— தொண்டைமான் தவத்திற்கு இரங்கி தன் சங்கு சக்கரங்களைக் கொடுத்து அவன் பகைவர்களை வெல்லச் செய்தமை.

கஜேந்திர வரதன் - ஆனைக்கு அன்று அருளை ஈந்தவன்.

ஆல் இலையில் துயிலுதல் - ஆலிலை பள்ளிக்கொண்டவன்.

மன்மதன் தந்தை - காமனைப் பயந்தான்.

காலனைப் படைத்தமை - காலனையும் உடனே படைத்தாய்.

திரிபுரம் எரித்த அம்பானமை - அழல் நிற அம்பது ஆனவனே

மார்க்கண்டேயருக்கு அருளியமை

மது கைடபர்களைக் கொன்றமை ஆகியவற்றுடன் திருமாலுடைய விஸ்வரூப வடிவினை,

பவ்வ நீர் உடை ஆடையாகச் சுற்றிப் பார் அகலம் திரு வடியாப் பவனம் மெய்யா செவ்வி மாதிரம் எட்டும் தோளா அண்டம் திருமுடியா நின்றான் என்று திருமங்கையாழ்வார் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

திருமாலின் பத்து அவதாரங்களில்
ஐந்து திருஅவதாரங்களின் பெற்றோர்களாகும்
பேறுபெற்ற புண்ணியர்கள்

1. பரசுராம அவதாரம்	-	ஜமதக்னி	-	ரேணுகை
2. பலராம அவதாரம்	-	வசுதேவர்	-	உரோகிணி
3. கிருஷ்ணாவதாரம்	-	வசுதேவர்	-	தேவகி
4. இராமாவதாரம்	-	தசரதர்	-	கோசலை
5. கல்வி அவதாரம்	-	விஷ்ணு எச்சன்	-	சுமதி

வேறு சில அவதாரங்கள்

பிரம ருத்ரசிருஷ்டிகர்த்தா

திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீது யோகநித்திரை புரிந்து தமது திருநாவில் உலக உற்பத்தியின் பொருட்டுப் பிரமதேவனைப் படைத்து உலக சங்காரகாரணனான உருத்தினனைப் பிரமனுடைய நெற்றியில் இருந்து படைத்தளித்தவர்.

அயக்கிரீவ அவதாரம்

தத்தாத்ரேயர் முதலான முனிவர்களுக்குத் தத்துவ உபதேசம் செய்வதற்காகத் திருமால் மேற்கொண்ட அவதாரம் அயக்கிரீவ அவதாரம்.

கபில அவதாரம்

கபிலராய் அவதரித்துத் தேவஊதி என்பாருக்கு யோக நிலையினை உபதேசித்து அருளினார்.

புத்தர் அவதாரம்

புத்தராக அவதரித்து நாரதமுனிவரை மாணாக்கராய்க் கொண்டு திரிபுராதியர்களுக்குப் புத்தமதத்தைப் போதித்து அருளினார்.

அஜவதாரம்

ஒரு கற்பத்தில் பிரமதேவனுக்கு அஜன் என்கின்ற குமரனாய் அவதரித்தார்.

உபேந்திர அவதாரம்

இந்திரனைக் காப்பாற்றுவதற்காக அதீதியிடம் உபேந்திரராய் அவதாரம் செய்தருளினார்.

தத்தாத்ரேயர் அவதாரம்

அத்திரி முனிவர்க்கும், அனுசூயைக்கும் தத்தாத்ரேயர் என்னும் மகனாய்ப் பிறந்து கார்த்தவீரியன் முதலானோருக்கு அருள்புரிந்தார்.

வியாச அவதாரம்

சத்யவதிக்கும், பராசரனுக்கும் வியாசர் என்னும் மகனாய்ப் பிறந்து வேதங்களை நிலை நிறுத்தியவர்.

வடுக நம்பி வடிவம்

ஸ்ரீராமானுஜருக்குத் திருமால், அவர்களுடைய சீடன் வடுகநம்பி வடிவில் தோன்றிப் பணிவிடைசெய்து மறைந்த திருத்தலம் திருக்குறுங்குடி ஆகும்.

ருசப அவதாரம்

நாபிமகாராஜாவுக்கும், மேருதேவிக்கும் ருசபனாகப் பிறந்து அருள்செய்தவர்.

ராமபத்திர அவதாரம்

காசியில் தவம் செய்த ருத்திரனுக்கு ராமபத்திரராய்க் காட்சி தந்து ராம என்னும் தாரகமந்திரத்தை உபதேசித்து அருளியவர்.

பிரமசிருஷ்டி அவதாரம்

கற்பங்கள் தோறும் பிரமதேவனைத் தமது கண், வாக்கு, காது, மூக்கு, அண்டம், நாவி ஆகியவற்றினின்று படைத்து அருளியவர்.

ருத்ர ரட்சக மூர்த்தி

விருகாசுரனுக்குப் பயந்து ஓடிய உருத்திரனைக் காப்பாற்றி அருளியவர்.

சூதமுனி அவதாரம்

பிருதுவின் வேள்விச் சாலையில் சூதமுனிவராகச் சென்றவர்.

ரிஷபாவதாரம்

சிவபெருமான் திரிபுராதியர்களை வெல்வதற்கு உதவியாக ரிஷபவடிவம் கொண்டு தாங்கி நின்றவர்.

அதோகச்ய அவதாரம்

ஒரு கற்பத்தில் அயன்குதத்தில் உதித்து அதோகச்சன் என்ற பெயரை அடைந்தவர்.

ஒட்டக வடிவம்

சிவபெருமான் முன் இறுமாப்புடன் சென்றமையால் ஒட்டக உருவினைக் கொண்டவர்.

நெசவாளர்

கபீர்தாசர் பொருட்டு ஆடைநெய்பவர் வடிவில் இறைவன் தோன்றினார்.



பார்த்தசாரதி

மஹாபாரதத்தில் அர்ச்சுனனுக்கு இடர் வராமல் காக்கப் பார்த்த சாரதியாகத் தேரை ஓட்டிஅருளியவர்.

சங்குசக்ரதாரி வடிவம்



ஸ்ரீமகாபக்த விஜயத்தில் இடம்பெற்றுள்ள வைணவ தாசர்களுக்கு அருள்புரிய வேண்டி மாயவன் ஸ்ரீகுணவதிபாய், ஸ்ரீசாந்தோபா, ஸ்ரீகூபாகும்பார், ஸ்ரீதனாசடர், ஸ்ரீஹரி அனந்த வைஷ்ணவர், ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி, ஸ்ரீராககும்பார், ஸ்ரீசோகாமேளர், ஸ்ரீபுண்டரீகர் ஆகியோருக்குச் சங்குசக்ரதாரியாகத் திருமால் கொண்டு காட்சிஅளித்தார்.

அந்தணர் வடிவம்

ஸ்ரீபக்தவிஜயத்தில், ஸ்ரீ கூர்மதாஸர், ஸ்ரீ சிளாபாய், ஸ்ரீ கோமாபாய் ஆகியோருக்கு அந்தணர் வடிவில் எழுந்தருளிக் காட்சிதந்து அருளினார்.

புலிவடிவம்

ஸ்ரீசுகானந்தர், ஸ்ரீஜகன்மித்திரர் இவர்களுக்குப் புலி வடிவில் தோன்றி அருளினார்.

கருடவாகனம்

ஸ்ரீ ஓஹ்ருசாவ்கார், ஸ்ரீசூரதாசர், ஸ்ரீஏகநாதர் ஆகியோருக்குக் கருடவாகனராகத் தோன்றினார்.

தொட்டாச்சாரியார் என்னும் பக்தருக்காக சோளிங்கர் திருத்தலத்தில் தத்தான் குளக்கரையில் கட்சிப்பெருமான் கருட வாகனராகக் காட்சித் தந்தார்.

கோதண்டராமர்

ஸ்ரீதரபண்டிதர், ஸ்ரீ ராமானுஜர் ஆகியோருக்குக் கோதண்ட ராமராகக் காட்சி தந்தார்.

கனவில் பெருமாள்

ஸ்ரீ சஜ்ஜயசாருகர், ஸ்ரீபிளாபாய், ஸ்ரீ அங்கதபூபதி ஆகியோருக்குக் கனவில் தோன்றியருளினார்.

நரசிம்ம அவதார வடிவம்

ஸ்ரீ பெரியதாசருக்கு நரசிம்ம அவதாரத்தில் காட்சியருளினார்.

கூர்மாவதார வடிவம்

ஸ்ரீஜெயவந்த பக்தருக்குக் கூர்மாவதாரத்தில் காட்சி தந்தார்.

பாண்டுரங்க வடிவம்

ஸ்ரீஜம்புதாசருக்குப் பாண்டுரங்க வடிவில் தோன்றினார்.

வியாபாரி வடிவம்


ஸ்ரீஹரிபாலர், ஸ்ரீபுரந்தரதாசர், ஸ்ரீநரசிம்மமேத்தாவுக்கு வியாபாரி வடிவில் தோன்றி அருளினார்.

சமையற்காரர் வடிவம்

ஸ்ரீ மீராபாய் பக்தருக்குச் சமையற்கார வடிவிலும், சோளரொட்டி செய்யும் கிழவர் போல் ஸ்ரீபோசலபாவாவுக்கும் காட்சி தந்தார்.

சங்கர நாராயண வடிவம்

இடது பாகத்தில் உமையம்மையை உடைய சிவவடிவம் அர்த்தநாரீஸ்வரர் எனப்பெறுவது போலத் திருமாலை இடது பாங்கில் உடைய சிவவடிவம் 'அரியர்த்தர்' எனவும், 'சங்கர நாராயணர் வடிவம்' எனவும் பெறும், சிவனும் மாலும் இணைந்த இவ்வடிவழகின் மாண்பினை அகநானூறு



'வெருவெரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம்போல
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ
வந்த மாலை

(360:6-9)

என்ற உவமையின் வாயிலாகச் சுட்டியுள்ளது. காரைக்கால் அம்மையாரும் சிவனைச் 'செங்கண் மாலைப் பங்குடையான்' (4:52) எனவும், 'ஒரு பாடல் உலகளந்த மாலவனாய்' (4:41) எனவும் குறித்துப் போற்றியுள்ளார்.

தேவார மூவர்

தேவாரம் பாடிய மூவருள் திருஞானசம்பந்தர் 'மாலுமோர் பாகமுடையார்' (2-67-1) எனவும், திருநாவுக்கரசர் 'மறிகடல் வண்ணன் பாகா'(4-62-8) எனவும் சுந்தரமூர்த்தி நாயனார் 'திருமாலொர் கூறன்' (7-31-9) எனவும் குறித்து இவ்வடிவைச் சிறப்பித்துள்ளனர்.

ஆழ்வார்கள் ஐவர்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை அருளிய ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் முதலான ஐந்து ஆழ்வார்களும் இவ்வரியர்த்த வடிவினைப் போற்றுவதன் வாயிலாகச் சிவன் வடிவ மாண்புகளை - வண்ணங்களை - அருளாடல்களை திவ்வியப் பிரபந்தத்துள் இருபத்து மூன்று இடங்களில் சுட்டிப் போந்துள்ளனர்.

'மாமதில் மூன்று எய்த இறையான்நின் ஆகத்து இறை' (பொய்.முதல். 28)

'நறவு ஏற்றான் பாகத்தான்' (பேய்.மூன்.31)

'ஆறுசடைக் கரந்தான் கூறுடையான்' திருமழிசை: நான்: 1)

'மலைமங்கை தன் பங்கனைப் பங்கில் வைத்து' (திருமங்: 7-10-3)

'ஏறாளும் இறையோனும் கூறாளும் தனியுடம்பன்' (நம்.4-8-1)

சிப்பாய் வடிவம்

போர்வீரனாகப் பத்ராசலராமதாஸருக்கும், ஸ்ரீஜெய மல்லருக்கும் திருமால் காட்சி தந்து அருளினார்.

நாவிதர் வடிவம்

சேணாநாவிதருக்கு நாவிதர் வடிவிலே திருமால் வந்து அருளினார்.

பொற்கொல்லர் வடிவம்

பொற்கொல்லர் வடிவில் ஸ்ரீதிரி லோசனதாஸருக்குத் திருமால் அருளினார்.

கண்ணபிரான் வடிவம்

ஸ்ரீதிரிபுரதாசருக்கு நூலாடை உடுத்த கண்ணபிரானாக வந்து காட்சிதந்தார்.

சிவ வடிவம்

ஸ்ரீ நரஹரிபக்தருக்குத் திருமால், சிவன் வடிவில் வந்து அருளினார்.

திருவயீந்திரபுரம் திருமால் கோவிலைத் தகர்க்க வந்த சோழ மன்னனுக்குத் திருமால், சிவனாகத் தோன்றி அருளினார்.

கோபாலன்

குழல்ஊதும் கோபாலனாக ஸ்ரீபிம்பாஜீபக்தருக்கு அருளினார்.

மானுடவடிவம்

அர்ச்சாவதாரவிக்ரமன் வடிவில் ஸ்ரீபிரம்மசாரிக்குக் காட்சி யளித்தார்.

தலையாரி வடிவம்

ஸ்ரீதாமாஜி பண்டிதருக்குத் திருமால் தலையாரி வடிவத்தில் தோன்றினார்.

மருத்துவச்சி வடிவம்

மருத்துவச்சி ஸ்ரீகிருஷ்ணாபாயாக ஸ்ரீசார்ங்கதேவருக்குத் திருமால் வந்து காட்சி அருளினார்.

குழந்தை கண்ணன் வடிவம்

ஸ்ரீகருமாபாய்க்குக் குழந்தை கண்ணன் வடிவில் வந்து அருளினார். ராதையுடன் கண்ணனாக ஸ்ரீலதீப்ஷாவுக்குக் காட்சி தந்தார்.

ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதுபவர் வடிவம்

ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதுபவர் வடிவத்தில் ஸ்ரீஜனாபாய்க்குக் காட்சிதந்தார்.

தன்வந்திரி வடிவம்

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது பெருமான், தன்வந்திரி என்னும் தேவவடிவைத் தாங்கி அமுதத்தைக் கொண்டு மேல் எழுந்தார்.

இவ்வடிவத் தியான ஸ்லோகத்தினை நாள்தோறும் தியானிக்க நோய்கள் நீங்கி நலம்பெறலாம் என்பது ஐதீகம்.



சங்கம் சக்ரமுபர்யதஸ்ச கரயோர்
திவ்யௌஷதம் தக்ஷிணே
வாமேநாந்ய கரேண ஸம்ப்ருத
ஸுதா கும்பம் ஜலூகாவளிம்
பிப்ராண: கருணாம்ருத: ஸுகர:
ஸர்வாமய த்வம்ஸக:
க்ஷிப்ரம் மே துரிதம் சிநத்து
பகவான் தந்வந்தரி: பாது ந:

தன்வந்தரியின் ஆயுர்வேத சாஸ்திரத்தின் எட்டு அங்கங்களாவன

1. சல்யம்
2. சாலகம்
3. சிகித்ஸை
4. பூதவித்யா
5. கௌமாரப்ருத்யா
6. அகதம்
7. ரஸாயனம்
8. பஜீகரணம்

இருதிற வடிவம்

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது திருமால் தானே இரண்டு வடிவாய் நின்று இருத்தரப்பினருக்கும் உதவியாகப் பாற்கடலைக் கடைந்தார்.

மோகினி வடிவம்

பாற்கடலில் இருந்து எழுந்த அமிர்தத்தை அசுரர்கள் கவர்ந்த பொழுது, திருமால் மோகினி வடிவை மேற்கொண்டு, தேவர்கள் அமுதத்தை உண்ணவும், அசுரர்கள் அதனை இழக்கவும் செய்தார்.

சாரங்கபாணி

பாற்கடலில் இருந்து எழுந்த பொருட்கள் பலவற்றுள் திருமகளை மார்பில் அணிந்து திருவாழ் மார்பனாகவும், சாரங்கத்தைக் கையில் ஏந்திச் சாரங்கனாகவும், பாஞ்சசைன்யத்தைக் கையில் ஏந்திச் சங்கு பாணியாகவும் திருமால் காட்சியருளினார்.

கனவு வடிவம்

சேவுகன் செட்டியார் என்பவருடைய கனவில் தோன்றிக் காரைக்குடி அருகில் உள்ள திருவேங்கடமுடையான் கோயிலை எழுப்புமாறு பணித்தருளினார்.

காழிச்சீராம விண்ணகரத் தாடாளன் சீர்காழியில் வாழ்ந்த சிதம்பரப் படையாட்சி என்பவருடைய கனவில் தோன்றி நவாபின் ஆட்களிடம் தாம் உள்ள விவரத்தைக் கூறி அருளினார்.

பிரம்மச்சாரி வடிவம்

கேரளாவில் உள்ள திருவல்லா என்னும் தலத்தில் சங்கர மங்கலத்தம்மை என்னும் கற்புடைய பெண்மனியின் குறை களையப் பெருமான் திருவாழ்மார்பனாய்ப் பிரம்மச்சாரிக் கோலத்தில் எழுந்தருளி அமுது உண்டருளினார்.

அழையா விருந்தினராகப் பிரம்மச்சாரி வடிவு பூண்டு அனந்தாழ் வானின் மனைவிக்காக மண் கூடை சுமந்து மண்வெட்டியால் அடியுண்டார்.

சிறுவன் வடிவம்

அழகிய மணவாளன் என்னும் சிறுவனாய் வடிவுகொண்டு திருமால் கோயில் பொன்வட்டிலை விப்ர நாராயணர் தந்து அனுப்பியதாகத் தேவதேவியிடம் சேர்ப்பித்தார்.

நாலாமவர் வடிவம்

திருக்கோவலூரில் மிருகண்டு முனிவர் குடிலின்கண் அமைந்த இடைவெளியில் ஒருநாள் இரவு மழை பொழிந்தபோது பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலாழ்வார்கள் மூவருடன் நாலாமவராகத் தோன்றி அருள்புரிந்தார்.

கள்வன் வடிவம்

திருவைகுண்டத்துப்பெருமான் காலத்தூடகன் என்னும் கள்வர் தலைவனின் பக்திக்கிரங்கித் தாமே கள்வனாக உருமாறி மன்னருக்கு அறிவுரை புகன்றார்.

வரதன் வடிவம்

திருக்கச்சி நம்பிகளின் சீடன் வரதனாகப் பெருமான் வடிவு கொண்டு அவரைத் தீவட்டிக் குடையுடன் திருமடத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பித்தார்.

முதியவர் வடிவம்

மார்க்கண்டேயரிடம் முதியவர் வேடத்தில் திருமால் எழுந்தருளி அவருடைய வளர்ப்புமகளான பூமிபிராட்டியைத் தமக்கு மணம் முடித்துத் தருமாறு வேண்டி நின்றார்.

வழிப்போக்கர் வடிவம்

மலையாளக் கவிஞர் பூந்தானத்தை வழிப்போக்கர் வடிவில் வந்து அவரைக் கள்வர்களிடமிருந்து பாதுகாத்து அதற்காக அவருடைய மோதிரத்தை அன்பளிப்பாகப் பெற்று மகிழ்ந்தார்.

தலையாட்டி வடிவம்

பட்டாத்திரி என்பவர் எழுதிய நாராயணீயத்தைக் கண்ணன் வாசக வடிவினை ஏற்று அதனைத் தலையாட்டி ஆமோதித்து அருளினார்.

பெரியவாச்சான் பிள்ளை

திருமங்கையாழ்வார் பாடல் குறிப்புக்கு ஏற்ப அவர்தம் பாடலைக் கற்கவேண்டிப் பெரியவாச்சான் பிள்ளையாகத் திருமால் அவதரித்தாகக் கூறுவது மரபு.

வணிக வடிவம்

திருவரங்கத் திருமதில் பணிசெய்த திருமங்கை மன்னனுக்கு உதவவேண்டித் தலைப்பாகை அணிந்த வணிகராக எழுத்தாணி, மரக்காலுடன் பெருமான் எழுந்தருளினார்.

வைணவன் வடிவம்

திருவெள்ளறையில் சிபியின் வருத்தம் நீங்குமாறு மூவாயிரத்து எழுநூறு வைணவர்களுடன் இறந்துவிட்ட ஓர் அந்தணனாகப் பெருமான் எழுந்தருளினார்.

ராமன் வடிவம்

தன் கையில் உள்ள சங்கு சக்கரங்களைக் கருடனிடம் தந்து விட்டுத் திருமால் வல்வில் ராமனாக மயனுக்குக் காட்சி தந்து அருளினார்.


கிழப்பெருமான் வேடம்

நம்பாடுவானைக் காப்பாற்றவேண்டி பெருமான் கிழப் பெருமான் வேடத்தில் தோன்றியருளினார். நம்பாடுவானுக்காகக் கொடிக்கம்பம் விலகிய திவ்யதேசம் திருக்குறுங்குடி ஆகும்.



மைசூர் ஸ்ரீ பரகால மடத்தில்
வீற்றிருந்தருளும்
ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவப் பெருமாள்

துஷாராத்ரி ஸமச்சாயம்
துளஸீதாம பூஷணம்
துரங்கவதநம் வந்தே
துங்கஸாரஸ்வத ப்ரதம்



பன்னிரு ஆழ்வார்கள்

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யப்பட்ட
நாதன் அன்பர்தாள் தூளி நற் பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு

- மணவாள மாமுனிகள்

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தன்
பொருநல்வருங் குருகேசன்விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
, தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வே லேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி
தெளியாத மஅ லங்கள் தெளிகின் றோமே.

- ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன்

ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல்வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி - ஏழ்பாரும்
உய்ய அவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து

- உபதேச ரத்தினமாலை

1. பொய்கை ஆழ்வார்



கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான் கவிஞர் பேரேறு - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் அந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து

- முதலியாண்டான்

பிரபந்த சாரம் சுட்டும் பொய்கையாழ்வார் சரிதச் சிறப்பு

அருண்மிகுத்த தொருவடிவாய்க் கச்சி தன்னி
லைப்பசிமா தத்திருவோ ணத்து நாளிற்
பொருண்மிகுத்த மறைவிளங்கப் புவியோ ருய்யப்
பொய்கைதனில் வந்துதித்த புனிதா முன்னா
ளிருளதனிற் றண்கோவ லிடை ழிச்சென்
றிருவருட னிற்கவுமா லிடைநெ ருக்கத்
திருவிளக்கா மெனும்வையந் தகளி நூறுஞ்
செழும்பொருளா வெனக்கருள்செய் திருந்த நீயே.

தாயின் கருவில் அன்றித் தாமே உதித்த 'அயோனிஜர்களாய்' தொண்டை மண்டலத்தைச் சார்ந்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் ஜீவாத்மா பரமாத்மா தத்துவத்தை முதன் முதலில் விளக்கியவர்கள் ஆவர். பொய்கையாழ்வார் - சங்கின் அம்சம்.

துவாபரயுகம் 862 - 901 கி.மு. 4202; சித்தார்த்தி அண்டு ஐப்பசித் திருவோணம்; செவ்வாய்க்கிழமை காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருவெஃகா என்ற ஊரில் பிறந்தார்.

இவர் பாடல்களை ஞானதீபம் என்று இராமானுஜர் பாராட்டியுள்ளார்.

மூன்றாவதாயிரம் - முதல் திருவந்தாதி - 100 பாசுரங்கள். இவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்ய தேசங்கள் - 7.

திருப்பரமபதம்	திருவிண்ணகர்
திருப்பாற்கடல்	திருக்கோவலூர்
திருவேங்கடம்	திருவெஃகா
திருவரங்கம்	

இதோ ஒரு ஞானதீபப் பாடல்,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் பொன்மாலை
இடராழி நீக்குகவே என்று.

இவ்வாழ்வார் சுட்டும் திருமாலின் நான்கு திருக்கோல ஞானதீபம்,

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும் - நான் கிடந்து
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்.

' செய்ய துலா ஓணத்தில் செகத்துதித்தான் வாழியே!
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே!
வையம் தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே!
வசை மலர்க் கருதவதனில் வந்தமைந்தான் வாழியே!
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே!
வேங்கடவன் திருமலையை விரும்புமவன் வாழியே!
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே!
பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே!

2. பூதத்தாழ்வார்



என்பிறவிதீர இறைஞ்சினேன் இன்னமுதா
அன்பே தகளி அளித்தானை - நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துகள் சேரும் கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்

- திருக்குருகைப் பிரான் பிள்ளான்

பிரபந்த சாரம் சுட்டும் பூதத்தாழ்வார் சரிதச் சிறப்பு

கடன்மல்லைக் காவலனே பூத வேந்தே
காசினிமே லைப்பசியி லவிட்ட நாள்வந்
திடர்கடியுந் தண்கோவ லிடைக ழிச்சென்
றிணையில்லா மூவருமா யிசைந்தே நிற்க

நடுவிலிவ ரொருவருமென் றறியா வண்ண
நள்ளிருளின் மானெருக்க நந்தா ஞானச்
சுடர்விளக்கேற் றியவன்பே தகளி யான
தொடைநூறு மெனக்கருள்செய் துலங்க நீயே.

பூதத்தாழ்வார் - கதை என்னும் தண்டாயுதத்தின் அம்சம் ஆவார்.

துவாபர யுகம் - 862 - 901 - கி.மு. 4202; சித்தார்த்தி ஆண்டு - ஐப்பசித் திங்கள் - அவிட்டம் நட்சத்திரம்; புதன் கிழமை - மகாபலிபுரத்தில் பிறந்தார்.

மூன்றாவதாயிரம் - இரண்டாந்திருவந்தாதி - 100; இவர் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் - 13.

திருப்பாற்கடல்	திருமாலிரும் சோலை
திருவேங்கடம்	திருக்கோட்டியூர்
திருக்கடன்மல்லை	திருத்தண்கால்
திருநீர்மலை	திருக்குடந்தை
திருப்பாடகம்	தஞ்சை மாமணிக்கோயில்
திருக்கோவலூர்	திருவரங்கம்
திருக்கச்சி	

மக்கள் பேதமை நீங்க இவ் ஆழ்வார் சுட்டும் நெறியாவது,

பின்னால் அருநரகம் சேராமல் **பேதுறுவீர்**
முன்னால் வணங்க **முயல்மினோ**-பன்னூல்
அளந்தானைக் கார்கடல்சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தா னவன்சே வடி.

அன்பே தகளி நூறும் அருளினோன் வாழியே!
ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே!
நன்புகழ்சேர் குருக்கத்தி நான்மலரோன் வாழியே!
நல்லதிருக் கடன் மல்லை நாதனார் வாழியே!
இன்புருகு சிந்தை திரி இட்ட பிரான் வாழியே!
எழில் ஞானச் சுடர் விளக்கை ஏற்றினான் வாழியே!
பொன்புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே!
பூதத்தார் தாளிணை இப்பூதலத்தில் வாழியே!

૩. பேயாழ்வார்



சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு - ஓராத்
திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே உகந்து

- குருகைக் காவலப்பன்

பிரபந்த சாரம் சுட்டும் பேயாழ்வார் சரிதச் சிறப்பு

மாமயிலைப் பதியதனிற் றுலாமா தத்தில்
வருஞ்சதயத் தவதரித்துக் கோவ லூரிற்
றூமுனிவ ரிருவருடன் றுலங்க நின்று
துன்னியபே ரிருணீங்கச் சோதி தோன்றச்
சேமமுட னெடுமாலைக் காணப் புக்குத்
திருக்கண்டே னெனவுரைத்த தேவே யுன்றன்
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்
பழவடியே னுக்கருள்செய் பரம நீயே.

பேயாழ்வார் - திருமால் வாளின் அம்சம் ஆவார்.

துவாபரயுகம் - 862 - 901- கி.மு. 4202; சித்தார்த்தி வருடம் - ஐப்பசி மாதம் - சதய நட்சத்திரம்; வியாழக்கிழமை - திருமயிலையில் பிறந்தார்.

மூன்றாவதாயிரம் - மூன்றாம் திருவந்தாதி - 100 பாக்கள் இவர் பாடியன. மங்களாசாசனம் பெற்ற திவ்யதேசங்கள் - 14.

திருவரங்கம்	திருவேங்கடம்
திருக்குடந்தை	திருக்கடிகை
திருவிண்ணகர்	திருவல்லிக்கேணி
திருமாலிருஞ்சோலை	திருவெஃகா
திருக்கோட்டியூர்	திருப்பாடகம்
திருப்பரமபதம்	திருவேளுக்கை
திருப்பாற்கடல்	திரு அட்டபுயகரம்

பேயாழ்வார் கண்டு சேவித்த சங்கரநாராயணர் வடிவப் பாடல்,

தாழ் சடையும் நீள்முடியும் ஒன்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

திருக்கண்டேன் எனும் நூறும் செப்பினான் வாழியே!
சிறந்த ஐப்பசியில் சதயம் சனித்த வள்ளல் வாழியே!
மருக்கமழும் மயிலை நகர் வாழவந்தோன் வாழியே!
மலர்க்கரிய நெய்தல் தனில் வந்துதித்தோன் வாழியே!
நெருக்கிடவே இடைகழியில் நின்ற செல்வன் வாழியே!
நேமிச் சங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே!
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான் தொழுவோன் வாழியே!
பேயாழ்வார் தாளிணை இப்பெருநிலத்தில் வாழியே!

4. திருமழிசை ஆழ்வார் (புகழ்மழிசை அய்யன்)



உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க - உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது

- திருக்கச்சி நம்பிகள்.

பிரபந்த சாரம் சுட்டும் திருமழிசையாழ்வார் சரிதச் சிறப்பு

தைம்மகத்தில் வருமழிசைப் பரனே மற்றைச்
சமயங்கள் பலதெரிந்து மாயோ னல்லாற்
றெய்வம்மற் றில்லையென வுரைத்த வேதச்
செழும்பொருணான் முகன்றொண்ணாற் றாறு பாட்டு
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல்
விளங்கியநூற் றிருபதுந்தப் பாமன் மெய்யே
வையகத்து மறவாம லுரைத்து வாழும்
வகையடியே னுக்கருள்செய் மகிழ்ந்து நீயே

இவர் சக்கராயுத அம்சமாய்த் தோன்றியவர். குருபரம்பரை (மூவாயிரப்படி)

துவாபரயுகம் 862 - 900 சித்தார்த்தி வருடம்; தை மாதம் ஞாயிற்றுக்கிழமை மகம் நட்சத்திரம்;

முதலாயிரத்தில் இவர் பாடிய திருச்சந்தவிருத்தம் -120 பாசுரங்கள்; மூன்றாவதாயிரத்தில் இவர் பாடிய நான்முகன் திருவந்தாதி- 96 பாசுரங்கள். மங்களாசாசனம் செய்தருளிய திவ்ய தேசங்கள் - 14.

திருவரங்கம்	திருவல்லிக்கேணி	திருஅன்பில்
திருவூரகம்	திருஎவ்வுள்	திருக்கவித்தலம்
திருக்குடந்தை	திருக்குறுங்குடி	திருக்கூடல்
திருக்கோட்டியூர்	திருப்பாடகம்	திருப்பேர்நகர்
திருவெஃகா	திருவேங்கடம்	

'பார்க்கவ முனிவருக்கும் அவர் மனைவி கனகாங்கிக்கும்
சுதர்சன அம்சமாய்த் தோன்றியவர் பிறந்த ஊர்' (திருமழிசை)

'நடந்த கால்கள் நொந்தவோ நடுங்கு ஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ இலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தைதன்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசுவாழி கேசவனே.'

திரு. விரு. 61

சிவபெருமானால் பக்திசாரர் என்று திருநாமம் சாத்தப்பெற்ற திருமழிசையார் ராமனை நினைந்து உருகிப் பாடிய பாசுரம் வருமாறு,

ஊனின் மேய ஆவிநீ உறக்க மோடு உணர்ச்சிநீ
ஆனில் மேய ஐந்தும்நீ அவற்றுள் நின்ற தூய்மைநீ
வானி னோடு மண்ணும்நீ வளங்கடற் பயனும்நீ
யானும் நீய தன்றியெம் பிரானும் நீஇ ராமனே

மேலும் திருவேங்கடமலையின் சிறப்பை வலியுறுத்தி கூறுவதாய் அமைந்துள்ள இவர்தம் பாசுரம்,

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே
தானவரை வீழத்தன் ஆழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை

என்று பிரபந்தத்துள் இடம்பெற்றுள்ளது.

அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறு உரைத்தோன் வாழியே!
அழகாருந் திருமழிசை அமர்ந்த பிரான் வாழியே!
இன்பமிகு தையில் மகத்து இங்குதித்தான் வாழியே!
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபது ஈந்தான் வாழியே!
முன்புகத்தில் வந்துதித்த முனிவர்கோன் வாழியே!
முழுப் பொன்னிப் பெருக்கெதிர்செல் முதிர்கவியோன் வாழியே!
நன்புவி நாலாயிரத்து எழுநூறு இருந்தான் வாழியே!
நங்கள் பக்தி சாரன்இரு நற்பதங்கள் வாழியே!

5. நம்மாழ்வார்



திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும் - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து

- ஈஸ்வர முனிகள்

பிரபந்த சாரம் சுட்டும் நம்மாழ்வார் சரிதச் சிறப்பு

முன்னுரைத்த திருவிருத்த நூறு பாட்டு
முறையின்வரு மாசிரிய மேழு பாட்டு
மன்னியநற் பொருட்பெரிய திருவந் தாதி
மறவாத படியெண்பத் தேழு பாட்டும்
பின்னுரைத்த தோர்திருவாய் மொழியெப் போதும்
பிழையறவா யிரத்தொருநூற் றிரண்டு பாட்டு
மிந்நிலத்தில் வைகாசி விசாகந் தன்னி
லெழிற்குருகை வருமாறா விரங்கு நீயே.

கி.பி. 790 - 810 பாண்டி நாட்டில், தாமிரபரணியாற்றின் கரையில் குருகூர் என்னும் ஊரில், வேளாண்குலத்தில், காரியார்க்கும், உடைய நங்கையார்க்கும் வைகாசி விசாகத்தில், திருக்குறுங்குடி நம்பியின் அருளால் விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியாரின் அம்சமாகத் தோன்றினார். உலகியல் வாழ்க்கையின் மயக்கமாகிய சடப்பொருள் உணர்ச்சி தம்மைப் பற்றாதவாறு கோபித்து ஓட்டி ஒழித்தவர் ஆதலால் இவருக்குச் சடகோபன் என்ற திருப்பெயர்

ஏற்பட்டது. இவர் திருவரங்க நம்பெருமானால் ''நம்மாழ்வார்'' என்று உறவு கொண்டாடிப் பெரிதும் விரும்பி போற்றப்பெற்றதால் ''நம்மாழ்வார்'' என்று பெயர் பெற்றார். வகுளாபரணன், பராங்குசன், குருகைப்பிரான் என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவர் திரு விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார்.

திருவிருத்தம் (ருக்வேதசாரம்) 100;
பெரிய திருவந்தாதி (அதர்வணசாரம்) 87;
திருவாசிரியம் (யஜுர்வேதசாரம்) 7;
திருவாய்மொழி (சாமவேதசாரம்) 1102;

மாறன், சடகோபன், பராங்குசர், வகுளாபரனர், குருகைக் காவலர், வேதம் தமிழ் செய்த பிரான், திருவாய்மொழிப் பெருமான், திருவழுதி வளநாடர் எனும் பல திருப்பெயர்களால் குறிப்படப்பெறும் நம்மாழ்வார் திருஅவதாரம் செய்தருளிய திருநகரியின் மாண்பினை ஸ்ரீராமானுஜர்,

இதுவே திருநகரி ஈதோ பொருநை
இதுவோ பரமபதத்து எல்லை-இதுவோ தான்
வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்.

என்றுரைத்துள்ளார்.

நம்மாழ்வாரின் திருக்கோளூர்த் திவ்யதேசப் பாசுரம் ஒன்று அனைத்தையும் எம்பெருமான் கண்ணனாக காட்டி நிற்கின்றது.

உண்ணுஞ் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கு அவன்ஊர் வினவி
திண்ணம் என்இள மான்புகும் ஊர்திருக் கோளூரே

ஆனதிருவிருத்தம் நூறும் அருளினான் வாழியே!
ஆசிரியம் ஏழு பாட்டும் அளித்தபிரான் வாழியே!
ஈனமற அந்தாதி எண்பத்தேழீந்தான் வாழியே!
இலகு திருவாய் மொழி ஆயிரத்து ஒரு
நூற்றிரண்டுரைத்தான் வாழியே!

வான் அணியும் மாமாடக் குருகை மன்னன் வாழியே!
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே!
சேனையர் கோன் அவதாரம் செய்த வள்ளல் வாழியே!
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே!

6. மதுரகவி ஆழ்வார்



வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறு எங்கள்
வாழ்வாம் என் றேத்தும் மதுரகவி யார்எம்மை
ஆள்வார் அவரே அரண்!

பிரபந்த சாரம் சுட்டும் மதுகவிஆழ்வார் சரிதச் சிறப்பு

தேறியமா ஞானமுடன் றிருக்கோ ளூரிற்
சித்திரையிற் சித்திரைநாள் வந்து தோன்றி
யாறியநல் லன்புடனே குருகூர் நம்பிக்
கனவரத மந்தரங்க வடிமை செய்து
மாறனையல் லாலென்று மறந்துந் தேவு
மற்றறியே னெனுமதுர கவியே நீமுன்
கூறியகண் ணிநுண்சிறுத்தாம் பதனிற் பாட்டுக்
குலவுபதி னொன்றுமெனக் குதவு நீயே

காலம் கி.பி. 800 - 850; பாண்டிநாட்டு ஆழ்வார் திருநகரிக்கு அருகில் திருக்கோளூர் என்னும் திவ்யதேசத்தில் சித்திரை மாதத்தில், சித்திரை நட்சத்திரத்தில் கணநாதரான குமுதர் என்பவரின் அம்சமாகத் திருஅவதாரம் செய்தவர். இளமையிலேயே வேதம் முதலான நூல்களை எல்லாம் ஓதி உணர்ந்து மதுரம் மிகுந்த இனிய சிறந்த கவிகளைப் பாட வல்லவராக இருந்ததனால் இவர் மதுரகவிகள் என்னும் பெயர் பெற்றார். இவர் ''தேவு மற்றறியேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே'' என்று நம்மாழ்வாரையே குருவாகக் கொண்டவர். நம்மாழ்வாரைப் புகழ்ந்து இவர் பாடிய பிரபந்தம் 'கண்ணி நுண்சிறுத்தாம்பு' என்பதாகும். இது நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் இடம்பெற்று நடுநாயகம்போல் சிறந்து விளங்குகிறது.

கண்ணிநுண் சிறுத்தாம்பு - 11 பாசுரங்கள்.

அந்தாதி யாப்பில் அமையப்பெற்ற இவர் பாசுரங்களில் ஒரு பாசுரம்,

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணி யபெரு மாயன்என் னப்பனில்
நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால்
அண்ணிக் கும்அமு தூறுமென் நாவுக்கே

மேலும் இவர்,

கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம் நாராணமே

என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழியை எழுதி தந்ததன் மூலம் சங்கப்பலகையில் அவர்தம் சிறப்பை ஏற்றி மகிழ்ந்தார்.

சித்திரையில் சித்திரை நாள்சிறக்க வந்தோன் வாழியே!
திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே!
உத்தர கங்காதீரத்து உயர்தவத்தோன் வாழியே!
ஒளிக்கதிரோன் தெற்குதிக்க உகந்து வந்தோன் வாழியே!
பக்தியுடன் பதினொன்றும் பாடினோன் வாழியே!
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே!
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே!
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே!

7. குலசேகர ஆழ்வார்



இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமான் - பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்கோன் சேரலர்கோன் எங்கள்
குலசேகரன் என்றே கூறு

- உடையவர்

பிரபந்த சாரம் சுட்டும் குலசேகராழ்வார் சரிதச் சிறப்பு

பொன்புரையும் வேற்குலசே கரனே மாசிப்
புனர்பூசத் தெழில்வஞ்சிக் களத்துத் தோன்றி
யன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயி
லனைத்துலகின் பெருவாழ்வு மடியார் தங்க

ளின்பமிகு பெருங்குழுவுங்க ாண மண்மே
லிருளிரிய வென்றெடுத்த விசையிற் சொன்ன
நன்பொருள்சேர் திருமொழிநூற் றைந்து பாட்டு
நன்றாக வெனக்கருள்செய் நல்கி நீயே.

கி.பி. 800 - 850; இவர் சேரநாட்டில், திருவஞ்சைக்களம் என்னும் நகரில் திடவிரதன் என்னும் அரசனுக்குக் கௌஸ்துப அம்சமாக மாசி மாதத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் திருஅவதாரம் செய்தார். தமது குலமரபுக்கு ஏற்ற அரசராய் முடிசூடப்பெற்று, குடிமக்களை நன்கு பாதுகாத்து வந்தார். ‘பெருமாள்’ என்பது சேர அரசர்க்குரிய பட்டப் பெயர். ஆதலால் இவரைக் குலசேகரப்பெருமாள் என்றும் குறிப்பிடுவர். இராமபிரானிடத்தும், இராமாயணத்திலும் இவர் எல்லையில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் பாடியன பெருமாள் திருமொழி - 105 பாசுரங்கள்.

இராமபிரானைத் தாலாட்டுவதாக அமைந்துள்ள இவர்தம் பாசுரம்,

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ

அஞ்சனமா மலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே!
அணியரங்கர் மணத்தூணை அடைந்துய்ந்தோன் வாழியே!
வஞ்சிநகரம் தன்னில் வாழ வந்தோன் வாழியே!
மாசிதனில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே!
அஞ்சல் எனக் குடப்பாம்பில் அங்கை இட்டான் வாழியே!
அனவரதம் இராமர் கதை அனுபவிப்போன் வாழியே!
செஞ்சோல் மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே!
சேரலார்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே!

திருவாழியாழ்வார் துதி



எண்டள வம்புயத் துள்ளிலங் கும்மறு கோணமிசை
வண்பணி லந்தி கிரிவளை வில்வளை வாய்முசலந்
திண்கையி லங்குசஞ் சீர்திக ழுங்கதை செங்கமல
மெண்படையேந்திநின் றானெழி லாழி யிறையவனே.

- பரமத பங்கம் -1

8. பெரியாழ்வார்



பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான்
வந்தாளனன்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத - வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

- பாண்டிய பட்டர்

பிரபந்த சாரம் சுட்டும் பெரியாழ்வார் சரிதச் சிறப்பு

பேரணிந்த வில்லிபுத்தூ ரானி தன்னிற்
பெருஞ்சோதி தனிற்றோன்றும் பெருமா னேமுன்
சீரணிந்த பாண்டியன்றன் னெஞ்சு தன்னிற்
றியக்கறமால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி
வாரணமேன் மதுரைவலம் வரவே வானின்
மால்கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்து
மேரணிபல் லாண்டுமுதற் பாட்டு நானூற்
றெழுபத்தொன் றிரண்டுமெனக் குதவு நீயே

கி.பி.815 - 840ல் பாண்டிநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் திவ்யதேசத்தில் வேயர் குலத்தில், பதுமையாருக்கும், முகுந்தாச் சாரியாருக்கும் ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில், கருட அம்சமாகத் தோன்றியருளினார். இவர் தனது சித்தத்தில் எப்பொழுதும் விஷ்ணுவை வழிபட்டு வந்தவராதலின் இவருக்கு 'விஷ்ணுசித்தர்' என்று பெயர் அமைந்தது. பாண்டியனின் அரசவையில் பரதத்வ நிச்சயம் செய்து ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று நிறுவிப் பொற்கிழி அறுத்து, சகலவேத சாத்திர ஞானச் செல்வராகத் திகழ்ந்தமையினால் ''பட்டர் பிரான்'' என்ற பெயரும் உண்டு. இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலுடையானுக்கு மிக்க அன்பு பூண்டு, திருமாலைகள் புனைந்து சாத்தி வழிப்பட்டு வந்தவர். 'திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி' என்னும் இரண்டும் இவரது பிரபந்தங்களாகும்.

பெரியாழ்வார் திருமொழி - 461 - பாசுரங்கள்.

திருப்பல்லாண்டு - 12 - பாசுரங்கள்.

பல்லாண்டு என்னும் பதம் கடந்த பரந்தாமனுக்குப் பெரியாழ்வார் கூறும் திருப்பல்லாண்டுப் பாசுரம்,

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண் ணாவுன்
சேவடி செவ்வித் திருக்காப்பு

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவல த்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்கும் அப் பாஞ்ச சைன்யமும் பல்லாண்டே.

நல்ல திருப்பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே!
நானூற்றுப் பத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே!
சொல்லரிய ஆனிதனில் சோதி வந்தான் வாழியே!
தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும் அப்பன் வாழியே!
செல்வ நம்பிதனைப் போலச் சிறப்புற்றான் வாழியே!
சென்று கிழியறுத்துமால் தெய்வம் என்றான் வாழியே!
வில்லிபுத்தூர் நகரத்தை விளங்க வைத்தான் வாழியே!
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே!

9. ஸ்ரீ ஆண்டாள்



அல்லிநாட் டாமரைமேல் ஆரணங்கின் இன்துணைவி
மல்லிநா டாண்ட மடமயில் - மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தான் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

- திருக்கண்ண மங்கையாண்டன்

பிரபந்த சாரம் சுட்டும் ஸ்ரீ ஆண்டாள் சரிதச் சிறப்பு

வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப் பூர
மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன்
றூயதிரு மகளாய்வந் தரங்க னார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே

நேயமுடன் றிருப்பாவைப் பாட்டா றைந்து
நீயுரைத்த தையொருதிங் கட்பா மாலை
யாயபுகழ் நூறுடனாற் பத்து மூன்று
மன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே.

கி.பி. 815 - 840; ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவாடிப்பூரத்தில், பூமிப் பிராட்டியார் அம்சமாகத் தோன்றியருளியவர். தம்முடைய திரு நந்தவனத்தில் திருத்துழாய்ச் செடியின் கீழ்க் குழந்தையாகக் கிடந்த இவரை பெரியாழ்வார் எடுத்து கோதை என்று பெயரிட்டு வளர்த்தார். பெரியாழ்வார் வடபெருங் கோயில் உடையானுக்காகத் தொடுக்கும் மலர் மாலைகளைத் தான் முதலில் சூடிமகிழ்ந்து, பிறகு எம் பெருமானுக்குத் கொடுத்தவள் ஆதலின் இவருக்கு ‘சூடிக்கொடுத்த நாச்சியார்’ என்று பெயரும் உண்டு. தன் அன்பின் மிகுதியாலும், காதலாலும் ஆண்டவனையே தன்பால் ஏற்று ஆண்டுகொண்டவள் ஆதலால் ‘ஆண்டாள்’ என்று போற்றப்படுகிறார். பெருமானுக்கே மணவாட்டி ஆகும் பேறுபெற்று அவனோடு ஒன்றிக் கலந்தவள். இவர் அருளிச்செய்த பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரண்டாகும்.

திருப்பாவை - 30 - பாசுரங்கள்.

நாச்சியார் திருமொழி - 143 பாசுரங்கள்.

ஆண்டாள் கண்ட திருமணக் கனா பற்றிய பாசுரம் ,

வாரணம் ஆயிரம் சூழவ லம்செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்

என்பதாகும்.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே!
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே!
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே!
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே!
உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே!
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே!
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப்பாதங்கள் வாழியே!

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார்



மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கரி
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் - உற்ற
திருமாலைப் பாடுஞ்சீர்த் தொண்டர் அடிப்பொடியெம்
பெருமானை எப்பொழுதும் பேசு

- திருவரங்கப் பெருமாளையர்

பிரபந்த சாரம் சுட்டும் தொண்டரடிப்பொடியாழ்வார் சரிதச் சிறப்பு

மன்னுமதிட் டிருமண்டங் குடிதான் வாழ
மார்கழிமா தக்கேட்டை நாளில் வந்து
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே நீமுன்
றுழாய்மாலைப் பணியடிமை செய்து நாளுந்
தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச்
செப்பியநற் றிருமாலை நாற்பத் தைந்தும்
பன்னியநற் றிருப்பள்ளி யெழுச்சி பத்தும்
பழவடியே னுக்கருள்செய் பரிந்து நீயே

கி.பி. 840 - 860 குடந்தைக்கு அருகில் உள்ள திருமண்டங்குடி என்னும் ஊரில் மார்கழிக் கேட்டையில் திருமாலின் வனமாலையின் அம்சமாகப் பிராமண குல்த்தில் தோன்றியவர். இயற்பெயர் விப்பிர நாராணர். இவர் ஸ்ரீவைஷ்ணவருக்கு அடிமை பூண்டு ஒழுகி அவர்களின் திரு வடிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்வதையே ஒரு பெரும் பேறாகக் கருதியதால் தொண்டரடிப் பொடியாழ்வார் என்ற பெயர் பெற்றார். திருவரங்கத்தில் அழகியமணவாளனுக்குத் திருநந்தவனப் பணிபுரிந்து வந்தவர். திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங்களை இவர் அருளினார்.

திருமாலை - 45 பாசுரங்கள்.

திருப்பள்ளியெழுச்சி - 10 பாசுரங்கள்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனஇருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி

எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மாபள்ளி யெழுந்தரு ளாயே.

என்று திருஅரங்கத்து ஆராஅமுதனைப் பள்ளி எழுந்தருளுமாறு பாடி அருளிய இவ்வாழ்வார் அத்திருஅரங்கனிடம் வேண்டி நிற்கும் திருப்பாசுரம் வருமாறு,

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

மண்டங்குடியதனில் வாழ வந்தோன் வாழியே!
மார்கழியில் கேட்டை நாள் வந்துதித்தான் வாழியே!
தெண்டிரை சூழ் அரங்கரையே தெய்வம் என்றான் வாழியே!
திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான் வாழியே!
பண்டு திருப்பள்ளி எழுச்சிப் பத்துரைத்தான் வாழியே!
பாவையர்கள் கலவிதன்னைப் பழித்த செல்வன் வாழியே!
தொண்டு செய்து துன்பத்தால் துலங்கினான் வாழியே!
தொண்டரடிப்பொடி ஆழ்வார் துணைப்பதங்கள் வாழியே!

11. திருப்பாணாழ்வார்



காட்டவே கண்ட பாத கமலநல் லாடை யுந்தி
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவி னோமே

- திருமலை நம்பிகள்

பிரபந்த சாரம் சுட்டும் திருப்பாணாழ்வார் சரிதச் சிறப்பு

உலகறிய மலிபுகழ்க்கார்த் திகைமா தத்தி
லுரோகிணிநா ளுறந்தைவளம் பதியிற் றோன்றித்
தலமளந்த தென்னரங்கர் பாலு லோக
சாரங்க மாமுனிதோ டனிலே வந்து

பலமறையின் பொருளாற்பாண் பெருமா ளேநீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த
சொலவமல னாதிபிரான் பத்துப் பாட்டுஞ்
சோராம லெனக்கருள்செய் துலங்க நீயே

கி.பி. 840 - 860 - சோழநாட்டில், உறையூரில் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் திருமாலின் ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய்த் தோன்றியவர். பாணர் குலத்தில் பிறந்தவர் ஒருவரால் வளர்க்கப் பட்டதால் பாணாழ்வான் என்ற பெயர் பெற்றார். இவர் யாழ்ப்பாடலில் தேர்ச்சிபெற்றுத் திருவரங்கம் பெரியபெருமாள் திருவுள்ளம் உவக்குமாறு பாடல் தொண்டு புரிந்துவந்தார். அதனால் அவர்தம் இன்னருளுக்கு இலக்காகி, அவர் பணிந்தபடி லோகசாரங்க மாமுனிகளின் தோள்களின் மேலே ஏறி, அப்பெரிய பெருமாளின் திருக்கோயிலுக்குள் சென்று, அவரைத் திருவடி முதல் திருமுடிவரை தரிசித்து நன்கு அனுபவித்து 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று பாடி அவர் திருவடிகளையே சேர்ந்தவர் ''அமலன்ஆதிப்பிரான்'' என்பது இவர் திவ்யபிரபந்தம்.

அமலனாதிப்பிரான் - 10 பாசுரங்கள்.

உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத்து உறையூரான் வாழியே!
உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே!
வம்பவிழ்த்தார் முனி தோளில் வந்த பிரான் வாழியே!
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே!
அம்புவியில் மதிளரங்கர் அகம் புகுந்தோன் வாழியே!
அமலனாதிபிரான் பத்தும் அருளினான் வாழியே!
செம்பொன்முடி அளவும் சேவிப்போன் வாழியே!
திருப்பாணன் பொற்பாதங்கள் செகதலத்தில் வாழியே!

ஸ்ரீ பாஞ்ச சைன்யத் துதி



செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம் போல்
செங்கண் கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத் தலமேறி அன்ன வசஞ்செய்யும்
சங்கரையா உன்செல்வம் சால அழகியதே

12. திருமங்கை ஆழ்வார்



நெஞ்சுக் கிருள்கடி தீபம் அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம் தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபரகாலன் பனுவல்களே
- ஆழ்வான்

பிரபந்த சாரம் சுட்டும் திருமங்கையாழ்வார் சரிதச் சிறப்பு

அறிவுதரும் பெரியதிரு மொழிதப் பாம
லாயிரத்தோ டெண்பத்து நாலு பாட்டுங்
குறியதொரு தாண்டகநா லைந்தா றைந்துங்
குலாநெடுந்தாண் டகமெழுகூற் றிருக்கை யொன்றுஞ்
சிறியமடற் பாட்டுமுப்பத் தெட்டி ரண்டுஞ்
சீர்பெரிய மடறனிற்பாட் டெழுபத் தெட்டு
மிறையவனே கார்த்திகையிற் கார்த்தி கைந்நா
ளெழிற்குரையல் வருகலியா விரங்கு நீயே.

கி.பி. 880; சோழநாட்டில் திருவாலி திருநகரிக்கு அருகில், திருக்குறையலூரில் சோழ மன்னனின் படைத்தலைவனான ஒருவருக்கு, கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாகத் தோன்றியவர். நீலன் என்னும் பெயர் பெற்ற இவர், தன் குலத்தொழிலான படைப்பயிற்சியில் தேர்ச்சிபெற்று சோழ மன்னனை அடுத்த படைத்தலைவராய் அமர்ந்து, பகைவர்களைப் போரில் வென்று பரகாலன் என்னும் சிறப்புப் பெற்றிருந்தார். இவர் குமுதவல்லி என்னும் அமரமகளை மணம் செய்ய விரும்பி, அவள் வேண்டுகோளுக்கு இணங்கித் திருநறையூர் நம்பியிடம் 'திருவிலச்சினை' தரித்தவர். வயலாலி மணவாளனிடம் திருமந்திர உபதேசம் பெற்றவர். திருவரங்கத்தில் திருப்பணி புரிந்தவர். திருமங்கை என்னும் நாட்டுக்கு மன்னராக விளங்கியதால் இவருக்குத் திருமங்கை மன்னன், திருமங்கையாழ்வார் என்ற பெயரும் உண்டு. ஆலிநாடன் - அருள்மாரி - கலியன் - கலிகன்றி நாலுகவிப் பெருமாள் என்ற பெயரும் உண்டு. இவர் பெரியதிருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் 6 பிரபந்தங்களை அருளினார்.

பெரிய திருமொழி 1084	சிறிய திருமடல் (40) - 1
திருக்குறுந்தாண்டகம் 10	பெரிய திருமடல் (78) - 1
திருநெடுந்தாண்டகம் 30	திருவெழுகூற்றிருக்கை -1

தன்னை ஆட்கொண்டருளுமாறு திருவேங்கடவனை நோக்கி இவர் துதித்த திருப்பாசுரமாவது

தாயே தந்தை யென்றும் தாரமே கிளைமக்க ளென்றும்
நோயே பட்டொ ழிந்தேன் நுனைக்காண்ப தோர்ஆ சையினால்
வேயேய் பூம்பொ ழில்சூழ் விரையார் திருவேங் கடவா
நாயேன் வந்த டைந்தேன் நல்கியாள் என்னைக் கொண்டருளே

கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே!
காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே...!
நலம் திகழ் ஆயிரத்தொண் பத்து நாலூரைத் தோன் வாழியே!
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தோன் வாழியே!
இலங்கெழு கூற்றிருக்கை இருமடல் ஈந்தான் வாழியே!
இம்மூன்றில் இரு நூற்றிருபத்தேழு ஈந்தான் வாழியே!
வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே!
வாள் கலியன் பரகாலன் மங்கையர் கோன் வாழியே!

★★★★★

ஆழ்வார்க ளேற்றம் அருளிச் செயலேற்றம்
தாழ்வாது மின்றியவை தான்வளர்த்தோர் - ஏழ்பாரு
முய்யஅவர் கள் செய்த வியாக்கியைக ளுள்ளதெல்லாம்
வையமறி யப்பகர்வோம் வாய்ந்து

ஆழ்வார் களையும் அருளிச் செயல்களையும்
தாழ்வா நினைப்பவர்கள் தாம் நரகில் - வீழ்வார்க
ளென்றுநினைத் துநெஞ்சே! எப்பொழுதும் நீயவர்பால்
சென்றணுகக் கூசித் திரி.

- உபதேசரத்தினமாலை

★★★★★



வைணவ ஆச்சாரியர்கள் நாற்பதின்மர்

1. பெரியபெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன் வாழியே!
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே!
இருவிசும்பில் வீற்றிரக்கு மிகையவர்கோன் வாழியே!
இடர்கடியப் பாற்கடலை யெய்தினான் வாழியே!
அரியதயர தன்மகனா யவதரித்தான் வாழியே!
அந்தரியா மித்துவமு மாயினான் வாழியே!
பெருகிவரும் பொன்னிநடுப் பின் துயின்றான் வாழியே!
பெரிய பெருமாளெங்கன் பிரானடிகள் வாழியே!

ஸ்ரீமந் நாராயணன் - சங்குசக்ரதாரி - கருடவாகனர் ஆழ்வார்களை ஆட்கொண்ட அருள்வடிவினர். பூலோக வைகுண்டம் எனப்படும் திருஅரங்கத்தில் அமர்ந்து அருள்பாலிப்பவர்.

2. பெரிய பிராட்டியார்

பங்கயப்பூ விற்பிறந்த பாவை நல்லாள் வாழியே!
பங்குனியிலுத்தர நாள் பாருதித் தாள் வாழியே!
மங்கையர்கள் திலகமென வந்த செல்வி வாழியே!
மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள் வாழியே!
எங்களெழிற் சேனை மன்னர் நிதமுரைத்தாள் வாழியே!
இருபத்தஞ் சுட்பொருள்மா வியம்புமவள் வாழியே'
செங்கமலச் செய்யரங்கம் செழிக்கவந்தாள் வாழியே!
சீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே!

பாற்கடலில் பிறந்தவர். திருமாலினை அடைந்தவர். தாய் உள்ளம் முழுமையாகப் பெற்று, ஒவ்வொரு அவதாரங்களிலும் பெருமாளுடன் துணையாக இருப்பவர். பெற்ற தாயினும் மேலாக நம்மீது அன்பு செலுத்துபவர். 'ஸ்ரீ' என்னும் ஒரெழுத்துத் திருப் பெயரினைக் கொண்டவர்.

3. சேனைமுதலி/விஷ்வச்சேனர்

ஓங்கு துலாப்பூராடத் துதித்தசெல்வன் வாழியே!
ஒண்டொடியாள் சூத்ரவதியுறைமார்பன் வாழியே!
ஈங்குலகில் சடகோபற் கிதமுரைத்தான் வாழியே!
ஏழிற்பிரம்பின் செங்கோலை யேந்துமவன் வாழியே!
பாங்குடன் முப்பத்துமூவர் பணியுமவன் வாழியே!
பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே!
தேங்கு புகழரரங்கரையே சிந்தை செய்வோன் வாழியே!
சேனையர் கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே!

இவர் நித்தியசூரிகளில் ஒருவர். நித்தியசூரிகள் என்றால் பெருமானை முக்காலமும் சேவை செய்பவர்கள். வைணவ சமய வழிபாட்டில் இவருக்கே முதல் வழிபாடு. பின்புதான் மற்றவைகள் ஆரம்பிக்கப்படும். பெருமாளின் சேனைக்கெல்லாம் தலைவரானதால் இவரை சேனைமுதலி என அழைப்பர்.

4. ஸ்ரீமந் நாதமுனிகள்

ஆனிதனில் அனுசத்தில் அவதரித்தான் வாழியே!
ஆளவந்தார்க்குபதேசம் அருளிவைத்தான் வாழியே!
பானுதெற்கில் கண்டவன் சொல் பலவுரைத்தான் வாழியே!
பராங்குசனார் சொற்பிரபந்தம் பரிந்துகற்றான் வாழியே!
கானமுறத்தாளத்தில் கண்டுரைத்தான் வாழியே!
கருணையினால் உபதேசக்கதியளித்தான் வாழியே!
நானிலத்தில் குருவரையை நாட்டினான் வாழியே!
நலந்திகழும் நாதமுனி நற்பதங்கள் வாழியே!

கி.பி.822ல் ஆனிமாதம், அனுச நட்சத்திரத்தில் சோழநாட்டில் வீரநாராயணபுரத்தில் தோன்றினார். இவரது இயற்பெயர் ரெங்கநாதன். இவருடைய முக்கிய சீடர்கள், உய்யக்கொண்டாரும், குருகைக் காவலப்பனும் ஆவர்.

5. உய்யக்கொண்டார்

வாலவெய்யோன் தனைவென்ற வடிவழகன் வாழியே!
மால்மணக்கால் நம்பிதொழும் மலர்ப்பதத்தான் வாழியே!
சீலமிகு நாதமுனி சீருரைப்பான் வாழியே!
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தான் வாழியே!
நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே!
நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே!
மாலரங்க மணவாளர் வளமுரைப்பான் வாழியே!
வையமுய்யக் கொண்டவர் தாள் வையத்தில் வாழியே!

கி.பி.886-ல் சித்திரை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவெள்ளறையில் பிராமண குலத்தில் அவதரித்தார். இவருடைய குருநாதர் நாதமுனி ஆவார். இவருடைய வேறு பெயர்கள் பத்மாக்ஷர், அரவிந்தாக்ஷர் என்பதாகும்.

6. மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான்,

மேலையகத்தாழ்வான் (வரதாச்சார்யார்)

கீழையகத்தாழ்வான் (கிருஷ்ணமாச்சார்யார்)

இவர்கள் நாதமுனியின் மருமகன்கள். கிருஷ்ணமாச்சார்யார் ''ஸ்ரீதர யோக கல்பகத்திரு'' என்னும் பெயருடைய யோக சாத்திரங்களை எழுதினார்.

7. குருகைக் காவலப்பன்

மகரமதில் விசாகம் நாள் வந்துதித்தான் வாழியே!
மாறன்தான் நாதமுனி மலரடியோன் வாழியே!
நிகரில் நன் ஞானயோகம் நீண்டு செய்வோன் வாழியே!
நிர்ணயமா ஐந்து பொருள் நிலையறிவான் வாழியே!
அகமறுக்குமிராமர் பதம் ஆசையுள்ளோன் வாழியே!
ஆழ்வார்கள் மறையதனை ஆய்ந்துரைப்போன் வாழியே!
செகதலத்தில் குருகூரில் செனித்த வள்ளல் வாழியே!
செய்குருகைக் காவலப்பன் திருவடிகள் வாழியே!

இவர் பாண்டி நாட்டிலுள்ள திருக்குருகூரில் தைமாதம் விசாக நட்சத்திரத்தில் பிறந்தார். இவருடைய குருநாதர் நாதமுனி.

8. திருக்கண்ணமங்கையாண்டான்

திருக்கண்ணமங்கையில் பிறந்தவர். நாதமுனிகளின் முக்கிய சீடர்களில் இவரும் ஒருவர்.

9. மணற்கால் நம்பி

தேசமுய்யக் கொண்டவர் தாழ்சென்னி வைப்போன் வாழியே!
தென்னரங்கர் சீரருளைச் சேர்ந்திருப்போன் வாழியே!
தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன் வாழியே!
தமிழ்நாத முனியுகப்பைத் தாபித்தோன் வாழியே!
நேசமுடன் ஆரியனை நியமித்தோன் வாழியே!
நீணிலத்தில் பதின்மர் கலை நிறுத்தினோன் வாழியே!
மாசிமகந்தனில் விளங்கவந்துதித்தான் வாழியே!
மால் மணற்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே!

கி.பி. 929 -ல் லால்குடிக்கு அருகே மணற்கால் என்ற ஊரில், அந்தணர் குலத்தில் மாசிமாதம் மகநட்சத்திரத்தில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் ஸ்ரீராமமிச்ரர், ஸ்ரீராம் ஆகும்.

சீடர்கள்: ஆளவந்தார் என்ற யமுனாச்சாரியார், திருவரங்கப் பெருமாளரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சிறுபுள்ளூருடையார் பிள்ளை, திருமாலிருஞ்சோலை தாசர், வங்கிபுரத்தாச்சி.

10. ஆளவந்தார்/யமுனைத்துறைவர்

மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே!
மறைநான்கும் ஒருருவில் மகிழ்ந்து கற்றான் வாழியே!
பச்சையிட்ட இராமர் பதம் பகருமவன் வாழியே!
பாடியத்தோன் ஈடேறப்பார்வை செய்தோன் வாழியே!
கச்சிநகர் மாயனிருகழல் பணிந்தோன் வாழியே!
கடகவுத்த ராடத்துக் காலுதித்தோன் வாழியே!
அச்சமற மனமகிழ்ச்சியணைத்திட்டான் வாழியே!
ஆளவந்தார் தாளிணைகள் அனவரதம் வாழியே!

கி.பி. 976 -வது ஆண்டு ஆடிமாதம், பௌர்ணமி திதியில், உத்திராட நட்சத்திரத்தில், காட்டுமன்னார்குடியில் நாதமுனிகளின் புதல்வரான ஈசுவர முனிகளுக்கும் ஸ்ரீரங்க நாயகிக்கும் மகனாக அவதரித்தார். இவருடைய குருநாதர் - மணற்கால் நம்பி.

11. பெரியநம்பி

அம்புவியில் பதிமர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே!
ஆளவந்தார் தாளிணையை அடைந்துய்ந்தோன் வாழியே!
உம்பர்தொழும் அரங்கேசர்க்குப்புடையோன் வாழியே!
ஓங்கு தனுக்கேட்டை தனில் உதித்தபிரான் வாழியே!
வம்பவிழ்தார் வரதருரை வாழ்வளித்தான் வாழியே!
மாறனேரி நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே!
எம்பெருமானார் முனிவர்க்கிதமுரைத்தான் வாழியே!
எழில் பெரிய நம்பிசரண் இனி தூழி வாழியே!

கி.பி. 997 - 98-ல், மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில், பிராமண குலத்தில், பராங்குதாஸர் என்ற திருநாமத்தில் பெரியநம்பி அவதரித்தர்ர்.

12. திருக்கோட்டியூர் நம்பி

மன்னியசீர் ஆளவந்தார் மலர்ப்பதத்தோன் வாழியே!
வைகாசி ரோஹிணி நாள் வந்துதித்தோன் வாழியே!
இன்னிளவஞ்சிக்கினிதுரைத்தான் வாழியே!
எம்பெருமானாரெனும்பேர் இயம்புமவன் வாழியே!
தென்னணியாம் காசிபகோத்திரத்துதித்தான் வாழியே!
திருக்குருகைப்பிரான் எனும் பேர் திகழ வைத்தான் வாழியே!
முன்னரரும் பெரும்புதூர் முனிக்குரைத்தான் வாழியே!
மொழிந்த திருக்கோட்டி நம்பி மூதுலகில் வாழியே!

கி.பி. 987 -இல் பிராமண குலத்தில் பிறந்தார். இயற்பெயர் திருக்குருகைப் பிரான். இவரது வேறுபெயர்கள் கோட்டிபூரணர், கோட்டி புரீசர்.

13. திருமாலையாண்டான்

அம்புவியில் ஆளவந்தாரடியிணையோன் வாழியே!
ஆரியனாம் அவர் பதத்தை அன்பு செய்தோன் வாழியே!
வெம்பிவரும் வாதியரை வேர்களைந்தோன் வாழியே!
மேதினியில் நாலூர்விளக்க வந்தோன் வாழியே!
எம்பெருமானெதிராசர்க் கீடுரைத்தான் வாழியே!
ஏற்றமுள்ள மாசி மகமிலங்க வந்தோன் வாழியே!
வம்பவிழும் சோலைமலை வாழவந்தோன் வாழியே!
மாலாதராரியன் தாள் மாநிலத்தில் வாழியே!

திருமாலிருஞ்சோலையில் மாசிமாதம், மக நட்சத்திரத்தில் அவதரித்தார். இயற்பெயர் - ஞானபூரணர்.

இவர் அருளிய கிரந்தங்கள் - பிரமேயரத்தினம், தத்துவ பூஷணம்.

14. பெரியதிருமலை நம்பி

வைகாசி சோதிநாள் வந்துதித்தான் வாழியே!
வண்திருவேங்கட முடையான் வரபுத்ரன் வாழியே!
அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடிதொழுவோன் வாழியே!
அனவரதம் மலைகுனியோர்க்கு அடிமை செய்வோன் வாழியே!
மெய்யன் இராமானுசாரியன் விரும்புமவன் வாழியே!
மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான் வாழியே!
செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன் வாழியே!
திருமலை நம்பிகள் உபய திருவடிகள் வாழியே!

இவர் திருமலையில் அவதரித்தவர்.

15. திருவரங்கப்பெருமாளரையர்

நாதமுனி குலந்திகழ நன்குதித்தோன் வாழியே!
நற்றமிழின் மறைக்கிசையை நவின்றுரைப்போன் வாழியே!
காதலங்கேசரிரு கழல் பணிவோன் வாழியே!
கானவர நாவிசையால் களிப்பிப்போன் வாழியே!

ஏதமில் வண்கச்சியனை ஏத்திசைப்போன் வாழியே!
எதிபதியைப் பரிசாக ஏற்று வந்தோன் வாழியே!
தீதில் யமுனைத்துறைவன் சேவடியோன் வாழியே!
திருவரங்கப் பெருமாளரையர் திருவடிகள் வாழியவே!

கி.பி. 1017-ஆம் ஆண்டில், வைகாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தில், யமுனாச்சாரியார் - ஸ்ரீரங்கநாயகி இவர்களுக்குப் புதல்வராக அவதரித்தார்.

இவர் 115 ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

16. திருக்கச்சி நம்பி

மருவாருந்திருமல்லி வாழ வந்தோன் வாழியே!
மாசி மிருகசீரிடத்தில் வந்துதித்தோன் வாழியே!
அருளாளருடன் மொழிசொல் அதிசயத்தோன் வாழியே!
ஆறுமொழி பூதூரர்க் களித்த பிரான் வாழியே!
திருவாலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே!
தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே!
தெருளாரு மாளவந்தார் திருவடியோன் வாழியே!
திருக்கச்சி நம்பியிரு திருவடிகள் வாழியே!

சென்னைக்கு அருகில் உள்ள பூவிருந்தவல்லியில், வைசிகர் குலத்தில், வீரராகவருக்கும் - கமலைக்கும் மகனாக அவதரித்தார். இயற்பெயர் - கஜேந்திரதாசர். இவர் ஆளவந்தாரின், சீடர்களுள் ஒருவர். கச்சியில் வாழ்ந்தமையால் திருக்கச்சி என்றும் காஞ்சிமுனி என்றும் அழைக்கப்பட்டார்.

ஸ்ரீ ராமானுஜரின் ஐயங்களை நீக்கும் வகையில் இவர் அருளிய மெய்மொழிகளாவன,

1. நாராயணனே பரம்பொருள், 2. சித்தாந்தம் என்பது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு வேறு என்பதே, 3. சரணாகதியே மோட்சத்திற்கு சிறந்ததோர் சாதனம், 4. ஸ்ரீமந் நாராயணனை அந்திமக்காலத்தில் நினையவேண்டும் என்பது இல்லை, 5. வைகுண்ட பதவியானது பிரவியின் முடிவில் கிட்டும், 6. பெரியநம்பிகளே ஏற்கத்தக்க உகந்த ஆச்சாரியார்.

17. மாறனேரி நம்பி

ஆனிதனில் ஆயில்யம் அவதரித்தான் வாழியே!
ஆளவந்தார் திருவடிகள் ஆச்ரயித்தான் வாழியே!
மாநிலம் எதிராசர்மனம் வாழ்வித்தான் வாழியே!
மதிளரங்க நகரமதில் வாழ்ந்தருள்வோன் வாழியே!
தேனமருந்தென் மொழியின் சிறப்பறிந்தோன் வாழியே!
திகழ்ஞான பத்திகளால் சேர்ந்திருப்போன் வாழியே!
வானவரில் ஒருவரிங்கு மகிழ்ந்து வந்தோன் வாழியே!
மாறனேரி நம்பியிணை மலரடிகள் வாழியே!

பாண்டிய நாட்டில், புராந்தகம் என்னும் ஊரில், பஞ்சம குலத்தில், ஆடிமாதம், ஆயில்ய நட்சத்திரத்தில் அவதரித்தார். இவர் ஆளவந்தாரின் சீடர்களில் ஒருவர்.

18. தெய்வ வாரியாண்டான்

இவர் ஆளவந்தாரின் சீடர்.

19. எம்பெருமானார் (ஸ்ரீ இராமானுஜர்)

அத்திகிரி யருளாளரடி பணிந்தோன் வாழியே!
அருட்கச்சி நம்பியுரை யாறு பெற்றோன் வாழியே!
பக்தியுடன் பாடியதைப் பகிர்ந்திட்டோன் வாழியே!
பதின்மர் கலையுட் பொருளைப்பரிந்து
கற்றோன் வாழியே!



சுத்த மகிழ்மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே!
தொல் பெரிய நம்பி சரண்தோன்றினான் வாழியே!
சித்திரையில் ஆதிரை நாள் சிறக்க வந்தோன் வாழியே!
சீர்பெரும்புதூர் முனிவன் திருவடிகள் வாழியவே!

ஸ்ரீ வைணவ குலத்தில், கேசவசோமாயாஜி - காந்திமதி ஆகியோருக்கு மகனாக இராமானுஜர் பிங்களஆண்டு வியாழக் கிழமை, சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தார். ஆதிசேடனின் அம்சமாக உலகிற்கு மங்களமளிக்கும் ஒரு மகானாகத்

தோன்றினார். இளையனார் என்பது இவரின் இயற்பெயர். இவர் திருமேனியை ஆழ்வார் திருமேனிப்போல் அரங்கன் கோயிலுக்குள்ளே பள்ளிப் படுத்தி வைக்கப்பட்டது. இவர் 120 ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

எதிராஜர், உடையவர், பாஷ்யக்காரர், எம்பெருமானார், யதிபதி, மந்நாதர் என்பன இவருடைய வேறுபெயர்கள்.

ஸ்ரீமந் ஆளவந்தார் அவர்களுடைய மடங்கிய மூன்று விரல்கள் நேராகும் வண்ணம் இவர் மொழிந்த மெய்ம்மொழிகளாவன,

1. வைணவ மதத்தில் நிலைத்துநின்று அஞ்ஞான இருளில் அறிவு மயங்கிக்கிடக்கும் மாந்தர்களுக்குப் பஞ்ச சமஸ்காரம் செய்து தமிழ் வேதத்தைக் கற்பித்து ஸ்ரீமந் நாராயணனின் பாதார விந்தங்களில் அவர்களைக் கொண்டு சேர்த்தல்.
2. உலக நலன் கருதி அனைத்துத் தத்துவங்களையும் விளக்கக் கூடிய ஸ்ரீ பாஷ்யத்தை அருளிச் செய்வேன்.
3. விஷ்ணு புராணத்தை இயற்றிய முனிசிரேஷ்டரான ஸ்ரீபராசரரின் திருப்பெயரினை ஒரு வைணவருக்குச் சூட்டி மகிழ்வேன்.

20. கூரத்தாழ்வான்

சீராருந் திருப்பதிகள் சிறக்க வந்தோன் வாழியே!
தென்னரங்கர் சீரருளைச் சேருமவன் வாழியே!
பாராரும் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே!
பாடியத்தின் உட்பொருளைப் பகருமவன் வாழியே!
நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே!
நாலூரான் தனக்கு முக்தி நல்கினான் வாழியே!
ஏராருந் தையிலத்துத் திங்குவந்தான் வாழியே!
ஏழில் கூரத்தாழ்வான் தன் இணையடிகள் வாழியே!

கலியுகம் 4180ஆம் ஆண்டில் (சௌம்ய ஆண்டு) தை மாதம், ஹஸ்த நட்சத்திரத்தில், அனந்தர் -பெருந்தேவி நாயகி ஆகியோருக்கு மகனாய்க் காஞ்சிக்கருகில் கூரம் என்னும் ஊரில் அவதரித்தார். இவரது இயற்பெயர். திருமறுமார்பன் என்பதாகும்.

21. திருவரங்கத்தமுதனார்

எந்தாதை கூரேசர் இணையடியோன் வாழியே!
எழில் மூங்கிற்குடிவிளங்க இங்கு வந்தோன் வாழியே!
நந்தாமல் எதிராசர் நலம் புகழ்வோன் வாழியே!
நன்மதுரக் கவிநிலையை நண்ணினோன் வாழியே!
பைந்தாம அரங்கன் பதம் பற்றினான் வாழியே!
பங்குனியில் அத்தநாள் பாருதித்தான் வாழியே!
அந்தாதி நூற்றெட்டும் அருளினான் வாழியே!
அணியரங்கத்த முதனார் அடியிணைகள் வாழியே!

திருவரங்கத்தில், அணியரங்கத்த முதனாருக்கு மகனாகப் பங்குனி மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார். இவருக்கு ‘மூங்கில் குடியமுதனார்’ என்ற பெயரும் உண்டு. இவர் 128 ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

22. வடுக நம்பி

இவர் சர்வஜித் வருடம், மாசிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் சாலக்ராம ஐயன் மகனாக அவதரித்தார். இவருக்குச் சிறிய சாளக்ராம ஐயன், பஞ்சமோபாய சம்பந்தன் என்ற பெயரும் உண்டு. இவர் ‘ஸ்ரீயதிராஜ வைபவம்’ என்ற நூலினைப் படைத்தார்.

23. முதலியாண்டான்

அத்திகிரி யருளாள ரடிபணிந்தான் வாழியே!
அருட்பச்சை வாரணத்தில் அவதரித்தான் வாழியே!
சித்திரையிற் புனர்பூசம் சிறக்க வந்தான் வாழியே!
சீ பாடிய மீடுமுதல் சீர்பெறுவோன் வாழியே!
உத்தமமாம் வாதூலாம் உயரவந்தான் வாழியே!
ஊர் திருந்தச் சீர்பாத மூன்றினான் வாழியே!
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே!
முதலியாண்டான் பொற்பாதங்கள் ஊழிதோறும் வாழியே!

தொண்டை மண்டலத்தில், ஸ்ரீ புருஷமங்கலம் என்ற ஊரில் பிரபவ வருடம், சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் ஆனந்த

தீட்சிதர் - நாச்சியாரம்மாள் ஆகியோருக்கு மகனாக அவதரித்தார். இவரின் திருவாராதனப்பெருமாள் அழகியசிங்கர். ராமானுஜரின் சீடர்களுள் இவரும் ஒருவர்.

24. நடாதூராழ்வான்

ஸ்ரீவத்ச கோத்திரத்தில் பிறந்தவர். வரத விஷ்ணு என்ற பெயரும் உண்டு. எம்பெருமானரது எழுபத்து நான்கு மடாதிபதி களில் இவரும் ஒருவர்.

25. எங்களாழ்வான்

திருவெள்ளறையில், சித்திரைமாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித்தார். ஸ்ரீவிஷ்ணுசித்தர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. 74 மடாதிபதிகளில் இவரும் ஒருவர்.

26. எம்பார்

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே!
பொய்கைமுதல் பதின்மர் கலைப்பொருளுரைப்போன் வாழியே!
மாவளரும் பூதூரன் மலர்ப்பதத்தான் வாழியே!
மகரத்திற் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே!
தேவு மெப்பொருளும் படைக்கத் திருந்தினான் வாழியே!
திருமலை நம்பிக் கடிமை செய்யுமவன் வாழியே!
பாவையர்கள் கலவியிருள் பகலென்றான் வாழியே!
பட்டர்தொழும் எம்பார் பொற்பதமிரண்டும் வாழியே!

கி.பி. 1026-ல் குரோதன ஆண்டில், தை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில், ஸ்ரீ பெரும்புதூரை அடுத்த மதுரமங்கலத்தில் அவதரித்தார். தந்தையார் பெயர் கமலநயனபட்டர். கோவிந்தன் என்ற பெயரும் இவருக்கு உண்டு.

27. பட்டர்

தென்னரங்கர் மைந்தனெனச் சிறக்க வந்தோன் வாழியே!
திருநெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே!
அன்னவயல் பூதூரனடி பணிந்தோன் வாழியே!
அனவரதம் எம்பாருக்காட் செய்வோன் வாழியே!

மன்னு திருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே!
வைகாசியனுடத்தில் வந்துதித்தோன் வாழியே!
பன்னுகலை நால் வேதப்பயன் தெரிவோன் வாழியே!
பராசரனாம் சீர்பட்டர் பாருலகில் வாழியே!

ஸ்ரீரங்கத்தில், வைகாசி மாதம் அனுச நட்சத்திரத்தில் அவதரித்தார். இயற்பெயர் - பராசரபட்டர்.

28. நஞ்சீயர்

தெண்டிரை சூழ் திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே!
சீமாதவனென்னும் செல்வனார் வாழியே!
பண்டை மறைத்தமிழ்ப் பொருளைப் பகரவந்தோன் வாழியே!
பங்குனியில் உத்தரநாள் பாருதித்தான் வாழியே!
ஒண்டொடியாள் கலவிதன்னை ஒழித்திட்டான் வாழியே!
ஒண்பதினாயிரப் பொருளை ஓதுமவன் வாழியே!
எண்டிசையும் சீர்பட்ட ரிணையடியோன் வாழியே!
எழில் பெருகும் நம் ஜீயர் இனி தூழி வாழியே!

மேலநாட்டில் உள்ள திருநாராயணபுரத்தில், வடமாள் குலத்தில், பங்குனி மாதம், உத்திர நட்சத்திரத்தில் அவதரித்தார். நிகமாந்தயோகி, ஸ்ரீமாதவர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவர் ஆச்சார்யர், பராசரபட்டர். இவர் சீடர் நம்பிள்ளை.

29. நம்பிள்ளை

மாதகவா வெவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே!
காதலுடன் நஞ்சீயர் கழல் தொழுவோன் வாழியே!
கார்த்திகைக் கார்த்திகை உதித்த கலிகன்றி வாழியே!
போதமுடன் ஆழ்வார் சொற்பொருள் உரைப்போன் வாழியே!
பூதூரன் பாடியத்தை புகழும் அவன் வாழியே!
மதி அரங்கரோலக்கம் வளர்த்திட்டான் வாழியே!
நாதமுனி யாளவந்தார் நலம்புகழ்வோன் வாழியே!
நம்பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே!

சோழமண்டலத்தில் நம்பூர் என்னும் ஊரில், பிரபவ வருடம், கார்த்திகை மாதம் கிருத்திகை நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது

திருநாமங்கள், வரதராஜன், திருக்கலிகன்றிதாசர், கலிவைரிதாசர், நம்பிள்ளை, லோகாசார்யார், ஜகதாசார்யார், உலகாசிரியர் முதலியன நஞ்சீயர் சீடர்களில் முதன்மையானவர் நம்பிள்ளை.

30. பிள்ளை லோகாச்சாரியார்

அத்திகிரியருளாள ரனுமதியோன் வாழியே!
ஐப்பசியில் திருவோணத்தவதரித்தான் வாழியே!
முக்திநெறி மறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே!
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே!
நித்தியம் நம்பிள்ளை பதம் நெஞ்சில் வைப்போன் வாழியே!
நீள்வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே!
உத்தமமாம் முடும்பை நகருதித்த வள்ளல் வாழியே!
உலகாரியன் பதங்கள் ஊழிதோறும் வாழியே!

ஐப்பசி மாதம் திருவோணத்தில் பிறந்தவர். இவரது தம்பியே அழகியமணவாளப்பெருமாள் நாயனார். இவர் அருளிச்செய்த நூல்கள் - ஸ்ரீவசன பூஷணம், தத்வத்ரயம், முமுட்சுப்படி.

31. வடக்குத் திருவீதிப் பிள்ளை

ஆனிதனிற் சோதி நன்னாள் அவதரித்தான் வாழியே!
ஆழ்வார்கள் கலைப்பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே!
தான் உகந்த நம்பிள்ளை தாள்தொழுவோன் வாழியே!
சடகோபன் தமிழுக்கு ஈடு சாற்றினான் வாழியே!
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே!
நல்ல உலகாரியனை நமக்களித்தான் வாழியே!
ஈனமற எமையாளும் இறைவனார் வாழியே!
எங்கள் வடவீதிப் பிள்ளை இணையடிகள் வாழியே!

சர்வஜித்து ஆண்டு ஆனிமாதம், சுவாதி நட்சத்திரத்தில், ஸ்ரீரங்கத்தில் பிறந்து, வடக்குத் திருவீதியில் திருமாளிகை அமர்த்தி வாழ்ந்தார். அதன் காரணமாக வடக்குத் திருவீதிப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார். இவருக்குத் திராவிட வேதாந்த தேசிகர், ஸ்ரீகிருஷ்ணபாதர் என்ற பெயர்களும் உண்டு.

32. பெரிவாச்சான் பிள்ளை

சேங்கனூரில், ஆவணி மாதம், கிருஷ்ணாஷ்டமி ரோகிணி நட்சத்திரத்தில் யமுனாச்சாரியார் - நாச்சியாரம்மாள் ஆகியோருக்கு மகனாக அவதரித்தார். இவரின் இயற்பெயர் கிருஷ்ணன். இவரின் பிறபெயர்கள், பெரியவாச்சான்பிள்ளை, அபயப்பரதராஜர், ஸ்ரீமத் கிருஷ்ணர் என்பன. இவர் பல கிரந்தங்கள் அருளியுள்ளார். திருவாய் மொழிக்கு 24,000 படியும், மற்ற பிரபந்தங்களுக்கும் வியாக்யானம் செய்தருளினார்.

33. வாதிகேஸரி அழகியமணவாளப் பெருமாள் ஜீயர்

தென் தேசத்தில், பிரமதேசம் மன்னார்கோவிலில் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார். இவர் திருவாராதனம் அழகியசிங்கர். இவர் சீடர் - திருமலையாண்டான். பிறபெயர்கள் - வரதராஜர், சுந்தரஜா மாத்ருமுனி என்பனவாகும். இவர் அருளிய திருவாய்மொழிப் பதவுரை பன்னீராயிரப்படி எனப்படும்.

34. கூரகுலோத்தமதாசர்

சந்ததமுமாழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே!
தாரணியிற் சிறுநல்லூர் தானுடையோன் வாழியே!
எந்தை உலகாரியனை யிறைஞ்சுமவன் வாழியே!
இலகு துலாம் ஆதிரையிலிங்குதித்தான் வாழியே!
இந்த எலகத்தோர்க்கிதமுரைத்தோன் வாழியே!
எழில் வசனபூடணத்துக்கினிமை செய்தான் வாழியே!
குந்தி நகர் சிந்தை கொண்ட செல்வனார் வாழியே!
கூரகுலோத்தமதாசர் குரைகழல்கள் வாழியே!

இவர் அவதாரஸ்தலம் கோயில். இவரின் குலம் - பூர்வசிகை. ஐப்பசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தார். இவரின் திருவாராதனம் ஸ்ரீரங்கராஜர். இவரது சீடர்கள் - திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள்.

35. திருவாய்மொழிப்பிள்ளை

வையக மெண்சடகோபன் மறைவளர்த்தோன் வாழியே!
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே!
ஐயனருண் மாரிகலை ஆய்ந்துரைப்போன் வாழியே!
அழகாரு மெதிராசரடி பணிவோன் வாழியே!

துய்யவுலகாரியன் தன் துணைப்பதத்தோன் வாழியே!
தொல்குருகா புரியதனைத் துலக்கினான் வாழியே!
தெய்வநகர் குந்திதன்னில் சிறக்க வந்தோன் வாழியே!
திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகள் வாழியே!

பாண்டிய நாட்டில் குண்டிகை என்னும் ஊரில் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பிறந்தார். இவருக்குத் திருமலை ஆழ்வார், ஸ்ரீசைலேசர் என்ற பெயரும் உண்டு. பாண்டிய மன்னர்களின் அமைச்சராகப் பணிபுரிந்தவர். இவரின் ஆச்சார்யர் - கூர குலோத்தமதாசர். இவரின் சீடர்கள் - பெரிய ஜீயர், எம்பெருமானார் ஜீயர், சடகோபர் ஜீயர்.

36. கந்தாடையாண்டான்

இவரது அவதாரத் தலம் ஸ்ரீரங்கம். இவரது இயற்பெயர் கந்தாடை, தோழப்பர். இராமானுஜதாசர் என்ற பெயரும் உண்டு. இவருக்கு இவரது தகப்பனாரே ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை உபதேசித்து அருளினார்.

37. சிறியாயி - பெரியாயி

கந்தாடை தோழப்பர் குமாரர்கள் பெரியவரதாச்சாரியார், சின்ன வரதாச்சாரியார், இவர்கள் ஸ்ரீரங்கநாதருக்குக் கைங்கர்யங்களை செய்யும்போது ஒருநாள் பாலைக் காய்ச்சிப் பெரிய வரதாச்சாரியாருக்கு காண்பிக்கும்போது துரும்பு இருப்பதைக் கண்டு பெருமானின் தொண்டையில் மாட்டிக்கொள்ளுமே என்று மயங்கி நின்றபோது பெருமான் அவர்களுக்குக் காட்சி அருளித் தாயைப்போல வாத்ஸல்யம் உடையவராக இருப்பதால் அவர்களுக்குப் பெரியாயி, சிறியாயி என்று பெயர் வைத்து அருளினார்.

38. பின்பழகிய பெருமாள் ஜீயர்

இவருடைய திருநட்சத்திரம் ஐப்பசி சதயமாகும். இவர் மிகச் சிறந்த நூலான குரு பரம்பராப் ரபாவத்தை இயற்றினார்.

39. ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் - வேதாந்த தேசிகன்

வஞ்சப்பரசமயம் மாற்றவந்தோன் வாழியே!
மன்னுபுகழ்ப் பூதூரன் மனமுகப்போன் வாழியே!
கஞ்சத் திருமங்கை யுகக்க வந்தோன் வாழியே!
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே!

செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே!
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே!
தஞ்சப்பர கதியைத் தந்தருள்வோன் வாழியே!
தண்டமிழ்த் தூப்புல் திருவேங்கட வன்றாள் வாழியே!

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள தூப்புலில், புரட்டாசி திருவோணத்தில் அநந்தசூரி - தோதாரம்பாள் இவர்களுக்கு மகனாக அவதாரம் செய்தார். இவரின் ஆச்சாரியார் அப்புள்ளார். இவரிடம் கருடமந்திரத்தை உபாசித்து அவரது அருளால் ஹயக்ரீவர் அருளையும் பெற்றார். இவருடைய முக்கிய சீடர்கள் - நயினாராச்சார்யர், ப்ரஹ்மதந்தர ஸ்வத்தந்தர ஜீயர். அமிருதரஞ்சனி, அதிகார சங்கிரகம், அமிருதா சுவாதினி, பரமபதசோபானம், பரமதபங்கம், மெய் விரத மான்யம் மணவாள மாமுனிகள் முதலிய பிரபந்தங்களை அருளினார்.

40. மணவாள மாமுனிகள் (பெரிய ஜீயர்)

இப்புவியில் அரங்கேசர்க் கீடளித்தான் வாழியே!
எழில் திருவாய் மொழிப்பிள்ளை
இணையடியோன் வாழியே!
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே!
அரவரசப் பெருஞ்சோதி அனந்தனென்றும்
வாழியே!



எப்புவியும் ஸ்ரீசைல மேத்தவந்தான் வாழியே!
ஒராரு மெதிராசரெனவுதித்தான் வாழியே!
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே!
மூதரிய மணவாள மாமணிகள் வாழியே!

கி.பி. 137ஆம் ஆண்டு ஆழ்வார் திருநகரியில், ஐப்பசி மாதம் மூல நட்சத்திரத்தில், திருநாவீறுடையபிரான் தாஸரண்ணருக்கும், ரங்கநாச்சியாருக்கும் மகனாக அவதரித்தார். இவர் ஆதிசேஷன் அவதாரமாகக் கருதப்படுகிறார். இவர் திருமலையாழ்வாரிடம் சகல சாஸ்திரங்களையும் கற்றார். வானமாமலை ஜீயர், திருமலை பெரிய ஜீயர், பட்டர்பிரான் ஜீயர் மற்றும் பிரதிவாதி பயங்கரம் அண்ணா

என்பவர்கள் இவரின் சீடர்கள். உபதேசரத்தினமாலா, திருவாய்மொழி நூற்றந்தாதி, யதிராஜவிம்சதி, ஆர்த்திப் பிரபந்தம் போன்ற விசேஷ க்ரந்தங்களையும் இவர் அருளினார்.

இவருடைய திருஅவதார மாண்பினை,

பூதலத்தே, மாற்றற்ற செம்பொன்
மணவாள மாமுனி வந்திலனேல்,
ஆற்றில் கரைத்த புளியல்லவோ
தமிழ் ஆரணமே

எனும் தொடர்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

*****

மடநெஞ்சே வணங்கிடுவாய்

வஞ்சனையால் வந்தவன் - தன் உயிர் உண்டு வாய்த்த
தயிர் உண்டு, வெண்ணெய் அமுது உண்டு, வலிமிக்க
கஞ்சன் உயிர் - அது உண்டு, இவ்வுலகு உண்ட காளை
கருதும் இடம் - காவிரி சந்து, அகில், கனகம் உந்தி
மஞ்சு உலவு பொழிலூடும் வயலூடும் வந்து
வளம் கொடுப்ப, மா மறையோர் மாமலர்கள் தூவி
அஞ்சலித்து, அங்கு அரி சரண் என்று இறைஞ்சும் அணி நாங்கூர்
அரிமேய விண்ணகரம் - வணங்கு மட நெஞ்சே!

சரணாகதி மாண்பு

தீர்த்தனுக் கற்றபின் மற்றோர்
சரணில்லை யென்றெண்ணி, தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தன னாகிச்
செழுங்குரு கூர்ச்சட கோபன்சொன்ன,
தீர்த்தங்க ளாயிரத் துள்ளிவை
பத்தும்வல் லார்களை, தேவர்வைகல்
தீர்த்தங்க ளேயென்று பூசித்து
நல்கி யுரைப்பர்தம் தேவியர்க்கே

- திருவாய்மொழி

ஆழ்வாராதிகள் திருநட்சத்திரங்கள்

சித்திரை மாதம்

அசுவதி - வடுகநம்பி
கார்த்திகை - உய்யக்கொண்டார்
திருவாதிரை - எம்பெருமானார்
புனர்பூசம் - ஸ்ரீராமபிரான், முதலியாண்டான்
அஸ்தம் - கிடாம்பியாச்சான்
சித்திரை - மதுரகவிகள்

வைகாசி மாதம்

ரோகிணி - கோட்டியூர்நம்பி
அஸ்தம் - தேவப்பெருமாள்
சுவாதி - அழகியசிங்கர், பெரிய திருமலைநம்பி
விசாகம் - நம்மாழ்வார், திருவாய்மொழிப்பிள்ளை, திருநம்பி
அனுஷம் - பெரியபட்டர், கோயிற்கந்தாடை

ஆனி மாதம்

ஆயில்யம் - மாறனேர்நம்பி
சுவாதி - பெரியாழ்வார், வடக்குவீதிப்பிள்ளை, திருவரங்கபெருமாள்
அனுஷம் - நாதமுனிகள்
மூலம் - திருப்புளியாழ்வார்

ஆடி மாதம்

பூரம் - ஆண்டாள், கந்தாடைதோழப்பர்
அஸ்தம் - பத்ரிநாராயணப்பெருமாள்
சுவாதி - பக்ஷிராஜர்
உத்திராடம் - ஆளவந்தார், புண்டரீகாஷர்
திருவோணம் - தெற்காழ்வார்

ஆவணி மாதம்

ரோகிணி - ஸ்ரீகண்ணபிரான், பெரியவாச்சான்பிள்ளை, நைநாராச்சாம்பிள்ளை

புரட்டாசி மாதம்

விசாகம் - வருமலைநம்பி

திருவோணம் - வேதாந்த தேசிகன், திருவேங்கடத்தான்

ஐப்பசி மாதம்

திருவாதிரை - குருகுலோத்தாசர்

மூலம் - மணவாளமாமுனி,

பூராடம் - குருகைப்பிரான், சேனைமுதலியார்

திருவோணம் - பொய்கையாழ்வார், பிள்ளைலோகாசாரியார்

அவிட்டம் - பூதத்தாழ்வார், திருமலையாண்டான்

சதயம் - பேயாழ்வார்

உத்திரட்டாதி - விளாஞ்சோலைப்பெருமாள்

கார்த்திகை மாதம்

பரணி - மாதவப்பெருமாள்

கார்த்திகை - திருமங்கையாழ்வார், நம்பிள்ளை

ரோகிணி - திருப்பாணாழ்வார்

அனுசம் - கோடி, தாதாச்சாரியார்

மார்கழி மாதம்

அனுசம் - நாலூராச்சான்,

கேட்டை - தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியநம்பி,

அவிட்டம் - அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

தை மாதம்

மிருகசீரிஷம் - கோவலூர் எம்பெருமான்

புனர்பூசம் - எம்மார்

மகம் - திருமழிசையாழ்வார்

அஸ்தம் - கூரத்தாழ்வார்

விசாகம் - குருகைகாவலப்பன்

பூரட்டாதி - சொட்டைநம்பி

மாசி மாதம்

அசுவதி - சிறிய கோவிந்தப்பெருமாள்

மிருகசீரிஷம் - திருக்கச்சிநம்பி

புனர்பூசம் - குலசேகராழ்வார், திருமலையாண்டார், கந்தாடை யாண்டான்.

ஆயில்யம் - பிள்ளையுறங்காவில்லி

மகம் - மணக்கால்நம்பி

பங்குனி மாதம்

ரோகிணி - நம்பெருமாள்

பூசம் - செல்வப்பிள்ளை

உத்திரம் - ஸ்ரீரங்கநாச்சியார்

அஸ்தம் - திருவரங்கத்தமுதர்

ரேவதி - பெரியபெருமாள்

உத்திரம் - நஞ்சீயர்

பாகவத லக்ஷணம்

புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே போதுபோக்காகையும், இப்படியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களேற்ற மறிந்து உகந்திருக்கையும், திருமந்திரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞானமும் விரக்தியும் சாந்தியுமுடையவனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதம்.

-முமுக்ஷுப்படி



திருமாலிய இலக்கியங்கள்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் தொகுக்கப்பெற்ற வரலாறு

ஆழ்வார் புகழை ஏத்தி மகிழ்ந்து வாழ்ந்த மதுரகவி யாழ்வாரை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கண்டு ஆழ்வார் பாசுரம் சங்கப் பலகையில் இடம் பெற்றதா என்று கேட்க, ஆழ்வாரருளால் ''கண்ணன் கழலிணை'' என்ற அடியை எழுதிய முறியைப் பலகையில் வைக்க, அது ஏனைய புலவர்களை நீக்கி, முறியை மட்டுந்தாங்கி நின்றது. கண்ட தமிழ்ச்சங்கத்தாரும் திருவாய்மொழியின் ஏற்றத்தைப் ஏற்றுப் புகழ்ந்தனர்.

''நாதமுனி நாலாயிரம்பெற்றமை''

மதுரகவிகள் காலத்திற்குப்பின்பு நாலாயிரமும் காணப்பெற வில்லை. நம்மாழ்வார் பாட்டில் பயின்றவர் வீடு பேறெய்துவ ரென்றிருந்ததனாலும், இறக்கத் துணிந்தவர்களும் அவற்றைப் படித்துவரலாயினர். அதனால் சிலர் ஆட்கொல்லிப் பாட்டென அவற்றை அழிக்க முயன்றொழித்தனர்.

பிற்காலத்தில் தோன்றிய நாதமுனிகள் கும்பகோணத்தில் 'ஆராவமுதே'' என்னும் பதிகத்தை ஓர் முதியவள் பாடக்கேட்டு, ''இப்பத்துப் பாட்டுடனும் சேர்ந்த ஆயிரமும் எங்குள'' என்று வினவினார். முதியவள், தனக்குத் தெரியாதென்று வழங்காத வரலாற்றையும் கூறினாள்.

ஆயிரத்தையுமடையத் தென்குருகூரில் வந்து திருக்கோளூர் மதுரகவிகளின் வழியினரிடம் அவர் கேட்க அவர்களும் தமக்குத்

தெரியா தென்றும், நம்மாழ்வாரைத் தம் முன்னோர் பாடிய ''கண்ணினுண் சிறுத்தாம்பு'' என்னும் பத்துப்பாட்டுத்தான் தெரியுமென்றுங் கூறினர்.

''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்று தொடங்கும் பதிகத்தைப் புளிய மரத்தடியிலிருந்து ஒருமையுற்ற எண்ணத்துடன் ஐம்புலனையும் அடக்கிப் பன்னீராயிரமுறை கூறினால் ஆழ்வார் தோன்றுவார் என்று அவர்கள் உரைத்ததைக் கேட்டு ஸ்ரீமந் நாதமுனிகளும் அவ்வாறே செய்ய, ஆழ்வார் ஓர் முதியவராக வந்து, நாதமுனியிடம் ''இக்கலியில் ஆழ்வாராவது காட்சியளிப்பதாவது'' என்றிகழ்ந்துரைத்தனர். அதனால் சிறிதும் உள்ளஞ் சோராத நாதமுனிகள் தன் எண்ணம் ஈடேறாமற் போவதில்லை'' என்று விடையிறுத்துச் சொல்ல, ஆழ்வார் உரு வெளியாய் நின்று ''ஏழு திரையிட்டு யாம் கூறுவதை எழுதி நாலாயிரமும் பெற்றுக்கொள்'' என்று அருளினர். அவ்வாறே நாத முனிகளும் நாலாயிரத்தையும் பெற்று, அவற்றைப் பண வகுத்துப் பாடித் தன்னூராகிய வீர நாராயணபுரம் போய்ச் சேர்ந்தார். போகு முன் திருவத்யயன உத்ஸவத்தைத் திருவரங்கத்தில் ஆழ்வாரை எழுந்தருளச் செய்து நடத்தி வைத்தனர்.

		பாசுரங்கள்
1.	பொய்கை ஆழ்வார் : முதல் திருவந்தாதி (1)	100
2.	பூதத்தாழ்வார் : இரண்டாம் திருவந்தாதி (2)	100
3.	பேயாழ்வார் : மூன்றாம் திருவந்தாதி (3)	100
4.	திருமழிசை ஆழ்வார்: நான்முகன் திருவந்தாதி (4)	96
	திருச்சந்த விருத்தம் (5)	
5.	நம்மாழ்வார் : திருவிருத்தம் (6)	100
	திருவாசிரியம் (7)	7
	பெரிய திருவந்தாதி (8)	87
	திருவாய் மொழி (9)	1,102
6.	மதுரகவி ஆழ்வார் : கண்ணி நுண் சிறுத்தாம்பு (10)	11
7.	குல சேகராழ்வார் : பெருமாள் திருமொழி (11)	105
8.	பெரியாழ்வார் : பெரியாழ்வார் திருமொழி (12)	473
9.	ஆண்டாள் : திருப்பாவை (13)	30
	நாச்சியார் திருமொழி (14)	143
10.	தொண்டரடிப் திருப்பள்ளி எழுச்சி (15)	10

	பொடியாழ்வார்: திருமாலை (16)	45
11.	திருப் பாணாழ்வார் : அமலனாதிபிரான் (17)	10
12.	திருமங்கை ஆழ்வார் : பெரிய திருமொழி (18)	1084
	திருக்குறுந் தாண்டகம் (19)	20
	திருநெடுந் தாண்டகம் (20)	30
	திருவெழு கூற்றிருக்கை (21)	1
	சிறிய திருமடல் (22)	40
	பெரிய திருமடல் (23)	78
13.	திருவரங்கத்து அமுதனார் :	
	இராமானுஜ நூற்றந்தாதி (24)	108
	பிரபந்தங்கள் : 24 பாசுரங்கள்	4000

நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் (அப்பிள்ளை கோட்பாடு)

முதலாயிரம்	947	
திருமொழி	1134	
இயற்பா	591	
சிறிய திருமடல்	771/2	
பெரிய திருமடல்	148 1/2	
திருவாய்மொழி	1102	
	4000	பாடல்கள்

*****

நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தை சேவிப்பதன் முன்னர் கீழ்காணும் தனியன்களைச் சேவித்தல் வைஷ்ணவ சம்ப்ரதாயம் ஆகும்.

1. ஸ்ரீ மணவாள மாமுனிகள் தனியன்

(இது தென்கலையார் தொடக்கம்)

(அழகிய மணவாளன் அருளிச் செய்தது)

ஸ்ரீ ஸைலேஸ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த் ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

2. வேதாந்த தேசிகர் தனியன் (இது வடகலையார் தொடக்கம்)

(ஸ்ரீ பிரம்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் அருளிச் செய்தது)

ராமாநுஜ - தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய - பூஷணம்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஸிகம்

தென்கலையார் வடகலையார் இருவர்க்கும் பொதுவான தனியன்கள்

குருபரம்பரையின் தனியன்

(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுநமத் யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

எம்பெருமானார் தனியன்

(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

யோ நித்யமச்யுத பதாம்புஜயுக் மருக்ம
வ்யாமோஹதஸ்ததி தராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர் பகவதோஒஸ்ய தயைகஸிந்தே
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே

நம்மாழ்வார் தனியன்

(ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுளாபி ராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுக ளம் ப்ரணமாமி மூர்த்நா

ஆழ்வார்கள் உடையவர் தனியன்

(ஸ்ரீ பராசரபட்டர் அருளிச் செய்தது)

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாத்
பக்தாங்க் ரிரேணு பரகால யதீந்த் ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஒஸ்மி நித்யம்

*****

திவ்யப் பிரபந்த அடைவு - முதலாயிரம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
1	**திருப்பல்லாண்டு**	பல்லாண்டு	.1-12	வெண்செந்துறை	-	-
2.	**பெரியாழ்வார் திருமொழி**					
2.1.	*முதல் பத்து*					
2.1.1	முதல் திருமொழி	வண்ண மாடங்கள்	13-22	கலிவிருத்தம்	அபுருப	அட
2.1.2	இரண்டாம் திருமொழி	சீதக்கடல்	23-43	கலித்தாழிசை	தன்யாசி	ஆதி
2.1.3	மூன்றாம் திருமொழி	மாணிக்கங்கட்டி	44-53	கலித்தாழிசை	நீலாம்பரி	அட
2.1.4	நான்காம் திருமொழி	தன்முகத்து	54-62	கலிநிலைத்துறை	மோகனம்	அட
2.1.5	ஐந்தாம் திருமொழி	உய்ய உலகு	64-74	எண்சீர் விருத்தம்	முகாரி	ஆதி
2.1.6	ஆறாம் திருமொழி	மாணிக்க	75-85	கலித்தாழிசை	யமுனா கல்யாணி	ஆதி
2.1.7	ஏழாம் திருமொழி	தொடர் சங்கிலி	86-96	அறுசீர் விருத்தம்	அடாணா	ஆதி
2.1.8	எட்டாம் திருமொழி	பொன்னியல்	97-107	கலித்தாழிசை	தேசிய	ஆதி
2.1.9	ஒன்பதாம் திருமொழி	வட்டு நடுவே	108-117	கலித்தாழிசை	உசேனி	ரூபகம்
2.2.	*இரண்டாம் பத்து*					
2.2.1	முதல் திருமொழி	மெச்சூது	118-127	கலித்தாழிசை	பந்துவராளி	ரூபகம்
2.2..2	இரண்டாம் திருமொழி	அரவணையாய்	128-138	எண்சீர்	புண்ணாகவராளி	ரூபகம்
2.2.3	மூன்றாம் திருமொழி	போய்ப்பாடு	·139-151	எழுசீர் விருத்தம்	அசாவேரி	ஆதி
2.2.4	நான்காம் திருமொழி	வெண்ணெயளைந்த	152-161	அறுசீர் விருத்தம்	மிளகரி	சம்பை
2.2.5	ஐந்தாம் திருமொழி	பிள்ளைமணாளனை	162-171	கலித்தாழிசை	மத்தியமாவதி	ரூபகம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
2.2.6	ஆறாம் திருமொழி	வேலிக்கோல்	172-181	கலித்தாழிசை	தேசிய	ஆதி
2.2.7	ஏழாம் திருமொழி	ஆனிரை	182-191	அறுசீர் விருத்தம்	அடாணா	ரூபகம்
2.2.8	எட்டாம் திருமொழி	இந்திரனோடு	192-201	அறுசீர் விருத்தம்	தோடி	ரூபகம்
2.2.9	ஒன்பதாம் திருமொழி	வெண்ணெய் விழுங்கி	202-212	எண்சீர் விருத்தம்	கேதாரகௌளை	ஆதி
2.2.10	பத்தாம் திருமொழி	ஆற்றில் இருந்து	213-222	கலித்தாழிசை	நாதநாமக்கிரியை	ரூபகம்
2.3.	*மூன்றாம் பத்து*					
2.3.1	முதல் திருமொழி	தன்னேராயிரம்	223 - 233	எழுசீர் விருத்தம்	ஆரபி	ஆதி
2.3.2	இரண்டாம் திருமொழி	அஞ்சன வண்ணனை	234-243	கலிநிலைத்துறை	சங்கராபரணம்	ரூபகம்
2.3.3	மூன்றாம் திருமொழி	சீலைக்குதம்பை	244-253	எழுசீர் விருத்தம்	சுருட்டி	ஆதி
2.3.4	நான்காம் திருமொழி	தழைகளும்	254-263	எண்சீர் விருத்தம்	பைரவி	ஆதி
2.3.5	ஐந்தாம் திருமொழி	அட்டுக்குவி	264-274	எண்சீர் விருத்தம்	பந்துவராளி	அட
2.3.6	ஆறாம் திருமொழி	நாவலம்	275-285	எண்சீர் விருத்தம்	சாவேரி	ஆதி
2.3.7	ஏழாம் திருமொழி	ஐயபுழுதி	286-296	அறுசீர் விருத்தம்	யமுனாகல்யாணி	திரிபுடை
2.3.8	எட்டாம் திருமொழி	நல்லோர் தாமரை	297-306	அறுசீர் விருத்தம்	ஆனந்த பைரவி	ஆதி
2.3.9	ஒன்பதாம் திருமொழி	என்னாதன்	307-317	கலித்தாழிசை	செஞ்சுருட்டி	ரூபகம்
2.3.10	பத்தாம் திருமொழி	நெறிந்த கருங்குழல்	318-327	தரவுகொச்சகம்	கல்யாணி	ரூபகம்
2.4.	*நான்காம் பத்து*					
2.4.1	முதல் திருமொழி	கதிராயிரம்	328-337	அறுசீர் விருத்தம்	தோடி	அட
2.4.2	இரண்டாம் திருமொழி	அலம்பாவெருட்டா	338-348	கலிநிலைத்துறை	அடாணா	ஜம்பை
2.4.3	மூன்றாம் திருமொழி	உருப்பிணிநங்கை	349-359	கலிநிலைத்துறை	சகானா	ரூபகம்
2.4.4	நான்காம் திருமொழி	நாவகாரியம்	360-370	எழுசீர் விருத்தம்	நாதநாமக்கிரியை	அட

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
2.4.5.	ஐந்தாம் திருமொழி	ஆசைவாய்	371-380	எண்சீர் விருத்தம்	காணடா	ஆதி
2.4.6	ஆறாம் திருமொழி	காசுங்கறையுடை	381-390	கலித்துறை	மோகனம்	ரூபகம்
2.4.7	ஏழாம் திருமொழி	நங்கையைமுக்கும்	391-401	எழுசீர் விருத்தம்	அடாணா	திரிபுடை
2.4.8	எட்டாம் திருமொழி	மாதவத்தோன்	402-411	தரவுகொச்சகம்	சங்கராபரணம்	ஆதி
2.4.9	ஒன்பதாம் திருமொழி	மரவடியை	412-422	அறுசீர் விருத்தம்	தோடி	ஆதி
2.4.10	பத்தாம் திருமொழி	துப்புடையாரை	423-432	எண்சீர் விருத்தம்	ஆரபி	ஆதி
2.5.	*ஐந்தாம் பத்து*					
2.5.1	முதல் திருமொழி	வாக்குத்தூய்மை	433-442	எண்சீர் விருத்தம்	தன்யாசி	அடை
2.5.2	இரண்டாம் திருமொழி	நெய்க்குடத்தை	443-452	அறுசீர் விருத்தம்	பியாகடை	ரூபகம்
2.5.3	மூன்றாம் திருமொழி	துக்கச்சுழல்அலையை	453-462	அறுசீர் விருத்தம்	சகானா	அட
2.5.4	நான்காம் திருமொழி	சென்னியோங்கு	463-473	அறுசீர் விருத்தம்	ஸ்ரீராகம்	திரிபுடை
	ஆக பெரியாழ்வார் திருமொழி மொத்த பாசுரங்கள் - 461					
	ஸ்ரீவில்லிபுத்தூர் - ஆண்டாள்					
3.	**திருப்பாவை**	மார்கழித் திங்கள்	474-503	கொச்சகக் கலிப்பா	-	-
4.	**நாச்சியார் திருமொழி**					
4.1.	*முதல் திருமொழி*					
4.1.1	முதல் திருமொழி	தையொரு திங்களும்	504-513	அறுசீர் விருத்தம்	சாவேரி	ஆதி
4.1.2	இரண்டாம் திருமொழி	நாமமாயிரம்	514-523	எழுசீர் விருத்தம்	யமுனாகல்யாணி	திரிபுடை
4.1.3	மூன்றாம் திருமொழி	கோழியழைப்பதன்முன்	524 - 533	அறுசீர் விருத்தம்	சென்சுருட்டி	அடை

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
4.1.4	நான்காம் திருமொழி	தெள்ளியார் பலர்	534-544	கலிவிருத்தம்	கேதாரம்	அடை
4.1.5	ஐந்தாம் திருமொழி	மன்னுபெரும்புகழ்	545-555	எழுசீர் விருத்தம்	ஆனந்தபைரவி	ஆதி
4.1.6	ஆறாம் திருமொழி	வாரணமாயிரம்	556-566	கலிவிருத்தம்	கல்யாணி	ரூபகம்
4.1.7	ஏழாம் திருமொழி	கருப்பூரம் நாறுமோ	567-576	தரவுகொச்சகம்	வராளி	ரூபகம்
4.1.8	எட்டாம் திருமொழி	விண்ணிலமேலாப்பு	577-586	தரவுகொச்சகம்	குசரவந்தி	ஆதி
4.1.9	ஒன்பதாம் திருமொழி	செந்தூரச்செம்பொடி	587-596	கலிநிலைத்துறை	கல்யாணி	ரூபகம்
4.1.10	பத்தாம் திருமொழி	கார்கோடற்	597-606	கலிநிலைத்துறை	காம்போதி	திரிபுடை
4.1.11	பதினொன்றாம் திருமொழி	தாமுகக்கும்	607-616	தரவுகொச்சகம்	சாவேரி	திரிபுடை
4.1.12	பன்னிரண்டாம் திருமொழி	மற்றிருந்தீர்கட்கு	617-626	எண்சீர் விருத்தம்	நாதநாமக்கிரியை	ஆதி
4.1.13	பதின்மூன்றாம் திருமொழி	கண்ணன் என்னும்	627-636	அறுசீர் விருத்தம்	பைரவி	ரூபகம்
4.1.14	பதினான்காம் திருமொழி	பட்டிமேய்ந்து	637-646	அறுசீர் விருத்தம்	கல்யாணி	ரூபகம்
5.	**குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி**					
5.1	முதல் திருமொழி	இருளிரியச்சுடர்	647-657	எண்சீர் விருத்தம்	வந்துவராளி	ஆதி
5.2	இரண்டாம் திருமொழி	தேட்டருந்திறல்	658-667	எழுசீர் விருத்தம்	ஸ்ரீராகம்	ரூபகம்
5.3	மூன்றாம் திருமொழி	மெய்யில் வாழ்க்கையை	668-676	கலிவிருத்தம்	சௌராஷ்ட்ரா	அட
5.4	நான்காம் திருமொழி	ஊனேறு செல்வத்து	677-687	தரவுகொச்சகம்	தன்யாசி	திரிபுடை
5.5	ஐந்தாம் திருமொழி	தருதுயரம் தாடாயேல்	688-697	தரவுகொச்சகம்	சங்கராபரணம்	ரூபகம்
5.6	ஆறாம் திருமொழி	ஏர்மலர்பூங்குழல்	698-707	எண்சீர் விருத்தம்	செஞ்சுருட்டி	ஆதி
5.7	ஏழாம் திருமொழி	ஆலைநீள்கரும்பு	708-718	எண்சீர் விருத்தம்	கேதாரகௌள	அட
5.8	எட்டாம் திருமொழி	மன்னுபுகழ்	719-729	தரவுகொச்சகம்	நீலாம்பரி	திரிபுடை

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
5.9	ஒன்பதாம் திருமொழி	வண்தாளின்	730-740	அறுசீர் விருத்தம்	காம்போதி	ஆதி
5.10	பத்தாம் திருமொழி	அங்கண்நெடுமதில்	741-751	எண்சீர் விருத்தம்	கல்யாணி	ஆதி
	ஆக பெருமாள் திருமொழிப் பாசுரங்கள் - 105					
6.	திருமழிசையாழ்வார்	திருச்சந்தவிருத்தம்	752-871	எழுசீர் விருத்தம்	யமுனாகல்யாணி	ரூபகம்
7.	தொண்டரடிப்பொடியாழ்வார்	திருமாலை	872-916	அறுசீர் விருத்தம்	சகானா	ரூபகம்
8.	தொண்டரடிப்பொடியாழ்வார்	திருப்பள்ளிஎழுச்சி	917-926	நேரிசை வெண்பா	பூபாளம்	அட
9.	திருப்பாணாழ்வார்	அமலனாதிப்பிரான்	927-936	ஆசிரியத்துறை	யமுனா கல்யாணி	திரிபுடை
10.	மதுரகவியாழ்வார்	கண்ணிநுண்சிறுத்தாம்பு	937-947	கலிவிருத்தம்	ஆரபி	ஆதி
	ஆக முதலாயிரம் மொத்தப் பாசுரங்கள் - 947					
	திவ்யப் பிரபந்த அடைவு இரண்டாமாயிரம்					
திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி						
1.	*முதல் பத்து*					
1.1	முதல் திருமொழி	வாடினேன் வாடி	948-957	எழுசீர் விருத்தம்	சங்கராபரணம்	திரிபுடை
1.2	இரண்டாம் திருமொழி	வாலிமாவலத்து	958-967	அறுசீர் விருத்தம்	அடாணா	ஆதி
1.3	மூன்றாம் திருமொழி	முற்ற மூத்து	968-977	அறுசீர் விருத்தம்	முகாரி	ஆதி
1.4	நான்காம் திருமொழி	ஏனமுனாகி	978-987	எழுசீர் விருத்தம்	பந்துவராளி	ஆதி
1.5	ஐந்தாம் திருமொழி	கலையும்கரியும்	988-997	அறுசீர் விருத்தம்	பைரவி	ஆதி
1.6	ஆறாம் திருமொழி	வாணிலாமுறுவல்	998-1007	எழுசீர் விருத்தம்	காம்போதி	ஆதி
1.7	ஏழாம் திருமொழி	அங்கண் ஞாலம்	1008-1017	கலிநிலைத்துறை	கமாஸ்	ரூபகம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
1.8	எட்டாம் திருமொழி	கொங்கலர்ந்த	1018-1027	எழுசீர் விருத்தம்	யமுனாகல்யாணி	திரிபுடை
1.9	ஒன்பதாம் திருமொழி	தாயேதந்தை	1028-1037	கலிநிலைத்துறை	முகாரி	அட
1.10	பத்தாம் திருமொழி	கண்ணார்கடல்சூழ்	1038-1047	கலிவிருத்தம்	நாதநாமக்கிரியை	திரிபுடை
2.	**இரண்டாம் பத்து**					
2.1	முதல் திருமொழி	வானவர்	1048-1057	ஆசிரியத்துறை	ஆனந்தபைரவி	ரூபகம்
2.2	இரண்டாம் திருமொழி	காசையாடை	1058-1067	கலிநிலைத்துறை	கமாஸ்	ரூபகம்
2.3	மூன்றாம் திருமொழி	விற்பெருவிழவும்	1068-1077	எழுசீர் விருத்தம்	தோடி	ஆதி
2.4	நான்காம் திருமொழி	அன்றாயர்	1078-1087	எண்சீர் விருத்தம்	கல்யாணி	ஆதி
2.5	ஐந்தாம் திருமொழி	பாராயது	1088-1097	எண்சீர் விருத்தம்	கல்யாணி	ஆதி
2.6	ஆறாம் திருமொழி	நண்ணாத	1098-1107	தரவுகொச்சகம்	சகானா	ரூபகம்
2.7	ஏழாம் திருமொழி	திவளும்	1108-1117	எழுசீர் விருத்தம்	சாவேரி	ஆதி
2.8	எட்டாம் திருமொழி	திரிபுரம்	1118-1127	அறுசீர் விருத்தம்	தர்பார்	ரூபகம்
2.9	ஒன்பதாம் திருமொழி	சொல்லு	1128-1137	எழுசீர் விருத்தம்	யமுனாகல்யாணி	ரூபகம்
2.10	பத்தாம் திருமொழி	மஞ்சாடு	1138-1147	எண்சீர் விருத்தம்	ஆரபி	ஆதி
3.	**மூன்றாம் பத்து**					
3.1	முதல் திருமொழி	இருந்தண்மாநிலம்	1148-1157	அறுசீர் விருத்தம்	செஞ்சுருட்டி	ஆதி
3.2	இரண்டாம் திருமொழி	ஊன்வாட	1158-1167	எண்சீர் விருத்தம்	சங்கராபரணம்	அட
3.3	மூன்றாம் திருமொழி	வாடமருதிடை	1168-1177	அறுசீர் விருத்தம்	மோகனம்	ஆதி
3.4	நான்காம் திருமொழி	ஒருகுறளாய்	1178-1187	எண்சீர் விருத்தம்	பியாகடை	ரூபகம்
3.5	ஐந்தாம் திருமொழி	வந்துனது	1188-1197	ஆசிரியத்துறை	சாவேரி	ஆதி

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
3.6	ஆறாம் திருமொழி	தூவிரிய	1198-1207	தரவுகொச்சகம்	நாதநாமக்கிரியை	ரூபகம்
3.7	ஏழாம் திருமொழி	கள்வன்கொல்	1208-1217	கலிநிலைத்துறை	துவஜாவந்தி	ஆதி
3.8	எட்டாம் திருமொழி	நந்தாவிளக்கே	1218-1227	எண்சீர்விருத்தம்	தோடி	அட
3.9	ஒன்பதாம் திருமொழி	சலங்கொண்ட	1228-1237	எண்சீர் விருத்தம்	அடாணா	அட
3.10	பத்தாம் திருமொழி	திருமடந்தை	1238-1247	எண்சீர் விருத்தம்	மோகனம்	ஜம்பை
4.	*நான்காம் பத்து*					
4.1	முதல் திருமொழி	போதலர்ந்த	1248-1257	கொச்சகக்கலிப்பா	பைரவி	ஆதி
4.2	இரண்டாம் திருமொழி	கம்பமா	1258-1267	அறுசீர் விருத்தம்	கல்யாணி	ரூபகம்
4.3	மூன்றாம் திருமொழி	பேரணிந்து	1268-1277	எழுசீர் விருத்தம்	பந்துவராளி	அட
4.4	நான்காம் திருமொழி	மாற்றரசர்	1278-1287	எண்சீர் விருத்தம்	செஞ்சுருட்டி	ரூபகம்
4.5	ஐந்தாம் திருமொழி	தூம்புடை	1288-1297	அறுசீர் விருத்ம்	பிலகரி	ஆதி
4.6	ஆறாம் திருமொழி	தாவளந்து	1298-1307	அறுசீர் விருத்தம்	மத்யமாவதி	ரூபகம்
4.7	ஏழாம் திருமொழி	கண்ணார்கடல்	1308-1317	கலிவிருத்தம்	தேசிய	அட
4.8	எட்டாம் திருமொழி	கவளயானை	1318-1327	எண்சீர் விருத்தம்	தன்யாசி	அட
4.9	ஒன்பதாம் திருமொழி	நும்மைத்தொழுதோம்	1328-1337	அறுசீர் விருத்தம்	தோடி	அட
4.10	பத்தாம் திருமொழி	ஆய்ச்சியர்	1338-1347	எழுசீர் விருத்தம்	மோகனம்	அட
5.	*ஐந்தாம் பத்து*					
5.1	முதல் திருமொழி	அறிவதரியான்	1348-1357	அறுசீர் விருத்தம்	பந்துவராளி	ரூபகம்
5.2	இரண்டாம் திருமொழி	தாந்தம்	1358-1367	கலிவிருத்தம்	அபரூப	ஆதி

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
5.3	மூன்றாம் திருமொழி	வென்றி	1368-1377	அறுசீர் விருத்தம்	சங்கராபரணம்	ரூபகம்
5.4	நான்காம் திருமொழி	உந்திமேல்	1378-1387	கலிநிலைத்துறை	சகானா	அட
5.5	ஐந்தாம் திருமொழி	வெருவாதாள்	1388-1397	அறுசீர் விருத்தம்	காம்போதி	ஆதி
5.6	ஆறாம் திருமொழி	கைம்மானம்	1398-1407	தரவுகொச்சகம்	பைரவி	ரூபகம்
5.7	ஏழாம் திருமொழி	பண்டை	1408-1417	எழுசீர் விருத்தம்	சாவேரி	ஆதி
5.8	எட்டாம் திருமொழி	ஏழையே தலன்	1418-1427	எண்சீர் விருத்தம்	தன்யாசி	ஆதி
5.9	ஒன்பதாம் திருமொழி	கையிலங்கு	1428-1437	அறுசீர் விருத்தம்	அடாணா	ஜம்பை
5.10	பத்தாம் திருமொழி	தீதறு	1438-1447	அறுசீர் விருத்தம்	சுருட்டி	ஜம்பை
6.	*ஆறாம் பத்து*					
6.1	முதல் திருமொழி	வண்டுனு	1448-1457	வஞ்சி விருத்தம்	புன்னாகவராளி	ஆதி
6.2	இரண்டாம் திருமொழி	பொறுத்தேன்	1458-1467	கலிநிலைத்துறை	நாதநாமக்கிரியை	ஆதி
6.3	மூன்றாம் திருமொழி	துறப்பேன்	1468-1477	கலிநிலைத்துறை	ஆனந்தபைரவி	ஆதி
6.4	நான்காம் திருமொழி	கண்ணும் சுழன்று	1478-1487	கலிநிலைத்துறை	பந்துவராளி	ஜம்பை
6.5	ஐந்தாம் திருமொழி	கலங்கமுந்நீர்	1488-1497	கலிநிலைத்துறை	செஞ்சுருட்டி	அட
6.6	ஆறாம் திருமொழி	அம்பரமும்	1498-1507	எண்சீர் விருத்தம்	தோடி	ஆதி
6.7	ஏழாம் திருமொழி	ஆளும்பணியும்	1508-1517	அறுசீர் விருத்தம்	ஆரபி	ரூபகம்
6.8	எட்டாம் திருமொழி	மான்கொண்ட	1518-1527	தரவுகொச்சகம்	பைரவி	ஜம்பை
6.9	ஒன்பதாம் திருமொழி	பெடையடர்த்த	1528-1537	தரவுகொச்சகம்	யமுனாகல்யாணி	ரூபகம்
6.10	பத்தாம் திருமொழி	கிடந்த நம்பி	1538-1547	அறுசீர் விருத்தம்	கமாஸ்	திரிபுடை

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
7.	ஏழாம் பத்து					
7.1	முதல் திருமொழி	சுறவமாட	1548-1557	கலிவிருத்தம்	முகாரி	ரூபகம்
7.2	இரண்டாம் திருமொழி	புள்ளாய் ஏனமுமாய்	1558-1567	கலிநிலைத்துறை	கேதாரகௌளம்	ஆதி
7.3	மூன்றாம் திருமொழி	சினவில்	1568-1577	எண்சீர் விருத்தம்	மோகனம்	ரூபகம்
7.4	நான்காம் திருமொழி	கண்சோர	1578-1587	அறுசீர் விருத்தம்	அசாவேரி	அட
7.5	ஐந்தாம் திருமொழி	தந்தைகாலில்	1588-15497	அறுசீர் விருத்தம்	சௌராஷ்ட்ர	அட
7.6	ஆறாம் திருமொழி	சிங்கமதாய்	1598-1607	கலிநிலைத்துறை	மத்தியமாவதி	ரூபகம்
7.7	ஏழாம் திருமொழி	திருவுக்கும்	1608-1617	எண்சீர் விருத்தம்	செஞ்சுருட்டி	ரூபகம்
7.8	எட்டாம் திருமொழி	செங்கமலம்	1618-1627	எண்சீர் விருத்தம்	பியாகடை	ஆதி
7.9	ஒன்பதாம் திருமொழி	கள்ளம்மனம்	1628-1637	கலிவிருத்தம்	அபரூப	ஆதி
7.10	பத்தாம் திருமொழி	பெரும்புறக்கடலை	1638-1647	எண்சீர் விருத்தம்	தோடி	அடை
8.	எட்டாம் பத்து					
8.1	முதல் திருமொழி	சிலையிலங்கு	1648-1657	அறுசீர் விருத்தம்	காம்போஜி	ரூபகம்
8.2	இரண்டாம் திருமொழி	தெள்ளியீர்	1658-1667	தரவுகொச்சகம்	சைந்தவி	அட
8.3	மூன்றாம் திருமொழி	கரையெடுத்த	1668-1677	தரவுகொச்சகம்	கேதாரகௌளம்	ரூபகம்
8.4	நான்காம் திருமொழி	விண்ணவர்	1678-1687	தரவுகொச்சகம்	கமாஸ்	ஆதி
8.5	ஐந்தாம் திருமொழி	தந்தை	1688-1697	அறுசீர் விருத்தம்	நாதநாமக்கிரியை	ரூபகம்
8.6	ஆறாம் திருமொழி	தொண்டீர்	1698-1707	அறுசீர் விருத்தம்	நாதநாமக்கிரியை	ரூபகம்
8.7	ஏழாம் திருமொழி	வியமுடை	1708-1717	கலிவிருத்தம்	அபரூப	ஆதி

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
8.8	எட்டாம் திருமொழி	வானோர் அளவும்	1718-1727	அறுசீர் விருத்தம்	சாவேரி	ரூபகம்
8.9	ஒன்பதாம் திருமொழி	கைம்மானம்	1728-1737	தரவுகொச்சகம்	மோகனம்	திரிபுடை
8.10	பத்தாம் திருமொழி	வண்டார்	1738-1747	தரவுகொச்சகம்	சௌராஷ்ட்ரா	ரூபகம்
9.	*ஒன்பதாம் பத்து*					
9.1	முதல் திருமொழி	வங்கமாமுந்நீர்	1748-1757	எழுசீர் விருத்தம்	அரபி	அட
9.2	இரண்டாம் திருமொழி	பொன்னிவர்மேனி	1758-1767	எண்சீர் விருத்தம்	சாரங்க	ஆதி
9.3	மூன்றாம் திருமொழி	தன்னை	1768-1777	கலிநிலைத்துறை	சங்கராபரணம்	ரூபகம்
9.4	நான்காம் திருமொழி	காவார்	1778-1787	தரவுகொச்சகம்	காம்போதி	அட
9.5	ஐந்தாம் திருமொழி	தவளஇளம்பிறை	1788-1797	அறுசீர் விருத்தம்	ஆனந்தபைரவி	அட
9.6	ஆறாம் திருமொழி	அக்கும்புலியின்	1798-1807	கலிநிலைத்துறை	அடாணா	ரூபகம்
9.7	ஏழாம் திருமொழி	தந்தைதாய்	1808-1817	கலிநிலைத்துறை	தன்யாசி	ரூபகம்
9.8	எட்டாம் திருமொழி	முந்துற	1818-1827	எழுசீர் விருத்தம்	சுருட்டி	அட
9.9	ஒன்பதாம் திருமொழி	மூவரில்	1828-1837	கலிநிலைத்துறை	கமாஸ்	ரூபகம்
9.10	பத்தாம் திருமொழி	எங்கள்	1838-1847	ஆசிரியத்துறை	யமுனாகல்யாணி	அட
10.	*பத்தாம் பத்து*					
10.1	முதல் திருமொழி	ஒருநல்சுற்றம்	1848-1857	கலிவிருத்தம்	தர்பார்	அட
10.2	இரண்டாம் திருமொழி	இரக்கமின்றி	1858-1867	எண்சீர் விருத்தம்	பியாகடை	ஆதி
10.3	மூன்றாம் திருமொழி	ஏத்துகின்றோம்	1868-1877	அறுசீர் விருத்தம்	கல்யாணி	திரிபுடை
10.4	நான்காம் திருமொழி	சந்தமலர்	1878-1887	அறுசீர் விருத்தம்	புன்னாகவராளி	ரூபகம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
10.5	ஐந்தாம் திருமொழி	பூங்கோதை	1888-1897	கலித்தாழிசை	யமுனாகல்யாணி	ஆதி
10.6	ஆறாம் திருமொழி	எங்கானும்	1898-1907	எண்சீர் விருத்தம்	சாவேரி	அட
10.7	ஏழாம் திருமொழி	மானமுடைத்து	1908-1921	எழுசீர் விருத்தம்	கேதாரகௌள	அட
10.8	எட்டாம் திருமொழி	காதிற்கடிப்பு	1922-1931	கலிவிருத்தம்	உசேனி	ரூபகம்
10.9	ஒன்பதாம் திருமொழி	புள்ளுருவாகி	1932-1941	எழுசீர் விருத்தம்	-	-
10.10	பத்தாம் திருமொழி	திருத்தாய்	1942-1951	வெண்டுறை	பரசு	ஆதி
11.	*பதினோராம் பத்து*					
11.1	முதல் திருமொழி	குன்றமொன்று	1952-1961	கலிவிருத்தம்	காணடா	ஆதி
11.2	இரண்டாம் திருமொழி	குன்றமெடுத்து	1962-1971	கலிநிலைத்துறை	கௌளிபந்து	ஆதி
11.3	மூன்றாம் திருமொழி	மன்னிலங்கு	1972-1981	தரவுகொச்சகம்	ஸ்ரீராகம்	ரூபகம்
11.4	நான்காம் திருமொழி	நிலையிடம்	1982-1991	எண்சீர்விருத்தம்	அடாணா	திரிபுடை
11.5	ஐந்தாம் திருமொழி	மானமரும்	1992-2001	தரவுகொச்சகம்	கனடா	ஆதி
11.6	ஆறாம் திருமொழி	மைந்நின்ற	2002-2011	அறுசீர் விருத்தம்	நீலாம்பரி	அட
11.7	ஏழாம் திருமொழி	நீள்நாகம்	2012-2021	தரவுகொச்சகம்	வராளி	ரூபகம்
11.8	எட்டாம் திருமொழி	மாற்றமுள	2022-2031	கலிவிருத்தம்	மாஞ்சி	அட
	திருக்குறுந்தாண்டகம்	நிதியினை	2032-2051	அறுசீர் விருத்தம்	தோடி	ரூபகம்
	திருநெடுந்தாண்டகம்	மின்னுருவாய்	2052-2081	எண்சீர் விருத்தம்	கல்யாணி	அட
	ஆக இரண்டாயிரம் மொத்தப் பாசுரங்கள் - 1134					

இயற்பா - மூன்றாம் ஆயிரம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	ஆழ்வார்	பாசுர எண்கள்	மொத்தம்
1.	முதல் திருவந்தாதி	வையம்	பொய்கையாழ்வார்	2082-2181	100
2.	இரண்டாம் திருவந்தாதி	அன்பே	பூதத்தாழ்வார்	2182-2281	100
3.	மூன்றாம் திருவந்தாதி	திருக்கண்டேன்	பேயாழ்வார்	2282-2381	100
4.	நான்காம் திருவந்தாதி	நான்முகனை	திருமழிசையாழ்வார்	2382-2477	96
5.	திருவிருத்தம்	பொய்ந்நின்ற	நம்மாழ்வார்	2478-2577	100
6.	திருவாசிரியம்	செக்கர்மாமுகில்	நம்மாழ்வார்	2578-2584	7
7.	பெரிய திருவந்தாதி	முயற்றி	நம்மாழ்வார்	2585-2671	87
8.	திருவெழுகூற்றிருக்கை	ஒருபேருந்தி	திருமங்கையாழ்வார்	2672	1
9.	சிறிய திருமடல்	காரார்வரை	திருமங்கையாழ்வார்	2673	1
10.	பெரிய திருமடல்	மண்ணியபல்பொறி	திருமங்கையாழ்வர்	2674	1
	ஆக மூன்றாம் ஆயிரம் மொத்தப் பாசுரங்கள் - 593				

நான்காம் ஆயிரம்

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
	நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி					
1.	*முதல் பத்து*					
1.1	முதல் திருவாய்மொழி	உயர்வற	2675-2685	கலிவிருத்தம்	முதிர்ந்த குறிஞ்சி	ஏழொத்து
1.2	இரண்டாம் திருவாய்மொழி	வீடுமின்	2686-2696	வஞ்சித்துறை	முதிர்ந்த குறிஞ்சி	ஏழொத்து
1.3	மூன்றாம் திருவாய்மொழி	பத்துடை	2697-2707	கலிநிலைத்துறை	நட்டபாடை	ஏழொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுரஎண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
1.4	நான்காம் திருவாய்மொழி	அஞ்சிறைய	2708-2718	தரவுகொச்சகம்	நட்டபாடை	ஏழொத்து
1.5	ஐந்தாம் திருவாய்மொழி	வளவேழ்	2719-2729	அறுசீர் விருத்தம்	செருந்தி	ஏழொத்து
1.6	ஆறாம் திருவாய்மொழி	பரிவதில்	2730-2740	வஞ்சிவிருத்தம்	முதிர்ந்த குறிஞ்சி	ஏழொத்து
1.7	ஏழாம் திருவாய்மொழி	பிறவித்துயர்	2741-2751	கலிவிருத்தம்	வியநதம்	ஏழொத்து
1.8	எட்டாம் திருவாய்மொழி	ஓடும்புள்	2752-2762	வஞ்சித்துறை	இந்தளம்	ஏழொத்து
1.9	ஒன்பதாம் திருவாய்மொழி	இவையும்அவையும்	2763-2773	அறுசீர் விருத்தம்	கொல்லி	ஆதி
1.10	பத்தாம் திருவாய்மொழி	பொருமாநீள்படை	2774-2784	கலிவிருத்தம்	தக்கராகம்	ஏழொத்து
2.	இரண்டாம் பத்து					
2.1	முதல் திருவாய்மொழி	வாயும் திரையு	2785-2795	தரவுகொச்சகம்	புறநீர்மை	இடையொத்து
2.2	இரண்டாம் திருவாய்மொழி	திண்ணன் வீடு	2796-2806	வஞ்சிவிருத்தம்	தக்கராகம்	ஏழொத்து
2.3	மூன்றாம் திருவாய்மொழி	ஊனில் வாழ்	2807-2817	கலிநிலைத்துறை	நாட்டம்	ஏழொத்து
2.4	நான்காம் திருவாய்மொழி	ஆடிஆடி	2818-2828	வஞ்சிவிருத்தம்	நாட்டம்	ஏழொத்து
2.5	ஐந்தாம் திருவாய்மொழி	அந்தாமத்தன்பு	2829-2839	கொச்சக்கலிப்பா	-	-
2.6	ஆறாம் திருவாய்மொழி	வைகுந்தா	2840-2850	ஆசிரியத்துறை	பழந்தக்கராகம்	ஏழொத்து
2.7	ஏழாம் திருவாய்மொழி	கேசவன் தமர்	2851-2861	அறுசீர் விருத்தம்	தக்கராகம்	ஏழொத்து
2.8	எட்டாம் திருவாய்மொழி	அணைவது	2864-2874	தரவுகொச்சகம்	இந்தளம்	ஏழொத்து
2.9	ஒன்பதாம் திருவாய்மொழி	எம்மாவீடு	2875-2885	கலிவிருத்தம்	முதிர்ந்த குறிஞ்சி	ஏழொத்து
2.10	பத்தாம் திருவாய்மொழி	கிளரொளி	2886-2896	கலிவிருத்தம்	நாட்டம்	ஏழொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
3.	மூன்றாம் பத்து					
3.1	முதல் திருவாய்மொழி	முடிச்சோதி	2897-2907	தரவுகொச்சகம்	இந்தளம்	நடையொத்து
3.2	இரண்டாம் திருவாய்மொழி	முந்நீர் ஞாலம்	2908-2918	கலிவிருத்தம்	சீகாமரம்	ஏழொத்து
3.3	மூன்றாம் திருவாய்மொழி	ஒழிவில்காலம்	2919-2929	கலிவிருத்தம்	பழந்தக்கராகம்	ஏழொத்து
3.4	நான்காம் திருவாய்மொழி	புகழுநல்லொருவன்	2930-2940	அறுசீர் விருத்தம்	நாட்டம்	ஒன்பதுஒத்து
3.5	ஐந்தாம் திருவாய்மொழி	மொய்ம்மாம்	2941-2951	அறுசீர் விருத்தம்	சீகாமரம்	இடையொத்து
3.6	ஆறாம் திருவாய்மொழி	செய்யதாமரை	2952-2962	எழுசீர் விருத்தம்	தக்கராகம்	ஏழொத்து
3.7	ஏழாம் திருவாய்மொழி	பயிலும்	2963-2973	கலிநிலைத்துறை	நாட்டம்	ஏழொத்து
3.8	எட்டாம் திருவாய்மொழி	முடியானே	2974-2984	கலிவிருத்தம்	இந்தளம்	ஏழொத்து
3.9	ஒன்பதாம் திருவாய்மொழி	சொன்னால்	2985-2995	கலிநிலைத்துறை	முதிர்ந்தகுறிஞ்சி	ஏழொத்து
3.10	பத்தாம் திருவாய்மொழி	சன்மம் பலபல	2996-3006	அறுசீர் விருத்தம்	நாட்டம்	ஏழொத்து
4.	நான்காம் பத்து					
4.1	முதல் திருவாய்மொழி	ஒருநாயகம்	3007-3017	கலிநிலைத்துறை	நாட்டம்	ஏழொத்து
4.2	இரண்டாம் திருவாய்மொழி	பாலனாய்	3018-3028	கலிவிருத்தம்	நட்டபாடை	ஒன்பதொத்து
4.3	மூன்றாம் திருவாய்மொழி	கோவைவாயாள்	3029-3039	அறுசீர் விருத்தம்	-	-
4.4	நான்காம் திருவாய்மொழி	மண்ணை	3040-3050	அறுசீர் விருத்தம்	பஞ்சமம்	இடையொத்து
4.5	ஐந்தாம் திருவாய்மொழி	வீற்றிருந்து	3051-3061	கலிநிலைத்துறை	இந்தளம்	ஒன்பதொத்து
4.6	ஆறாம் திருவாய்மொழி	தீர்ப்பாரை	3062-3072	கலிநிலைத்துறை	சீகாமரம்	இடையொத்து
4.7	ஏழாம் திருவாய்மொழி	சீலமில்லா	3073-3083	அறுசீர் விருத்தம்	பழந்தக்கராகம்	ஏழொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
4.8	எட்டாம் திருவாய்மொழி	ஏறாளும்	3084-3094	தரவுகொச்சகம்	நாட்டம்	ஏழொத்து
4.9	ஒன்பதாம் திருவாய்மொழி	நண்ணாதார்	3095-3105	தரவுகொச்சகம்	நட்டபாடை	இடையொத்து
4.10	பத்தாம் திருவாய்மொழி	ஒன்றும்தேவும்	3106-3116	அறுசீர் விருத்தம்	நாட்டம்	ஏழொத்து
5.	ஐந்தாம் பத்து					
5.1	முதல் திருவாய்மொழி	கையார்சக்கரத்து	3117-3127	கலிநிலைத்துறை	குறிஞ்சி	ஏழொத்து
5.2	இரண்டாம் திருவாய்மொழி	பொலிகபொலிக	3128-3138	அறுசீர் விருத்தம்	சீகாமரம்	இடையொத்து
5.3	மூன்றாம் திருவாய்மொழி	மாசறுசோதி	3139-3149	கலிநிலைத்துறை	நட்டபாடை	ஏழொத்து
5.4	நான்காம் திருவாய்மொழி	ஊரெல்லாம்	3150-3160	தரவுகொச்சகம்	புறநீர்மை	நடையொத்து
5.5	ஐந்தாம் திருவாய்மொழி	எங்ஙனேயோ	3161-3171	அறுசீர் விருத்தம்	கைசிகம்	ஏழொத்து
5.6	ஆறாம் திருவாய்மொழி	கடல்ஞாலம்	3172-3182	எண்சீர் விருத்தம்	சீகாமரம்	ஏழொத்து
5.7	ஏழாம் திருவாய்மொழி	தோற்றநோன்பு	3183-3193	ஆசிரியத்துறை	சீகாமரம்	ஏழொத்து
5.8	எட்டாம் திருவாய்மொழி	ஆறாவமுதே	3194-3204	அறுசீர் விருத்தம்	காந்தாரம்	ஏழொத்து
5.9	ஒன்பதாம் திருவாய்மொழி	மானேய்நோக்கு	3205-3215	கலிநிலைத்துறை	பஞ்சமம்	ஏழொத்து
5.10	பத்தாம் திருவாய்மொழி	பிறந்தவாறும்	3216-3226	ஆசிரியத்துறை	காந்தாரம்	ஏழொத்து
6.	ஆறாம் பத்து					
6.1	முதல் திருவாய்மொழி	வைகல் பூங்கழி	3227-3237	கலிநிலைத்துறை	நட்டராகம்	ஏழொத்து
6.2	இரண்டாம் திருவாய்மொழி	மின்னிடைமடவார்கள்	3238-3248	ஆசிரியத்துறை	சீகாமரம்	ஏழொத்து
6.3	மூன்றாம் திருவாய்மொழி	நல்குரவும்	3249-3259	தரவுகொச்கம்	நட்டராகம்	நடையொத்து
6.4	நான்காம் திருவாய்மொழி	குறவைஆய்ச்சியர்	3260-3270	அறுசீர் விருத்தம்	தக்கராகம்	ஏழொத்து
6.5	ஐந்தாம் திருவாய்மொழி	துவளில்	3271-3281	எழுசீர் விருத்தம்	பஞ்சமம்	ஏழொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
6.6	ஆறாம் திருவாய்மொழி	மாலுக்கு	3282-3292	கலிவிருத்தம்	முதிர்ந்தகுறிஞ்சி	ஏழொத்து
6.7	ஏழாம் திருவாய்மொழி	உண்ணுஞ்சோறு	3293-3303	கலிநிலைத்துறை	பழஞ்சுரம்	ஏழொத்து
6.8	எட்டாம் திருவாய்மொழி	பொன்னுலகு	3304-3314	கலிநிலைத்துறை	குறிஞ்சி	ஏழொத்து
6.9	ஒன்பதாம் திருவாய்மொழி	நீராய்	3315-3325	கலிநிலைத்துறை	காந்தாரம்	ஏழொத்து
6.10	பத்தாம் திருவாய்மொழி	உலகமுண்ட	3326-3336	அறுசீர்விருத்தம்	-	-
7.	*ஏழாம் பத்து*					
7.1	முதல் திருவாய்மொழி	உள்நிலாவிய	3337-3347	ஆசிரியத்துறை	பழம்பஞ்சுரம்	ஏழொத்து
7.2	இரண்டாம் திருவாய்மொழி	கங்குலும் பகலும்	3348-3358	எழுசீர்விருத்தம்	தக்கராகம்	ஒன்பதொத்து
7.3	மூன்றாம் திருவாய்மொழி	வெள்ளைச்சுரிசங்கு	3359-3369	எண்சீர் விருத்தம்	நட்டபாடை	ஏழொத்து
7.4	நான்காம் திருவாய்மொழி	ஆழிஎழ	3370-3380	கலிவிருத்தம்	காந்தாரம்	ஏழொத்து
7.5	ஐந்தாம் திருவாய்மொழி	கற்பார்	3381-3391	கலிநிலைத்துறை	நட்டராகம்	ஏழொத்து
7.6	ஆறாம் திருவாய்மொழி	பாமரு மூவுலகும்	3392-3403	கலிநிலைத்துறை	பாலையாழ்	ஏழொத்து
7.7	ஏழாம் திருவாய்மொழி	ஏழையர்	3404-3413	கலிநிலைத்துறை	பாலையாழ்	ஏழொத்து
7.8	எட்டாம் திருவாய்மொழி	மாயவாமனனை	3414-3424	கலிநிலைத்துறை	பாலையாழ்	ஏழொத்து
7.9	ஒன்பதாம் திருவாய்மொழி	என்றைக்கும்	3425-3435	கலிவிருத்தம்	நட்டபாடை	ஒன்பதொத்து
7.10	பத்தாம் திருவாய்மொழி	இன்பம்பயக்க	3436-3446	அறுசீர்விருத்தம்	பழம்பஞ்சுரம்	ஏழொத்து
8.	*எட்டாம் பத்து*					
8.1	முதல் திருவாய்மொழி	தேவிமார் ஆவார்	3447-3457	எழுசீர் விருத்தம்	புறநீர்மை	ஒன்பதொத்து
8.2	இரண்டாம் திருவாய்மொழி	நங்கல்வரிவளை	3458-3468	எண்சீர்விருத்தம்	கொல்லி	ஏழொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
8.3	மூன்றாம் திருவாய்மொழி	அங்குமிங்கும்	3469-3479	கலிநிலைத்துறை	நட்டபாடை	ஏழொத்து
8.4	நான்காம் திருவாய்மொழி	வார்கடாஅருவி	3480-3490	எழுசீர் விருத்தம்	புறநீர்மை	ஒன்பதொத்து
8.5	ஐந்தாம் திருவாய்மொழி	மாயக்கூத்தா	3491-3501	அறுசீர் விருத்தம்	பழம்பஞ்சுரம்	ஏழொத்து
8.6	ஆறாம் திருவாய்மொழி	எல்லியும்	3502-3512	கலிவிருத்தம்	வியந்தம்	ஆதி
8.7	ஏழாம் திருவாய்மொழி	இருத்தும்	3513-3523	கலிவிருத்தம்	இந்தளம்	ஏழொத்து
8.8	எட்டாம் திருவாய்மொழி	கண்கள் சிவந்து	3524-3534	அறுசீர்விருத்தம்	தக்கேசி	ஏழொத்து
8.9	ஒன்பதாம் திருவாய்மொழி	தருமாணிக்கம்	3535-3545	அறுசீர் விருத்தம்	தக்கேசி	ஏழொத்து
8.10	பத்தாம் திருவாய்மொழி	நெடுமாற்கடிமை	3546-3556	அறுசீர் விருத்தம்	தக்கேசி	ஏழொத்து
9.	*ஒன்பதாம் பத்து*					
9.1	முதல் திருவாய்மொழி	கொண்டபெண்டிர்	3557-3567	அறுசீர் விருத்தம்	பழந்தக்கராகம்	ஏழொத்து
9.2	இரண்டாம் திருவாய்மொழி	பண்டைநாளாலே	3568-3578	எழுசீர் விருத்தம்	புறநீர்மை	ஒன்பதொத்து
9.3	மூன்றாம் திருவாய்மொழி	ஓராயிரம்	3579-3589	கலிவிருத்தம்	நட்டபாடை	ஏழொத்து
9.4	நான்காம் திருவாய்மொழி	மையார்	3590-3600	கலிவிருத்தம்	கொல்லி	ஏழொத்து
9.5	ஐந்தாம் திருவாய்மொழி	இன்னுயிர்ச்சேவல்	3601-3611	கலிநிலைத்துறை	கொல்லி	ஆதி
9.6	ஆறாம் திருவாய்மொழி	உருகுமால்	3612-3622	கலிவிருத்தம்	நட்டராகம்	ஏழொத்து
9.7	ஏழாம் திருவாய்மொழி	எங்கானல்	3623-3633	தரவுகொச்சகம்	நட்டராகம்	ஏழொத்து
9.8	எட்டாம் திருவாய்மொழி	அறுக்கும் வினை	3634-3644	கலிவிருத்தம்	கொல்லி	இடையொத்து
9.9	ஒன்பதாம் திருவாய்மொழி	மல்லிகை	3645-3655	எண்சீர் விருத்தம்	பஞ்சமம்	ஏழொத்து
9.10	பத்தாம் திருவாய்மொழி	மாலைநண்ணி	3656-3666	கலிவிருத்தம்	நட்டபாடை	ஒன்பதொத்து

வ.எண்	பிரபந்தம்	பாசுரம்	பாசுர எண்கள்	யாப்பு	ராகம்	தாளம்
10.	பத்தாம் பத்து					
10.1	முதல் திருவாய்மொழி	தாளதாமரை	3667-3677	கலிநிலைத்துறை	இந்தளம்	ஏழொத்து
10.2	இரண்டாம் திருவாய்மொழி	கெடுமிடர்	3678-3688	அறுசீர் விருத்தம்	இந்தளம்	ஏழொத்து
10.3	மூன்றாம் திருவாய்மொழி	வேய்மருதோள்	3689-3699	எண்சீர் விருத்தம்	பஞ்சமம்	ஏழொத்து
10.4	நான்காம் திருவாய்மொழி	சார்வேதவநெறி	3700-3710	தரவுகொச்சகம்	கொல்லி	நடையொத்து
10.5	ஐந்தாம் திருவாய்மொழி	கண்ணன்கழலிணை	3711-3721	வஞ்சித்துறை	நாட்டம்	இடையொத்து
10.6	ஆறாம் திருவாய்மொழி	அருள்பெறுவார்	3722-3732	தரவுகொச்சகம்	இந்தளம்	நடையொத்து
10.7	ஏழாம் திருவாய்மொழி	செஞ்சொற்கவிகாள்	3733-3743	அறுசீர் விருத்தம்	தக்கேசி	ஏழொத்து
10.8	எட்டாம் திருவாய்மொழி	திருமாலிருஞ்சோலை	3744-3754	கலிவிருத்தம்	இந்தளம்	ஏழொத்து
10.9	ஒன்பதாம் திருவாய்மொழி	சூழ்விசும்பு	3755-3765	கலிவிருத்தம்	கொல்லி	ஏழொத்து
10.10	பத்தாம் திருவாய்மொழி	முனியே	3766-3776	கலிநிலைத்துறை	பஞ்சமம்	ஏழொத்து
	ஆக திருவாய்மொழி பாசுரங்கள் - 1102					

நாலயிரத் திவ்யப்பிரபந்தந்துள் இயற்பா ஆயிரம் நீங்கலாக முதல் ஈராயிரம் பாசுரங்கள் ஐம்பது கர்நாடக ராகங்கள், ஐந்து தாளங்களிலும், நம்மாழ்வார் பாசுரங்கள் பத்தொண்பது பண்கள், நான்கு தாளங்களிலும் அமையப்பெற்றுள்ளன.

நம்மாழ்வர் பண்களாவன

(1) முதிர்ந்த குறிஞ்சி (2) நட்டபாடை (3) செருந்தி (4) வியந்தம் (5) இந்தளம் (6) கொல்லி (7) தக்க ராகம் (8) புறநீர்மை (9) நாட்டம் (10) சீகாமரம் (11) பழந்தக்கராகம் (12) தக்கேசி (13) பஞ்சமம் (14) குறிஞ்சி (15) கைசிகப்பாளையாழ் (16) காந்தாரம் (17) நட்டராகம் (18) பழம்பஞ்சுரம்(19) பாலையாழ்

திவ்யப்பிரபந்தப் பாசுரங்களைச் சேவித்தபின்

சேவிக்க வேண்டியவை

1. இயல்சாத்து

நன்றுந் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை ஓதினோம் - குன்றம்
எடுத்தா னடிசே ரிராமானுசன்தாள்
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி 1

வகுளாபரணபட்டர் அருளிச்செய்தது

வாழி திருக்குருகூர் வாழி திருமழிசை
வாழிதிரு மல்லி வளநாடு - வாழி
சுழிபொறித்த நீர்ப்பொன்னித் தென்னரங்கன்தன்னை
வழிபறித்த வாளன் வலி 2

(ஸ்ரீபராங்குசதாஸர் அருளிச் செய்தது)

திருநாடு வாழி திருப்பொருநல் வாழி
திருநாட்டுத் தென்குருகூர் வாழி - திருநாட்டுச்
சிட்டத் தமர்வாழி வாழிசடகோபன்
இட்டத் தமிழ்ப்பா விசை. 3

பரகாலதாஸர் அருளிச்செய்தது

மங்கை நகர்வாழி வண்குறைய லூர்வாழி
செங்கை யருண்மாரி சீர்வாழி - பொங்குபுனல்
மண்ணித் துறைவாழி வாழி பரகாலன்
எண்ணில் தமிழ்ப்பா விசை. 4

பிள்ளைஇராமானுச தாளர் அருளிச் செய்தது

வாழியரோ தென்குருகை வாழியரோ தென்புதுவை
வாழியரோ தென்குறையல் மாநகரம் - வாழியரோ
தக்கோர் பரவும் தடஞ்சூழ் பெருமுபூதூர்
முக்கோல் பிடித்த முனி. 5

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்தது

மொழியைக் கடக்கும் பெரும்புக ழான் வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும்நங் கூரத்தாழ் வான்சரண் கூடியபின்
பழியைக் கடத்தும் இராமா னுசன்புகழ் பாடியல்லா
வழியைக் கடத்தல் எனக்குஇனி யாதும் வருத்தமன்றே 6

பிள்ளை அழகிய மணவாளதாஸர் அருளிச்செய்தது

நெஞ்சத் திருந்து நிரந்தர மாக நிரயத்துய்க்கும்
வஞ்சக் குறும்பின் வகையறுத் தேன் மாய வாதியர்தாம்
அஞ்சப் பிறந்தவன் சீமா தவனடிக்கு அன்புசெய்யும்
தஞ்சத் தொருவன் சரணாம் புயம்என் தலைக்கணிந்தே 7

பின் பழகராம்பெருமாள் சீயர் அருளிச்செய்தது

ஊழிதொறும் ஊழிதொறும் உலக முய்ய
உம்பர்களும் கேட்டுய்ய அன்பி னாலே
வாழியெனும் பூதம்பேய் பொய்கை மாறன்
மழிசையர் கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன்
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன்கோதை
குலமுனிவன் கூறியநூ லோதி வீதி
வாழியென வருந்திரளை வாழ்த்து வார்தம்
மலரடிஎன் சென்னிக்கு மலர்ந்த பூவே. 8

சாற்றுமுறை

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்சசன் னியமும் பல்லாண்டே

பெரியஜீயர் அருளிச்செய்தது

ஸர்வதேச தசாகாலேஷ் வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதி வ்யாஜ்ஞா வர்த்ததாமபி வர்த்த தாம்

கந்தாடையண்ணன் அருளிச்செய்தது

ராமா நுஜார்யதி வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா
தி க ந்தவ்யாபிநீ பூ யாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ

உடையவர் அருளிச்செய்தது

ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஸ்ரீமயநுபத் ரவாமநுதி நம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஸ்ரீயமநுபத் ரவாமநுதி நம் ஸம்வர்த்தய

பெரியஜீயர் அருளிச்செய்தது

நமஸ்ஸ்ரீசைலநாதாய குந்தீநகர ஜந்மநே
ப்ரஸாத லப்த பரமப்ராப்யகைங்கர்யசாலிநே

ஸ்ரீமண வாளமாமுனிகள் தனியன்
(அழகிய மணவாளன் அருளிச்செய்தது)

ஸ்ரீஸைலேஸ தயாபாத்ரம் தீ பக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

ஸ்ரீவானமாமலை ஸ்வாமிகள் தனியன்
(தொட்டை அய்யங்கார் எனப்படும் மஹார்யா அருளியது)

ரம்யஜாமாத்ருயோகீந்த்ர பாத ரேகாமயம் ஸதா
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமாநுஜமுநிம் பஜே
வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும் மணவாள மாமுனிவன் - வாழியவன்
மாறன் திருவாய் மொழிப்பொருளை மாநிலத்தார்
தேறும் படியுரைக்குஞ் சீர்

செய்ய தாமரைத் தாளிணை வாழியே
சேலை வாழி திருநாபி வாழியே
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே
சுந்த ரத்திருத் தோளிணை வாழியே
கையு மேந்திய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணினை வாழியே
பொய்யி லாத மண வாள மாமுனி
புந்தி வாழி புகழ்வாழி வாழியே.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ்நூல் வாழ கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ! மணவாள மாமுனியே!
இன்னுமொகு நூற்றாண் டிரும்

திருவி ருந்தமலர்த் தாள்கள் வாழியே
சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவி ருந்தகை முக்கோலும் வாழியே
தடம்பு யத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
வாழ்த்தி வாய்ந்தருள் வாய்மலர் வாழியே
கருணை மேவு மிராமா நுசமுனி
கனக மௌலி கலந்தூழி வாழியே.

ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்களின் எண் விளக்கம்

எண்ணின்முத லாழ்வார்கண் மூன்று நூறு
மெழின்மழிசைப் பிரானிருநூற் றோருபத் தாறு
முண்மைமிகு மாறன்மறை யாயி ரத்தோ
டுற்றவிரு நூற்றுத்தொண் ணூறு மாறும்
வண்மையுடை மதுரகவி பத்து மொன்றும்
வஞ்சியர்கோ னூற்றைந்தும் பட்ட நாதன்
பண்ணியனா னூற்றேழு பத்து மூன்றும்
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே.


பத்தரடிப் பொடிபாட லைம்பத் தைந்தும்
பாணர்புகல் பத்துடனே பிரகர் லன்சோ
லத்தனுயர் வேங்கடமாற் காயி ரத்தோ
டானவிரு நூற்றோரைம் பத்து மூன்று
முத்திதரு மெதிராசர் பொன்ன டிக்கே
மொழிந்தவமு தர்பாட னூறு மெட்டு
மெத்திசையும் வாழவிவர் பாடி வைத்த
விவைநாலா யிரமுமடி யோங்கள் வாழ்வே.

வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுர கவிகள்
பொய்யில்புகழ்க் கோழியர்கோன் விட்டு சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடிபா ணாழ்வா
ரையனருட் கலியனெதி ராசர் தம்மோ
டாறிருவ ரோரொருவ ரவர்தாஞ் செய்த
துய்யதமி ழிருபத்து நான்கிற் பாட்டின்
றொகைநாலா யிரமுமடி யோங்கள் வாழ்வே

அந்தமிலா வாரணநா லாகி நின்ற
வதன்கருத்தை யாழ்வார்க ளாய்ந்தெ டுத்துச்
செந்தமிழா லருள்செய்த வகைதொ கையுஞ்
சிந்தாம லுலங்கள் வாழ வென்று
சந்தமிகு தமிழ்மறையோன் றூப்புற் றோன்றும்
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்த சாரஞ்
சிந்தையினா லனுதினமுஞ் சிந்திப் போர்க்குச்
சேமமதாந் திருமாறன் கருணை யாலே.

*****

ஸ்ரீ: கோயிலாழ்வார்



இரவில் பகவான் யோகநித்திரை
செய்யும் வண்ணச்சிறுதொட்டில்

இரவில் படுக்கச் செல்லுமுன் சேவிக்க வேண்டிய பிரபந்தப் பாசுரங்கள்

1. பெரியாழ்வார் திருமொழி
   1,3.1லிருந்து பத்து பாசுரங்கள்
2. பெருமாள் திருமொழி
   8.1லிருந்து 11 பாசுரங்கள்.

*****

வைஷ்ணவர் ஒருவர் திருநாடலங்கரிக்கும்போது சேவிக்க வேண்டிய முக்கிய பாசுரங்கள்

1. திருப்பல்லாண்டு
2. கோயில் திருவாய்மொழி
3. நெற்றியில் திருமண்(நாமம்) இடும்போது திருப்பாவை
4. 4-ஆம் பத்து 9-ஆம் திருவாய்மொழி
   ''நண்ணாதார் முறுவலிப்ப'' - 10 பாசுரம்
5. இராமாநுசர் நூற்றந்தாதி
6. உபதேசரத்தினமாலை

*****

இன்றியமையாத பிரபந்தப் பாசுரங்கள்


1. திருப்பல்லாண்டு - ஸ்ரீ பெரியாழ்வார்
2. உலகினர்க்கு உபதேசம் - பெரிய திருமொழி 11.6
3. திருஅங்கமாலை - பெரிய திருமொழி 11.7
4. திரு அவதாரங்களின் மகிமை பெரிய திருமொழி 11.4
5. கிருஷ்ணாவதார மாண்பு பெரிய திருமொழி 10.4,5,6,7,8,9
6. இராமாவதார மாண்பு பெரிய திருமொழி 10.2,3
7. நாராயணாய மந்திர மாண்பு பெரிய திருமொழி 1.1
8. எம்பெருமான் பாதாதிகேச வர்ணனை - அமனாதிப்பிரான்
9. திருப்பள்ளியெழுச்சி - தொண்டரடிப்பொடியாழ்வார்
10. எம்பெருமான் திருத்தாலாட்டு பெருமாள் திருமொழி 8
11. திருப்பாவை (பாவை நோன்பின் சிறப்பு) ஸ்ரீஆண்டாள்
12. திருமணக் கனா ஸ்ரீ ஆண்டாள் வாரணமாயிரம்

வலம் இடமாகக் காட்சி தந்தருளும் ஸ்ரீ சீதாப் பிராட்டியார்

திருத்தலங்கள்தோறும் ஸ்ரீராமபிரானின் வலதுபக்கம் காட்சி தந்தருளும் ஸ்ரீ சீதாப்பிராட்டியார் திருச்சேறை திவ்யதேசத்தில் இடதுபுறமாகக் காட்சிதந்தருளுவது குறிப்பிடத்தக்கதாகும்.



வடுவூர்
ஸ்ரீராமர் வலதுபுறம்
ஸ்ரீ சீதாப் பிராட்டியார்



திருச்சேறை
வனவாசத் திருக்கோல
ஸ்ரீராமபிரானின் இடதுபுறம்
ஸ்ரீ சீதாப்பிராட்டியார்

திருநட்சத்திரத் திருநாட்களில்
ஆழ்வார் அருளிச் செயல்களை
சேவிக்க வேண்டிய முறைமை

தனியன் -

1. ராமாநுஜதயா
2. லக்ஷ்மீநாத
3. யோநித்ய
4. மாதாபிதா
5. பூதம் ஸரச்ச
6. குருமுகமந
7. மின்னார் தட
8. பாண்டியன்

பல்லாண்டு பதிகம்12

(இருமுறை 1,9,10 பாசுரங்கள்)

தனியன் - 1 தமேவ மத்த்வா 2 மண்டங்குடி

திருப்பள்ளியெழுச்சி 10

(இருமுறை 1,9,10 பாசுரங்கள்)

தனியன் - 1 நீளாதுங்க 2 அன்னவயல் 3 சூடிக் கொடுத்த திருப்பாவை 28, (இருமுறை (1, 3, 16, 18, 23, 24, 27, 28 பாசுரங்கள்)

காலையில் பொங்கல் தளிகை ஸமர்ப்பிப்பதாயிருந்தால் அமுது செய்வித்துத் திருப்பாவை 29, 30 பாசுரங்களை இருமுறை நின்று கொண்டு சாத்துமுறை செய்துவிட்டுக் கோஷ்டி விநியோகம் ஆனபிறகு மறுபடி 'ராமா நுஜதயா' தனியன் தொடங்கிப் பல்லாண்டுப் பதிகத்தில் முதல் கடைசிப் பாசுரங்களை மட்டும் ஸேவித்துவிட்டு மேலே ஸேவை நடத்தவேண்டும்.

திருப்பாவை சாத்துமுறை காலையில் தனியாகச் செய்யா விட்டால் திருப்பாவை 28-வது பாசுரம் ஸேவை முடிந்தபின்பு,

தனியன் - 1 அவிகித விஷயா 2 வேறொன்றும்
கண்ணிநுண் சிறுத்தாம்பு - 11 பாசுரம்

தனியன் -

1 பக்தாம்ருதம் 4 ஏய்ந்த பெருங்
2 திருவழுதிநா 5 வான் திகழும்
3 மன்த்தாலும் 6 மிக்க இறை

கோயில் திருவாய்மொழி,

1. உயர்வற 11	7. நல்குரவும் 11
2. வீடுமின் 11	8. உலகமுண்ட 11
3. கிளரொளி 11	9. கங்குலும் 11
4. ஒழிவில் கால 11	10. நெடுமாற்கு 11
5. ஒன்றும் தேவு 11	11. மாலை நண்ணி 11
6. ஆராவமுதே 11	12. சூழபுவிசும்பு 11
	13. முனியேநான் 9

இராமானுச நூற்றந்தாதி

தனியன் - 1 முன்னை வினை 2 நயந்தரு 3 சொல்லின் தொகை

பூமன்னுமாது 1 முதல் செழுந்திரைப் 105 வரை

(இராமானுச நூற்றந்தாதி முழுதும் ஸேவிக்க அவகாசம் இல்லாதபோது பாசுரங்கள் 1, 2, 7, 11, 21, 31, 41, 51, 61, 71, 81, 91, 101, 105 ஆகியவற்றை மட்டும் ஸேவிப்பதும் உண்டு)

ஸ்ரீதேசிகப் பிரபந்தம்

தனியன் - சீரொன்று
'அதிகார சங்கிரகம் 54 பாசுரம்'
தனியன் - 1 ஆரண நான்கின் 2 ஆதிமறை
பிரபந்தசாரம் 16 பாசுரம்
தனியன் - சீரார் தூப்புல்
பிள்ளையந்தாதி 18 பாசுரம்

(திருவயீந்திரபுரத்துக்குப் பக்கத்தில் உள்ளவர்கள் ஸ்ரீ தேசிகப் பிரபந்தத்தில் மும்மணிக்கோவை, நவமணிமாலை இவற்றையும் ஸேவிப்பது ஸம்ப்ரதாயமாக உள்ளது.)

சாத்துமுறை

தளிகை கண்டருளியபின் ஸ்ரீதேசிகனுக்குத் திருமாலை பரிவட்டம் அருளிப் பாடு ஆனபிறகு கோஷ்டியாய் நின்று கொண்டு-

சிற்றஞ்சிறுகாலே	2	காலையில் திருப்பாவை சாத்து
வங்கக் கடல்	2	முறை ஆகாமலிருந்தால்

	தடவை		தடவை
1. சூழ்ந்தகன்று	2	11 பூமன்னு	1
2. அவாவறச்	2	12 பல்லாண்டு	1
3. உயர்வற	1	13 அடியோமோ	1
4. வேறொன்றும்	1	14 வானுளமர்ந்	2
5. கண்ணிநுண்	2	15 வெள்ளைப்பரி	2
6. இருப்பிடம்	2	16 வையகமெண்	2
7. கண்ணிநுண்	1	17 அந்தமிலா	2
8. இருப்பிடம்	2	18 தொண்டருகக்	2
9. இன்புற்றசீ	2	19 வடிவழகார்	2
10. அங்கயல்	2	20 மாமலர்மன்	1

ஆசார்யன் திருநக்ஷத்ரமாயிருந்தால் இந்த ஸ்மயத்தில் எம்பெருமான் தொடங்கி ஆசார்யன் வரை ஸம்பாவனை செய்து விட்டுப் பின்பு வாழித் திருநாமம் அநுஸந்தித்தல் மரபு.

ஸர்வதேச	வாழியிராமானுச
ராமாநுஜார்	வஞ்சப்பல
ஸ்ரீமந்ஸ்ரீரங்	நானிலமும்
நமோ ராமா	வாழியணி தூப்
ராமாநுஜ தயா	

திருவோணமாயிருந்தால் 'வாதாசனவரர்' என்று தொடங்கும் நாள் பாட்டைஅநுஸந்திக்கவும்

(பெருமாள் தீர்த்தம் ஸ்ரீசடாரி கோஷ்டிக்கு ஆன பிறகு ஆசார்யன் திரு நக்ஷத்ரமாயிருந்தால் ஆச்சார்யன் ஸ்ரீபாததீர்த்தம் தனியாக எடுத்தல் வேண்டும்)

பின் கோஷ்டியாக உட்கார்ந்து ஸ்தோத்ர பாடம் ஸ்ரீதேசிக மங்களம் அநுஸந்திக்க வேண்டும்.

★★★★★

திருக்கோயில்களில் 10 நாள் உத்ஸவங்களில்
அருளிச்செயல் நாலாயிரத்தையும், ஸ்ரீதேசிகப் பிரபந்தத்தையும்

சேவிக்க வேண்டிய முறைமை

1 வது உத்ஸவம்	பெரியாழ்வார் திருமொழி 1,2, பத்து இயற்பா முதல் திருவந்தாதி திருவாய்மொழி முதற் பத்து அமிருதரஞ்சனி
2வது உத்ஸவம்	பெரியாழ்வார் திருமொழி முடிய இரண்டாம் திருவந்தாதி திருவாய்மொழி இரண்டாம் பத்து அமிருதாசுவாதினி
3வது உத்ஸவம்	திருப்பாவை நாச்சியார் திருமொழி மூன்றாந் திருவந்தாதி திருவாய்மொழி மூன்றாம் பத்து பரமபத சோபானம்
4வது உத்ஸவம்	பெருமாள் திருமொழி திருமாலை திருப்பள்ளியெழுச்சி அமலனாதிபிரான் கண்ணிநுண்சிறுத்தாம்பு நான்முகன் திருவந்தாதி திருவாய்மொழி நான்காம் பத்து பரமதபங்கம்
5வது உத்ஸவம்	பெரிய திருமொழி 1,2 பத்து திருவிருத்தம் திருவாய்மொழி ஐந்தாம் பத்து மெய்விரதமான்மியம்
6வது உத்ஸவம்	பெரிய திருமொழி 3,4 பத்து திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி ஆறாம் பத்து

	அடைக்கலப் பத்து
	அருத்த பங்சகம்
7வது உத்ஸவம்	திருச்சந்த விருத்தம்
	பெரிய திருமொழி 5, 6 பத்து
	திருவாய்மொழி ஏழாம் பத்து
	ஸ்ரீ வைணவதினசரி
	திருச்சின்னமாலை
	பன்னிரு நாமம்
8வது உத்ஸவம்	பெரிய திருமொழி 7,8,9 பத்து
	திருவெழுக்கூற்றிருக்கை
	திருவாய்மொழி எட்டாம் பத்து
	திருமந்திரச் சுருக்கு
	த்வயச் சுருக்கு
	சரமசுலோகச் சுருக்கு
	கீதார்த்த சங்கிரகம்
9வது உத்ஸவம்	பெரிய திருமொழி 10, 11 பத்து
	திருக்றுந்தாண்டகம்
	திருநெடுந்தாண்டகம்
	திருவாய்மொழி ஒன்பதாம் பத்து
	மும்மணிக்கோவை
	நவமணிமாலை
10வது உத்ஸவம்	சிறிய திருமடல், பெரிய திருமடல்
	திருவாய்மொழி பத்தாம் பத்து
	இராமானுச நூற்றந்தாதி
	அதிகார சங்கிரகம்
	பிரபந்த சாரம்
	பிள்ளையந்தாதி
விடையாற்று உத்ஸவம்	பல்லாண்டு
	கண்ணிநுண்
	கங்குலும் பகலும்
	அடைக்கலப் பத்து
	பிள்ளையந்தாதி

அஷ்டப் பிரபந்தம்

அஷ்டப்பிரபந்தம் - அழகிய மணவாள தாசர் (எ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

1. கோயில் அந்தாதி (திருவரங்கத்தந்தாதி)
2. திருவரங்கக் கலம்பகம்
3. திருவேங்கடத் தந்தாதி
4. திருவேங்கடமாலை
5. திருவரங்கத்து மாலை
6. அழகர் அந்தாதி
7. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி
8. சீரங்க நாயகர் ஊசல்.

எட்டெழுத்துத் திருமந்திரத்தை அநுஸந்திப்பவர்கள் பெறலாகும் பலன்கள்

எட்டுமா மூர்த்தி யெண்கண னெண்டிக
கெட்டிறை யெண்பிர கிருதி
யெட்டுமா வரைக ளீன்றவெண் குணத்தோ
னெட்டேணு மெண்குண மதியோர்க்
கெட்டுமா மலரெண் சித்தியெண் பத்தி
யெட்டியோ காங்கமெண் செல்வ
மெட்டுமா குணமெட் டெட்டெணுங் கலையெட்
டிரதமே லதுவுமெட் டினவே.

- அதிகாரசங்கிரகம் - 45

1. சிவன் எட்டு வடிவங்கள்
2. எட்டு திசைகள்
3. எட்டு திக்பாலர்கள்
4. எட்டு பிரகிருதிகள்
5. எட்டு குலபர்வதங்கள்
6. எட்டு இறைகுணங்கள்
7. எட்டு புத்திக் குணங்கள்
8. எட்டு புஷ்பங்கள்
9. எண்வகைச் சித்திகள்
10. எண்வகை பத்திகள்
11. எட்டு யோகாங்கங்கள்
12. எட்டு ஐஸ்வர்யங்கள்
13. எட்டு தன்மைகள்
14. எட்டு ரஸங்கள்

கம்பராமாயணம்

கம்பராமாயணம்/கம்பர்/ஆறு காண்டங்கள்/127 படலங்கள்

1. கம்பஇராமாயண பாலகாண்டப் படலங்கள் 24

ஆற்றுப்படலம்	20
நாட்டுப்படலம்	61
நகரப் படலம்	74
அரசியற் படலம்	12
திருஅவதாரப்படலம்	132
கையடைப் படலம்	25
தாடகை வதைப்படலம்	54
வேள்விப் படலம்	48
அகலிகைப் படலம்	25
மிதிலைக் காட்சிப்படலம்	82
கைக்கிளைப் படலம்	18
வரலாற்றுப்படலம்	31
கார்முகப்படலம்	66
எழுச்சிப்படலம்	81
சந்திரசயிலப்படலம்	30
வரைக் காட்சிப்படலம்	47
பூக்கொய் படலம்	39
நீர் விளையாட்டுப்படலம்	33
உண்டாட்டுப் படலம்	67
எதிர்கொள் படலம்	32
உலாவியற் படலம்	53
கோலம் காண் படலம்	43
கடிமணப்படலம்	102
பரசுராமப்படலம்	50

2. அயோத்தியா காண்டப் படலங்கள் 14

மந்திரப்படலம்	85
மந்தரை சூழ்ச்சிப்படலம்	91

5. சுந்தர காண்டப் படலங்கள் - 14

6. யுத்த காண்டப் படலங்கள் 42

கடல் சீறிய படலம்	60
வருணன் அடைக்கலப்படலம்	22
சேதுபந்தனப் படலம்	71
ஒற்றுக் கேள்விப்படலம்	89
இலங்கை காண் படலம்	24
இராவணன் வானரத் தானை காண்படலம்	35
மகுட பங்கப்படலம்	51
அணிவகுப்புப் படலம்	28
அங்கதன் தூதுப்படலம்	43
முதற் போர் புரிபடலம்	255
கும்பகருணன் வதைப்படலம்	356
மாயா சனக படலம்	95
அதிகாயன் வதைப்படலம்	274
நாகபாசப்படலம்	300
படைத்தலைவர் வதைப்படலம்	100
மகரக்கண்ணன் வதைப்படலம்	39
பிரமாத்திரப் படலம்	227
சீதை களம் காண்படலம்	32
மருத்துவமலைப் படலம்	116
களியாட்டுப் படலம்	21
மாயா சீதைப்படலம்	95
நிகும்பலை யாகப்படலம்	182
இந்திரசித்து வதைப்படலம்	69
இராவணன் சோகப்படலம்	61
படைக் காட்சிப் படலம்	52
மூலபல வதைப்படலம்	232
வேல் ஏற்ற படலம்	52
வானரர் களம் காண்படலம்	34
இராவணன் களம் காண்படலம்	25
இராவணன் தேர் ஏறு படலம்	35
இராமன் தேர் ஏறு படலம்	27
மண்டோதரி புலம்புறுபடலம்	13
பிராட்டி திருவடி தொழுதபடலம்	127
மீட்சிப்படலம்	119
திருமுடி சூட்டுப் படலம்	21

ஒட்டக்கூத்தர் அருளிய

உத்தர காண்டம்

ஒட்டக்கூத்தர் அருளிய உத்தரகாண்டப் படலங்கள் - 17; பாடல்கள் 1496.

1.	திருவோலக்கப்படலம்	-	26
2.	புலத்தியப்படலம்	-	30
3.	அரக்கர் பிறப்புப்படலம்	-	56
4.	தோத்திரப்படலம்	-	30
5.	இலங்கை அழித்த படலம்	-	53
6.	இராவணன் பிறப்புப் படலம்	-	70
7.	வரையெடுத்த படலம்	-	75
8.	திக்கு விசயப்படலம்	-	52
9.	கார்த்த வீரியார்ச்சுனப்படலம்	-	23
10.	வாலி வாலால் கட்டுண்டபடலம்	-	20
11.	அனுமப் படலம்	-	72
12.	சீதை வனம் புகு படலம்	-	100
13.	இலவணன் வதைப்படலம்	-	110
14.	சம்புவன் வதைப்படலம்	-	67
15.	அசுவமேதயாகப்படலம்	-	313
16.	கந்தருவர் வதைப்படலம்	-	60
17.	சந்திரகேது நகர்ப்படலம்	-	150

*****

சக்கரவர்த்தித் திருமகன் - ராஜாஜி

சீதாயணம் (ஆங்கிலம்) -டாக்டர். கே.ஆர். சீனிவாச அய்யங்கார்

இராமாயணவெண்பா - டி.எஸ். இராசகோபால ஐயங்கார்

ஸ்ரீராமகீர்த்தன மஞ்சரி - 14 பகுதிகள் - தஞ்சை டி.எஸ். சுந்தரேச சர்மா

ராமசரித கீர்த்தனைகள் - ஸ்ரீ அருணாசலக்கவிராயர்

ராமாமிருத தரங்கிணி - டி.எஸ். சுந்தரேச சர்மா

ராகவகுண ரத்னாகரம் - டி.எஸ். சுந்தரேச சர்மா

அனுமான் அனுபூதி - ராமதூதன் என்.எஸ்.ஆர். சாமி.

ஸ்ரீ இராமரின் முன்னோர்கள்

திருமால்	-	சகரன்
பிரமா	-	அஸமஞ்சன்
மரீசி	-	அம்சுமான்
காசிபர்	-	திலீபன்
சூரியன்	-	பகீரதன்
மநு	-	ககுத்தன்
இக்ஷீவாகு	-	ரகு
குக்ஷி	-	பிரவிருத்தனன்(கல் மாஷன்)
விகுக்ஷி	-	சங்கணன்
பாணன்	-	சுதர்சனன்
அநரண்யன்	-	அக்னிவர்ணன்
பிருது	-	சீக்ரகன்
திரிசங்கு	-	மரு
அரிச்சந்திரன்	-	பிருசு சுருகன்
துந்துமாரன்	-	அம்பரீஷன்
யுவனாச்வன்	-	நகுஷன்
மாந்தாதா	-	யயாதி
கசந்தி	-	நாபாகன்
துருவசந்தி	-	அஜன்
பரதன்	-	தசரதன்
அஜிதன்	-	ஸ்ரீராமர்

*****

சீதையின் முன்னோர்கள்

நிமி	-	பிரதிந்தகர்
மிதி	-	கீர்த்திரதர்
உதாவசு	-	தேவமீடர்
நந்திவர்த்தனர்	-	விபுதர்
சுகேது	-	மகீந்திரகர்
தேவராதர்	-	கீர்த்திராதர்
ப்ருகர்த்ரதர்	-	மகாரோமர்
மகாவீரர்	-	சுவர்ணரோமர்

சுதிருதி	-	அரஸ்வரோமர்
திருஷ்டகேது	-	சீரத்வஜ ஜனகர் (இவர் சீதையின் பிதா)
ஹரியசுவர்	-	குசத்வஜ ஜனகர் (சீரத்வஜர் தம்பி)
மரு	-	சீதை

*****

இராமானின் பின்வந்தோர்

ராமன் → குசன் - லவன்

லெக்ஷ்மணன் → அச்சுதன் - சந்திரகேது

பரதன் → தட்சன் புஷ்கலன்

சத்ருக்கணன் → சுபாகு, சூரசேனன்

குசன் - லவன் →

1. அதிதி
2. நிஷதன்
3. அனலன்
4. நபன்
5. புண்டரீகன்
6. க்ஷேமதன்வா
7. தேவானீகன்
8. அஹீனகன்
9. ருரு
10. பாரியாதகன்

*****

இராமாயணப் பெருமை

தனது பட்டந்தனைத் தம்பியர்க் கீயெனத்
தந்து மகிழும் தமையனும்
தமையனார் வருமளவு மாவிரத மாகவே
தபசு புரியும் தம்பியும்
கனதனப் பாலீந்த தாய்தனைப் போலவே
கருணைசெய்திடு மதனியும்
காணுமுன் தந்தைபோல் திருவடிகள் பணியும்
கனிட்டவனுடை மனையாட்டியும்
தினந்தினம் பரிவாகி அம்மையே என்று பேர்
செப்பும் கொழுந்தனாரும்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரே தாயு கந்தனில்
தசரதர் குமாரர் கண்டாய்
வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ்களமூரில்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

ஸ்ரீ துளசிதாசரின் 'ராமசரிதமானஸம்' என்னும் நூலுக்கு மூலமாகத் திகழும் இவ்வடமொழிக் காவியம் சிவபெருமானால் சக்திக்கு உபதேசிக்கப்பெற்றதாக கூறப்பெறுகின்றது.

இக்காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் தஞ்சை டி.எஸ். கோதண்டராமன் அவர்கள் ஆவார்.

1. பாலகாண்டம்	-7 ஸர்க்கங்கள்	391 ஸ்லோகங்கள்
2. அயோத்யாகாண்டம்	- 9 ஸர்க்கங்கள்	727 ஸ்லோகங்கள்
3. ஆரண்யகாண்டம்	- 10 ஸர்க்கங்கள்	516 ஸ்லோகங்கள்
4. கிஷ்கிந்தா காண்டம்	- 9 ஸர்க்கங்கள்	559 ஸ்லோகங்கள்
5. சுந்தர காண்டம்	- 5 ஸர்க்கங்கள்	327 ஸ்லோகங்கள்
6. யுத்த காண்டம்	- 16 ஸர்க்கங்கள்	1135 ஸ்லோகங்கள்
7. உத்தர காண்டம்	- 9 ஸர்க்கங்கள்	611 ஸ்லோகங்கள்

ஆகக் கூடுதல் 7 காண்டங்கள் 65 ஸர்க்கங்கள் 4266 ஸ்லோகங்கள்

ஸ்ரீ குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி

பத்தாம் திருமொழி - தில்லைத்திருச்சித்ரகூடம்

ஸ்ரீமத் இராமாயண காண்டச் செய்திகள்

1. அங்கணெடு, 2. வந்தெதிர்ந்த,	-	பாலகாண்டம்
3. செவ்வரிநற்கரு		
4. தொத்தலர்	-	அயோத்தியா காண்டம்
5. வலவணக்குவரை	-	ஆரண்ய காண்டம்
6. தனமருவு வைதேகி	-	ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் சுந்தர காண்டம்
7. குரைகடலை, 8. அம்பொனெடு, 9. செறிதவச்,		- யுத்தகாண்டம்
10. அன்று சராசரங்களை	-	உத்தர காண்டம்
11. தில்லைநகர்த்	-	பலனுரைக்கும் பாசுரம்

வில்லிபுத்தூராழ்வார் அருளிய

வில்லிபாரதம்

பருவங்கள் - 10, சருக்கங்கள் - 45

1. ஆதிபருவம் - 9 சருக்கங்கள்

குருகுலச் சருக்கம்	153
சம்பவச் சருக்கம்	118
வாரணாவதச் சருக்கம்	135
வேத்திரகீயச் சருக்கம்	63
திரௌபதி மாலைஇட்ட சருக்கம்	109
இந்திரப்பிரத்தச் சருக்கம்	46
அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்	90
வசந்த காலச் சருக்கம்	19
காண்டவ தகனச் சருக்கம்	58

2. சபா பருவம் - 2 சருக்கங்கள்

இராயசூயச் சருக்கம்	153
சூதுபோர்ச் சருக்கம்	283

3. ஆரண்ய பருவம் - 7 சருக்கங்கள்

அருச்சுனன் தவநிலைச் சருக்கம்	175
நிவாத கவசர் காலகேயர் வதைச்சருக்கம்	161
முண்டகச் சருக்கம்	139
சடாசுரன் வதைச் சருக்கம்	27
நச்சுப் பொய்கைச்சருக்கம்	69
துருவாச முனிச் சருக்கம்	17
பழம் பொருந்து சருக்கம்	23

4. விராட பருவம் - 5 சருக்கங்கள்

நாடு கரந்துறை சருக்கம்	37
மற்போர்ச் சருக்கம்	14
கீசகன் வதைச் சருக்கம்	103

நிரை மீட்சிச் சருக்கம்	140
வெளிப்பாட்டுச் சருக்கம்	30

4. உத்தியோக பருவம் - 5 சருக்கங்கள்

உலூகன் தூதுச் சருக்கம்	21
வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்	19
சஞ்சயன் தூதுச் சருக்கம்	18
கிருஷ்ணன் தூது சருக்கம்	261
படை எழுச்சிச் சருக்கம்	69

6. பீஷ்ம பருவம் - 10 சருக்கங்கள்

முதற் போர்ச் சருக்கம்	77
இரண்டாம் போர்ச் சருக்கம்	32
மூன்றாம் போர்ச் சருக்கம்	30
நான்காம் போர்ச் சருக்கம்	42
ஐந்தாம் போர்ச் சருக்கம்	25
ஆறாம் போர்ச் சருக்கம்	28
ஏழாம் போர்ச் சருக்கம்	10
எட்டாம் போர்ச் சருக்கம்	39
ஒன்பதாம் போர்ச் சருக்கம்	41
பத்தாம் போர்ச் சருக்கம்	53

7. துருவ பருவம் - 5 சருக்கங்கள்

பதினோராம் போர்ச் சருக்கம்	45
பன்னிரண்டாம் போர்ச்சருக்கம்	93
பதின்மூன்றாம் போர்ச்சருக்கம்	259
பதினான்காம் போர்ச்சருக்கம்	220
பதினைந்தாம் போர்ச் சருக்கம்	50

8. கன்ன பருவம் - 2 சருக்கங்கள்

பதினாறாம் போர்ச் சருக்கம்	91
பதினேழாம் போர்ச் சருக்கம்	269

9, 10. சல்லியபருவம், சௌத்திகப் பருவம்

பதினெட்டாம் போர்ச் சருக்கம்	250

வில்லிபுத்தூரார் பாடாமல் விட்ட பாரதப்பருவங்கள் எட்டு

11. ஸ்திரீ பருவம்
12. சாந்தி பருவம்
13. அனுசாசன பருவம்
14. அசுவமேதிக பருவம்
15. ஆச்ரமவாசிக பருவம்
16. மௌசலா பருவம்
17. மகாபிரஸ்தானிக பருவம்
18. சுவர்க்கா ரோகணிக பருவம்

*****

மகாபாரத நூல்கள்

வியாசர் மகாபாரதம்

பாசகவி இயற்றிய பாரத நாடகங்கள்

கிராதார் ஜுனீயம்
தூத கடோஷ்கஜம்
ஊரு பங்கம்

தெலுங்கு பாலபாரதம் - அகத்திய பட்டர் (பண்டிதர்)
கன்னடம் பம்பபாரதம் - சமண முனிவர் பம்பர்
ஆந்திர பாரதம் - நன்னயபட்டர்
ஆந்திர பாரதம் -திக்கனபட்டர்
ஆந்திர பாரதம் -எர்ரணபட்டர்
பெருந்தேவனார் பாரதம்
பாரத வெண்பா
கண்ணன் அவதார வெண்பா - டி.எஸ். இராசகோபால ஐயங்கார்
ஆயர் அருஞ்செல்வன் - 11 பிரிவுகள் - 110 வெண்பாக்கள்
விருந்தாவனத்துவயமா - 17 பிரிவுகள் - 170 வெண்பாக்கள்
கோவியர்க்காருயிர் - 7 பிரிவுகள் - 70 வெண்பாக்கள்
கஞ்சற்குக் காலன் - 14 பிரிவுகள் - 140 வெண்பாக்கள்
மதுரைப்பதிக்கொற்றவன் - 5 பிரிவுகள் - 50 வெண்பாக்கள்
துவராபதிக் காவலன் - 6 பிரிவுகள் - 60 வெண்பாக்கள்
ஸ்ரீமகாபாரதம் - கிருபானந்த வாரியார்
வியாசர் விருந்து - ராஜாஜி

ஸ்ரீமத் பாகவதம்

வடமொழியில் உள்ள ஸ்ரீமத் பாகவதம் வியாச முனிவரால் இயற்றப்பட்டது. இது 18 புராணங்களில் தலை சிறந்தது. இதனைப் புராணரத்தினம் என்றும் சிறப்பிப்பர். இது 12 கந்தம் உடையது.

'பாகவதம்' – பொருட்சுருக்கம்

பன்னிரண்டு ஸ்கந்தப் பிரிவுகளாக இடம்பெற்றுள்ள ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பெற்றுள்ள கருத்துக்கள் பின்வருமாறு,

(மாதவபண்டிதர்) பிறந்த ஊர் மதுரையை அடுத்த வேப்பத்தூர். 4970 பாடல்களை உட்பிரிவுகளாக 12 கந்தங்களை உடையது.

முதல் கந்தம் – பரீஷித்து வரலாறும் கபிலர் தத்துவமும்.

இராண்டாவது கந்தம் – துருவன் வரலாறும் உலகங்களின் படைப்பும்

மூன்று, நான்கு, 5, 6 கந்தம் – பாகவதக் கதைகள்.

7, 8, 9 வது கந்தம் – நரசிம்ம அவதாரம் முதல் ராமாயணம் வரை .

10வது கந்தம் – கண்ணனின் திருவிளையாடல், துவாரகையில் கண்ணன்.

11வது கந்தம் – உத்தவகீதையும், கலியுகதர்மமும்.

12 வது கந்தம் – கல்கி அவதார மாண்பு.

★★★★★

நாராயண பட்டாத்ரி பாகவத சாரமாக அருளிச் செய்துள்ள
நாராயணீயத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள

எட்டு நியமங்கள்

1. பகவத் கீதா பாராயணம், 2. கங்கா தீர்த்த ஸ்நான பானங்கள், 3. காயத்ரீ ஜபம், 4. துலஸீ பூஜை, 5. திலகதாரணம், 6. ஸாளக்ராம பூஜை, 7. ஏகாதசி வ்ரதம், 8. பகவந்நாம ஸங்கீர்த்தனம்.

கீதா கங்காச காயத்ர்யபி துலஸிகா
கோபிகாசந்தநம் தத்
ஸாலக்ராமாபிபூஜா பரபுருஷ
ததைகாதசீ நாமவர்ணா:
ஏதாந்யஷ்டாந்யயத்நாதபி கலியுகே
த்வத்ப்ரஸாதாய பூயாத்

செவ்வைச் சூடுவார் பாகவதம்

முதல் ஸ்கந்தம்

நூலின் பயன் - நூலின் சிறப்பு - மாயவனின் 22 அவதாரங்கள் - பாகவதம் பிறந்த வரலாறு - நாரதரின் முற்பிறப்பும், தோற்றமும் - வியாசர் பாகவதம் எழுதியமை - கண்ணபிரான் துவாரகை அடைந்தமை - பரீட்சித்து மன்னனின் தோற்றம் - விதுரரின் வருகை - யதுகுலம் அழிவும் கிருஷ்ணனின் மறைவும் - கலிபுருஷன் பரீஷித்து சாபம் பெறுதல் - சுகப்பிரமம் வருகை.

இரண்டாவது ஸ்கந்தம்

மாயவன் நிலை - சௌனகாதியர் நிலை - வியாட்புருஷத் தியானம் - தோற்றம் - சிருஷ்டியும் அவதாரங்களும்.

மூன்றாம் ஸ்கந்தம்

கண்ணன் சரித்திரத்தை உத்தவர் விதுரனுக்கு உரைத்தல் - விதுரனுக்கு மைத்ரேயர் தத்துவ உபதேசம் செய்தல் - பிரமனின் தோற்றமும், சிருஷ்டிகளும் - ஜனகாதியர் தோற்றம் - ஆதிவராக அவதாரம் - இரணிய வதம் - கபிலாவதாரமும் உபதேசங்களும் - யோக நெறிகளும் தத்துவங்களும்.

நான்காம் ஸ்கந்தம்

மரிசீ முதலியோர் படைப்பு உரைத்தல் - தத்தாத்ரேயர் திருஅவதாரம் - நரநாராயணர்களின் அவதாரம் - தட்சன் வேள்வியைச் சிவன் அழித்தல் - துருவனின் வரலாறு - பிருது மன்னனின் தோற்றம் - ஆட்சிச் சிறப்பு - பெற்ற உபதேசம் - ருத்திர கீதம் - பிரசேத சாக்கியர்கள் பதின்மரின் கதைகள்.

ஐந்தாம் ஸ்கந்தம்

பிரியவரதன் - ஆக்னித்ரன் - நாபி - ரிஷபதேவன் - பரதன் - கயன் ஆகியோர் வரலாறு -7 தீவுகள் - கடல்கள் - சூரிய - சந்திர - நவக்கிரக - நட்சத்திர - சப்தரிஷி துருவ மண்டலங்கள் - மேலுலகம் - கீழ் உலகம் - நரகவேதனைகள்.

ஆறாவது ஸ்கந்தம்

அஜாமிளன் கதை - தட்சனின் தோற்றம் - இந்திராதி தேவர்களின் வீழ்ச்சி - விஸ்வரூபனைக் குருவாக இந்திரன் கொள்ளுதல் - நாராயண கவசம் - விருத்ராசுரவதம் - விருத்திரனின் முந்தைய வரலாறு - சித்திர கேதுவின் கதை - மருத்துக்கள் பிறப்பு - புஞ்ஜவன விரத மகிமை.

ஏழாம் ஸ்கந்தம்

பிரகலாதன் வரலாறு - நரசிம்ம அவதாரம் - இறைவனை அடைதற்குரிய ஐந்து வழிகள் - இரணியன் கடுந்தவமும் கொடுங்கோல் ஆட்சியும் - பிரகலாதன் தோற்றம் - பக்தி - உபதேசம் - இரண்யவதம் - வருணாசிரம தர்மம் - இல்லறத்தோர் கதி.

எட்டாவது ஸ்கந்தம்

கஜேந்திர மோட்சம் - பாற்கடலைத் தேவாசுரர்கள் கடைதல் - போர் செய்தல் - மோகினி அவதாரம் - வாமனாவதாரம் - திரிவிக்ரம அவதாரம் - மச்சாவதாரம்.

ஒன்பதாம் ஸ்கந்தம்

இளன் - சையாதி - அம்பரீடன் - இட்சுவாகு - அரிச்சந்திரன் - சகரன் - பகீரதன் - கன்மாடபாதன் -சக்கரவர்த்தி திருமகன் ஆகியோரின் வரலாறு - நிமி சந்திரன் ஆகியோர் மரபுகள் - பரசுராம அவதாரம் - யயாதி - தேவயானி - துஷ்யந்தன் - சகுந்தலை, வரலாறுகள் - பூரு மரபுப் பரதன் - சந்தனு ஆகியோர் கதைகள் - அது - எது மரபுகள்.

பத்தாவது ஸ்கந்தம்

கிருஷ்ணாவதார நோக்கம் - திருஅவதாரம் - கோகுலத்தின் கோலாகலம் - கம்சனின் ஆலோசனை - பூதனை வீடுபேறு - சகடம் உரைத்தல் - மருதிடை தவழ்தல் - பிருந்தாவனம் அடைதல் - வேய்ங் குழல் இசைத்தல் - கோபியர் துகில் கவர்தல் - வேள்வி மங்கையர் உணவளித்தல் - கோவர்த்தனம் எடுத்தமை - கோபியரை மணந்தமை - சங்க சுடனைக் கொன்றமை - நாரதர் கஞ்சக்குரைத்தல் -அக்குரூரன் வருகை - கஞ்சனைக் கொன்றமை - உத்தவனைக் கோகுலத்திலும் அக்குரூரனை அத்தினாபுரத்தும் விடுத்தமை - சராசந்தனோடு போர் முசுகுந்தற்கு அருள்புரிதல் - உருக்குமணி மணத்திறம் - பிரத்யும்னன் அவதாரம் - சத்யபாமா மணத்திறம் - சத தன்னுவாவைக் கொல்லுதல் -

காளிந்தி - மித்திரவிந்தை - சத்தியை - பத்திரை - இலக்கணை ஆகியோரை மணத்தல் - நரகாசுரனைக் கொல்லல் - உருக்குமிணி ஊடல் தீர்த்தல் - பிரத்யும்மன் மணம் - அநிருத்தன் மணம் - சாம்பன் மணம் - சிசுபாலன் - சாலுவன் - தந்தவத்திரன் ஆகியோரைக் கொன்றமை - குசேலர்க்கு அருளல். மிதிலைக்குச் செல்லுதல் - சுருதிகீதை விருத்திராசுரனைக் கொல்லல் - புனல் விளையாட்டு.

பதினோராம் ஸ்கந்தம்

நவயோகீஸ்வரர்களின் உபதேசம் - உத்தவகீதை - அவதூதரின் 24 குருமார்களுடைய அவதூதகீதை - யதுகுல அழிவு.

பன்னிரண்டாவது ஸ்கந்தம்

கலியுகதர்மம் - கல்கியவதார மேன்மை
பரீட்சித்து முத்தி - மார்க்கண்டேயர் தவம்
கிருஷ்ணன் வரலாற்றுச் சிறப்பு

முதலாயினவை.

திரு அங்கமாலை

நாவே வாழ்த்து கண்டாய்! கேசவன் திருநாமத்தை
நாவே வாழ்த்து கண்டாய்!
நெஞ்சே நினையாய்! நாரணன் எட்டெழுத்தை
நெஞ்சே நீ நினையாய்!
கைகாள் வணங்கிடுவீர்! காகுத்தன் திருவடியை
கைகாள் வணங்கிடுவீர்!
செவிகாள் கேட்டிடுவீர் சீதரன் பெரும்புகழை
செவிகாள் கேட்டிடுவீர்!
கண்காள் கண்டிடுவீர்! கண்ணன் வடிவழகை
கண்காள் கண்டிடுவீர் !
கால்காள் வலம்வருவீர்! திவ்யதேச கோயில்களை
கால்காள் வலம்வருவீர்!
மூக்கே முகர்ந்திடுவீர்! முகுந்தன்துலபமதை
மூக்கே முகர்ந்திடுவீர்!
தலையே வணங்கிடுவீர்! தயரதராமன் திருவடியை
தலையே வணங்கிடுவீர்!



வைஷ்ணவ சமயத் தத்துவங்கள்

வைணவப் பிரிவுகள் இரண்டு

1. பாஞ்சராத்ரம்: பகவானால் அருளப்பெற்றது. தந்திரநெறி கூறும் தாந்திரீகம். அக்னியோடு தொடர்புடைய ஆக்னேயம். வாசுதேவன் முதல் புருஷன். அவன் வடிவங்கள் சங்கர்ஷனன், பிரத்யும்னன், அநிருத்தன் என மூன்று.

2. வைகானசம்: விகனஸ் என்பவரால் நிறுவப்பட்டது. இதனை விளக்கியவர்கள் மரீசி, பிருகு, அத்திரி, காசிபர். வைதீக வழக்குடையது. மாந்திரீகம் - சௌரநெறி.

வைணவ நெறிகள்

1. **பத்தி நெறி:** கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம்.
2. **பிரபத்திநெறி:** பிரபத்தியோகம் ஆச்சார்ய அபிமானம்.

வைகானச நெறியில் கூறப்பெறும் இறைவடிவ நிலைகள் ஐந்து

1. **துருவ நிலை -** அனைத்தையும் கடந்தநிலை
   நிஷ்கள மூர்த்தி - கர்ப்பக்கிரகத்தில் இருப்பது.
2. **உக்ர நிலை -** பிரபஞ்சத்திற்குக் காரணனாக நிற்கும்
   விசுவரூப நிலை.
3. **உற்சவமூர்த்தி நிலை -** அவதாரம் போன்றது.
   மூத்தீயில் தட்சிணாக்கினியை ஒத்தது.
4. **கௌதுகம் -** ஆகவனீயத்தீப் போல உள்ளிருந்து ஆட்சிபுரிவது.
5. **போக மூர்த்தி -** நம் அனுபவத்திற்கான காரணப்பொருளாய் அறிதுயிலில் இருந்து உலகலீலைகளைப் புரிபவர்.

பாஞ்சராத்திரத்திற்கும் வைகானசத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஐந்து

பாஞ்சராத்திரம்	வைகானசம்
1. வைணவர்க்குரிய ஐம்பெரும் கடன்களையும் வற்புறுத்தி, இவ்வழிபாடு அனைவர்க்கும் உரித்தென்பர்.	இருபிறப்பாளர்க்கும் உரித்தென்பர்.
2. இதனை அக்கினியோடு தொடர்புபடுத்தி ஆக்னேயம் என்பர்	இதனைச் சூரியனோடு தொடர்புபடுத்திச் சௌரம் என்பர்
3. வாசுதேவனை முதல்வன் எனக்கூறி அவன் வடிவங்களாகச் சங்கர்ஷன் பிரத்தியும்நன், அனிருத்தன் எனும் மூவரைக் குறிக்கும்.	விஷ்ணுவே முதல்வன் எனக் கூறி அவன் வடிவங்களாகச் சத்தியன், அச்சுதன், அநிருத்தன் எனும் மூவரைக் குறிக்கும்.
4. இந்நெறியமைந்த கோயில்கள் மலைகளிலும், ஆற்றங்கரைகளிலும் அமைந்திருக்கும்.	இந்நெறி அமைந்த கோயில்கள் திருமலை தவிரப் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும், கிராமங்களிலும் அமைந்திருக்கும்.
5. வீடுபேறு ஒன்றையே சிறப்பித்துக் கூறும்.	இம்மை, மறுமை நலன்களையும் சிறப்பித்துக் கூறும்.

பாஞ்சராத்திர ஆகமப்படி கோயில் பிரதிஷ்டை முறைகள் ஐந்து

1. *ஸ்தாபனா* - திருமாலை நின்ற திருக்கோலத்தில் அமைப்பது.
2. *ஆந்தாபனா* - திருமாலை வீற்றிருந்த திருக்கோலத்தில் அமைப்பது.
3. *ஸம்ஸ்தாபனா* - திருமாலைப் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் அமைப்பது.
4. *ப்ரஸ்தாபனா* - திருமாலை வாகனங்களில் எழுந்தருளியிருக்கும் நிலையில் அமைப்பது.
5. *பிரதிஷ்டை* - கர்மார்ச்சையுடன் அமைப்பது.

ஐந்து இரவுகளில் வரிசைப்படி செய்யவேண்டிய வேள்விகள்

(பாஞ்சராத்திரம்)

அக்னி வேள்வி
சுதோம வேள்வி
உத்திய வேள்வி
அதிராதர வேள்வி
ஐந்தாவது வேள்வி

பாஞ்சராத்திர வைணவ மரபு இலக்கியங்கள் 7

பிரம்ம பாஞ்சராத்திரம்
சிவ பாஞ்சராத்திரம்
கௌமார பாஞ்சராத்திரம்
வசிட்ட பாஞ்சராத்திரம்
கபில பாஞ்சராத்திரம்
கௌதம பாஞ்சராத்திரம்
நாரத பாஞ்சராத்திரம்

வழிபாட்டுநெறிகள் இரண்டு (வடகலை தென்கலை)

வடகலை : வேதாந்த தேசிகர் மரபு. மற்கட நியாயத்தினர். வடமொழி நூல்மரபினர். 'U' வடிவத்திருநாமம்

தென்கலை : பிள்ளை லோகாச்சாரியர் மரபு. மணவாளஜீயர். மார்ச்சால(பூனை) நெறியினர். தமிழ்ப்பிரபந்த நெறியினர். 'Y' வடிவத் திருநாமம்

வடகலை தென்கலை வேறுபாடுகள்

வ.எண்.	**வடகலை** (பாஷ்யவழி)	**தென்கலை** (பிரபந்த வழி)
	திருக்குருகைப்பிரான்பிள்ளான்	எம்பார் (கி.பி. 1025)
0	எங்களாழ்வான் (கி.பி.1108)	பராசரபட்டர் (கி.பி. 1062)
	நடாதூரம்மாள் (கி.பி.1165)	நம்பிள்ளை (1147-1252)
	ஆக்கிரேய ராமானுஜர் (1221)	பெரியவாச்சான் பிள்ளை.
	வேதாந்த தேசிகர் (1268 - 1369)	வடக்கு திருவீதிப்பிள்ளை (1167-1285)
	நயினார் ஆசாரியர் (கி.பி. 1361) (தேசிகன்மகனார்)	பிள்ளை லோகாசாரியர் (கி.பி. 1300)
	பிரம்மந்திரஸ்வதந்தர ஜீயர் (கி.பி. 1360 இல் பரகாலமடத்தைத் தொடங்கியவர்)	திருவாய்மொழிப்பிள்ளை (கி.பி. 1380)
	கடிகாசலம் அம்மாள்	மணவாளமாமுனிகள் (1370 - 1443)
	ஆதிவண்சடகோபஜீயர் (கி.பி. 1398இல் அகோபில மடத்தைத் தொடங்கியவர்)	வானமாமலை ராமானுஜ ஜீயர் (அட்ட திக்கயங்களின் தலைவர்) வானமாமலை மடத்தை கி.பி. 1440இல் தொடங்கியவர்.
1.	பரமாத்மாவின் கருணை கூடி வாழச்செய்வது.	அக்கருணை தடையற்றது.
2.	மோட்சத்தினை அடைய வேறுபட்ட படிநிலைகள் இல்லை.	உண்டு.
3.	கர்மமும் ஞானமும் பக்திக்குத் துணையானவை.	ஒவ்வொன்றும் முதன்மை பெற்றவை.
4.	ஸ்ரீமந் நாராயணனுக்குச் சமமாக ஸ்ரீயும் அருள் வழங்கக் கூடியவள்.	குறிப்பிடத்தக்க (சொரூப வியாப்தி) அருள் நிலைமை உடையவள் அல்லள்.

வ.எண்.	வடகலை (பாஷ்யவழி)	தென்கலை (பிரபந்த வழி)
5.	திருமகள் மோட்சம் அளிக்கும் ஆற்றல் உடையவள்.	இடைநின்று பரிந்துரை (புருஷாகாரம்) மட்டுமே செய்யவல்லவள்.
6.	ஆன்மாவை வினைகளினின்றும் நீக்கும் பரம கருணை அவனது விருப்பமாகும்.	அப்பரம கருணை ஆன்மாவின் துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளும்.
7.	பிரபத்திக்கு முற்பட்டவை ஆறு அங்கங்கள்.	அவை தேவையில்லை.
8.	கீழ்ச்சாதியில் பிறந்த பிரபன்னன் சொல்லளவில் மரியாதைக்குரியவன்.	சாதிவேறுபாடின்றிப் பிரபன்னர் அனைவரும் சமமே.
9.	பரமாத்மாவின் ஊடுருவி நிரம்பும் ஆற்றல் நுட்பமான ஆன்மாவிடம் வரையறைக்குட்பட்டது.	அவ்வாற்றல் எல்லைக்குட்பட்டதன்று.
10.	பிரபத்தி இறைவனை அடையும் பல வழிகளில் ஒன்றாகும்.	பிரபத்தி ஒன்றே வழி.
11.	உதவியற்ற ஆன்மாவிற்குக் கடைசி அடைக்கலம் பிரபத்தியே	பிரபத்தியே முதலும் முடிவுமான வழியாகும்.
12.	அவனது திருவருள் ஆன்மாவின் தவறுகளையும் கடந்து ஆன்மாவின் மீது தனித்தன்மை வாய்ந்தது.	ஆன்மாவின் தவறுகளையும் அவர் ஏற்கிறார்.
13.	உலகின் ஒரு பகுதியாகக் கைவல்யம் உள்ளது. படி நிலையிலுள்ளது.	கைவல்யம் ஆன்ம உலகின் ஒருபகுதியாக மாறியமையும்.
14.	ஆன்மாவை உடலினின்றும் பிரிக்கும் கைவல்ய நிலை தற்காலிக நிலையாகும்.	அது தொடர்ந்து வரும் படிநிலையாகும்.
15.	வேதாந்த தேசிகரைச் சிறப்பித்துப் பாராட்டுவர்.	பிள்ளை லோகாசாரியரையும், மணவாள மாமுனிகளையும் சிறப்பித்துப் பாராட்டுவர்.

வ.எண்.	**வடகலை** (பாஷ்யவழி)	**தென்கலை** (பிரபந்த வழி)
16.	ஞானநெறி, பக்தி நெறி போன்று பிரபத்தி நெறியும் ஒரு நெறியே என்பர். எனினும் இதனை ஒப்பற்ற நெறியாகக் கொள்வதில்லை. தாய்க் குரங்கு, குட்டிக்குரங்கை எடுத்துச் சென்றாலும் குட்டியும் தாயைப்பற்றிக் கொள்ள வேண்டும். அதுபோல உயிர் உய்திபெற இறைவன் அருளினும் உயிரும் அதனைப்பெற முயற்சி செய்யவேண்டும்.	இறைவன் கருணைக்கு எல்லை இல்லை. ஆதலின் பூனை தன் குட்டியைத் தானே தன் வாயில் கவ்விச்செல்லுதல் போல இறைவனும் தானே உயிர்களைப் பேணிக் காப்பான். எனவே உய்தி பெற உயிரது முயற்சி தேவையில்லை. இறைவனின் கருணையே சாலும் என்பதாகும். இத்தகைய இறைவனை அடையப் பிரபத்தி நெறியே சிறந்தது என்பர்.
17.	இறைவன் உயிர்களை ஆட் கொள்ளுங்கால் உயிர்களின் குற்றங்களைத்தான் ஏற்பதில்லை.	உயிர்களின் ஈடேற்றத்திற்காக அவற்றின் குற்றங்களையும் தான் ஏற்பன்.
18.	வீடுபேற்றிற்கு ஏதுவாகத் திருமாலைப் போற்றுவது போன்றே திருமகளையும் போற்றுவர்.	திருமகளின் தெய்வத்தன்மையைப் போற்றினும், அரசு, அமைச்சு என்ற நிலையிலேயே திருமாலையும் திருமகளையும் கொள்வர்.
19.	கங்கையின் பிறப்பிடமாகத் திருமாலின் வலது திருவடியை எண்ணி U வடிவில் நாமமிட்டு அதன் நடுவில் செந்நிறக் கோடும் இடுவர்.	திருமாலின் இரு திருவடிகளும் தாமரைப்பீடத்தில் அமைந்திருக்கும் நிலையில் Y இட்டு அதன் நடுவில் செந்நிறக் கோடு இடுவர்.
20.	விதவைப்பெண்கள் தலையை மழித்துக்கொள்ள வேண்டுமென்பர்.	இதனை விரும்புவதில்லை.

பகவத் கீதை
அமைப்பும் சிறப்பும்

பகவத் கீதை - மூன்று ஷட்கங்கள்

முதல் ஷட்கம்

முதல் ஆறு அத்தியாயங்கள் - த்வம் (நீ) பத விளக்கம்

இரண்டாம் ஷட்கம்

ஏழு முதல் பன்னிரண்டு அத்தியாயங்கள் - தத்(அது) பத விளக்கம்

மூன்றாம் ஷட்கம்

பதின்மூன்று முதல் பதினெட்டு அத்தியாயங்கள் - அசி (இருக்கிறாய்) பதவிளக்கம்.

மந்திரச் சொற்கள் மூன்று (பகவத் கீதை)

ஓம்

வேத பாராயண முறைப்படி தானம் தவம் வேள்விக்குமுன் சொல்லுதல்.

தத்

பலனைக் கருதாமல் சொர்க்கம் வேண்டித் தானம் தவம் செய்யு முன் சொல்லுதல்.

சத்

மங்களமான காரியங்கள் அனைத்திலும் பயன்படுத்தப்பெறுதல்.

பகவத் கீதையில் சுட்டப்பெற்றுள்ள அருச்சுனன் பெயர்கள் - 13

அர்ச்சுனன்	கௌந்தேயன்	பாரதன்
அனகன்	சவ்யசாசின்	பார்த்தன்
கபித்வஜன்	தனஞ்சயன்	
கிரீடி	பரந்தவன்	
குருநந்தனன்	பாண்டவன்	
குடாகேசன்		

பகவத் கீதையில் சுட்டப்பெற்றுள்ள கண்ணன் திருநாமங்கள் - 18

அச்சுதன்	பகவான்	வாசுதேவன்
அரிஆதனன்	புருஷோத்தமன்	வார்ஷ்ணேயன்
கிருஷ்ணன்	மதுசூதனன்	விஷ்ணு
கேசவன்	மாதவன்	ஜனார்த்தனன்
கேசினி சூதனன்	யாதவன்	ஜகந்நிவாசன்
கோவிந்தன்	யோகஸ்வரன்	ஹ்ருஷீகேசன்

மகாபாரதம் 18 பருவங்கள் அதில் பகவத்கீதை 18 அத்தியாயங்கள் - 700 சுலோகங்கள்

1.	அர்ச்சுன விஷாத யோகம்	47 சுலோகங்கள்
2.	சாங்கிய யோகம்	72 சுலோகங்கள்
3.	கர்மயோகம்	43 சுலோகங்கள்
4.	ஞானகர்மசன்யாச யோகம்	42 சுலோகங்கள்
5.	சந்யாச யோகம்	29 சுலோகங்கள்
6.	தியான யோகம்	47 சுலோகங்கள்
7.	ஞான விஞ்ஞான யோகம்	30 சுலோகங்கள்
8.	அட்சர பிரம்ம யோகம்	28 சுலோகங்கள்
9.	ராஜவித்யா ராஜ குஷ்ய யோகம்	34 சுலோகங்கள்
10.	விபூதி யோகம்	42 சுலோகங்கள்
11.	விசுவரூப தரிசனம்	55 சுலோகங்கள்
12.	பக்தி யோகம்	20 சுலோகங்கள்
13.	க்ஷேத்திர க்ஷேத்திர க்ஞவிபாக யோகம்	34 சுலோகங்கள்
14.	குணத்ரய விபாக யோகம்	27 சுலோகங்கள்
15.	புருஷோத்தம யோகம்	20 சுலோகங்கள்
16.	தெய்வாசுர சம்பத் விபாக யோகம்	24 சுலோகங்கள்
17.	சிரத்தாத் ரய விவாக யோகம்	28 சுலோகங்கள்
18.	மோட்ச சன்யாச யோகம்	78 சுலோகங்கள்

*****



ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் அருளிச் செய்த நூல்கள்

1. ரகசிய திரையசாரம்
2. தேசிகப் பிரபந்தம் -

   1 அமிருதரஞ்சனி - 39 பாசுரங்கள்
   2 அதிகாரசங்கிரகம் - 56 திருப்பாசுரங்கள்
   3. அமிருதாஸுவாதினி - 37 பாசுரங்கள்
   4. பரமபதசோபானம் - 21 பாசுரங்கள்
   5. பரமபதபங்கம் - 54 பாசுரங்கள்
   6. மெய்விரத மான்மியம் - (அத்திகிரி மகாத்மியம்)
   7. அடைக்கலப்பத்து - 11 பாசுரங்கள்
   8. அர்த்தபஞ்சகம் - 11 பாசுரங்கள்
   9. வைணவத் தினசரி - 10 பாசுரங்கள்
   10. திருச்சின்னமாலை - 11 பாசுரங்கள்
   11. பன்னிரு நாமம் - 13 பாசுரங்கள்
   12. திருமந்திரசுருக்கு - 10 பாசுரங்கள்
   13. துவைய சுருக்கு - 12 பாசுரங்கள்
   14. சரமசுலோக சுருக்கு - 11 பாசுரங்கள்
   15. கீதார்த்தசங்கரகம் - 21 பாசுரங்கள்
   16. மும்மணிக்கோவை - 10 பாசுரங்கள்
   17. நவமணிமாலை - 10 பாசுரங்கள்
   18. பிரபந்தசாரம் - 20 பாசுரங்கள்
   19. ஆகாரநியமம் - 22 பாசுரங்கள்

3. பிள்ளை யந்தாதி - நயினாரா சாரியர் - 21 பாசுரங்கள்
   மன்னப்பையங்கார் - தேசிகர் நூற்றந்தாதி
4. மணவாள மாமுனிகள் அருளிச்செய்தவை

   1. யதிராசவிம்சத் - இராமானுஜரைப் பற்றிய நூல்
   - வடமொழி 20 சுலோகங்கள்

   2. தத்துவத்திரயம் முமுட்சுப்படி பூவசகபூஷணம், ஆசார்ய ஹிருதயம் ஆகியவற்றிற்கான உரைகள்

3. ஞானசாரம் பிரமேய சாரம் ஆகியவற்றிற்கான புராண சுலோகங்கள்.
4. பிரமாணத்திரட்டு
5. உபதேச ரத்தினமாலை ஒருதனியன் + 73 செய்யுள்கள்
6. ஆர்த்திப்பிரபந்தம் ஒருதனியன் + 60 பாசுரங்கள்
7. திருவாய்மொழி நூற்றந்தாதி. 100 வெண்பாப் பாசுரங்கள்

5. அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்தவை
1. ஞானசாரம் 40 வெண்பாப் பாசுரம்
2. பிரமேய சாரம் 10 வெண்பாப் பாசுரம்

6. சப்த காதை - விளாஞ்சோலைப்பிள்ளை - 7 பாசுரங்கள்
7. ஆழ்வார்கள் வாழித் திருநாமம் அப்பிள்ளை 1+3+12 பாசுரங்கள்
8. ஓரான் வழி ஆசாரியர்கள் வாழித் திருநாமம் 26 பாசுரங்கள்
9. வாழித் திருநாமங்கள் - 31 பாசுரங்கள்

*****

பிள்ளை லோகஞ்சீயர் நூல்கள்

1. இராமானுசாச்சார்ய திவ்ய சரிதை
2. யதீந்திரப் பிரவணப் ப்ரபாவம் (மணவாள மாமுனிகள் சரித்திரம்)
3. இராமானுஜ நூற்றந்தாதி வியாக்யானம்
4. அர்த்த பஞ்சக வியாக்யானம்
5. சப்த காதை வியாக்யானம்
6. உபதேச ரத்னமாலை
7. ஆர்த்திப் பிரபந்தம்
8. திருவாய்மொழி நூற்றந்தாதி
9. ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம்
10. நாலாயிரப் பிரபந்தத் தனியன் வியாக்யானம்
11. உபதேசத் திருநாமம்
12. திருமந்திரார்த்த அரும்பத விளக்கம்

*****

வாதிகேசரி - அழகிய மணவாளப் பெருமாள் ஜீயர்

(சொட்டை)

1. திருவாய்மொழி பன்னீராயிரப்படி
2. தத்துவ தீபம்
3. தீபப் பிரகாசிகை
4. தத்துவ நிருபணம்
5. தத்துவ சங்கிரகம்
6. தத்துவ பூஷணம்
7. ஞானார்ணவம்
8. திருவாய் மொழிக்குச் சங்கதி
9. தமிழ்க்கவிப் பிரபந்தம்
10. பகவத்கீதை வெண்பா - 223 வெண்பாக்கள்

*****

குரு பரம்பரை நூல்கள் ஐந்து

குருபரம்பரை

வைணவ ஆச்சாரியார்களின் குரு பரம்பரையினைச் செய்யுட்களால் கூறும் நூல். இயற்றியவர் - கீழையூர்ச் சடகோப ராமானுஜ முதலியார் எனும் சடகோபதாசர்.

இரண்டாவது குருபரம்பரை

இயற்றியவர் - அழகியநம்பி.

மூன்றாவது குரும்பரம்பரை புராணம்

இயற்றியவர் - ஊறை விசயராகவன்.

நான்காவது பரமயோகி விலாசம்

இயற்றியவர் - பெயர் விளங்கவில்லை.

ஐந்தாவது இராமானுஜ சரிதை

இயற்றியவர் - பாகை சீதாராமதாசர் 1215 செய்யுள்கள்.

*****

பிள்ளை உலக ஆசிரியர் அருளிச் செய்த அஷ்டாதச இரகசிய கிரந்தங்கள் (18)

1. முமுட்சுப்படி (திருமந்திரம் துயவம் சரம சுலோக விளக்கம்)
2. தத்துவத் திரயம் (சித்து அசித்து ஈஸ்வர தத்துவவிளக்கம்)
3. அர்த்த பஞ்சகம் (ஆன்ம. இறைவன். புருஷார்த்த, உபாய விரோதி சொரூப விளக்கம்)
4. ஸ்ரீ வசன பூஷணம்
5. பிரமேய சேகரம்
6. பிரபஞ்ச பரித்திராணம்
8. சாரசங்கிரகம்
9. சம்சார சாம்ராஜ்யம்
10. நவரத்தினமாலை
11. நவவித சம்பந்தம்
12. யாத்ருசிகப்படி (திருமந்திர விளக்கம்)
13. பரந்தபடி (துவய விளக்கம்)
14. ஸ்ரீய:பதிப்படி (சரம சுலோக விளக்கம்)
15. தத்துவ சேகரம்
16. தனி துவயம்
17. தனி சரமம்
18. தனி பிரணவம்

*****

ஸ்ரீ இராமானுஜர் அருளிய நவரத்தினங்கள் (9)

வேதாந்த சங்கிரகம்
ஸ்ரீபாஷ்யம்
கீதாபாஷ்யம்
வேதாந்த தீபம்
வேதாந்த ஸாரம்
சரணாகதி கத்யம்
ஸ்ரீரங்க கத்யம்
ஸ்ரீ வைகுண்ட கத்யம்
நித்யக்ரந்தம்

*****

ரகு வம்சம்

வடமொழியான சமஸ்கிருதத்தில் சிறந்து விளங்கும் ஐம்பெரும் காவியங்களில் ஒன்று ரகுவம்சம். இது 19 சருக்கங்களை உடையது. திலீபன் முதலாக அக்னிவர்ணன் ஈறாக 29 அரசர்களின் வரலாற்றை இந்நூல் எடுத்துரைத்துள்ளது. 9 முதல் 15ஆம் சருக்கம் வரையுள்ள 7 சருக்கங்கள் ராமாவதாரச் சிறப்பினை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளன.

*****

ஸ்ரீ ராமானுஜர் ரகசியக் கிரந்தங்கள் - 32

1. ஸம்ப்ரதாய பரிசுத்தி
2. தத்வபதவீ
3. ரஹஸ் யபதவீ
4. ரகஸ்ய நவநீதம்
5. தத்வ நவநீதம்
6. ரகஸ்ய மாத்ருகை
7. ரகஸ்ய மாத்ருகை
8. தத்வஸ்ந்தேசம்
9. ரகஸ்ய சந்தேசம்
10. ரகஸ்ய சந்தேச விவரணம்
11. தத்வரத்னாவளி
12. தத்வரத்னாவளி ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்
13. ரஹஸ்ய ரத்னாவளி
14. ரஹஸ்ய ரத்னாவளிப் ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்
15. தத்வத்ரய களகம்
16. ஸாரஸங்க்ஷேபம்
17. ஸாரதீபம்
18. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
19. ஸாரஸாரம்
20. அபயப்ர நாத ஸாரம்
21. தத்வ சிகாமணி
22. ரஹஸ்ய சிகாமணி
23. அஞ்ஜலி வைபவம்

24. ப்ரநாத சதகம்
25. உபகார ஸங்க்ரஹம்
26. ஸாரஸங்க்ரஹம்
27. விரோத பரிஹாரம்
28. முநிவாஹன போகம்
29. மதுரகவி ஹ்ருதயம்
30. பரமபத ஸோபநம்
31. பரமபத பங்கம்
32. ஸ்ரீ ஹஸ்திகிரிமஹாத்மியம்

*****

ஸ்ரீ இராமானுஜர் அருளிய ஸ்தோத்திரங்கள் - 32

1. ஹயக்ரீவ ஸ்தோத்ரம்
2. தேவநாயக பஞ்சாசத்
3. அச்யுத சதகம்
4. கோபால விம்சதி
5. தேஹனீச் ஸ்துதி
6. யதோத்காரி ஸ்தோத்ரம்
7. வரதராஜ பஞ்சாசத்ரம்
8. காமாளி காஷ்டகம்
9. அஷ்டபுஜாஷ்டகம்
10. சரணாகதி தீபிகை
11. பரமார்த்த ஸ்துதி
12. தயா சதகம்
13. பகவத் தியான சோபனம்
14. தசாவதார ஸ்தோத்திரம்
15. அபீதிஸ்த்வம்
16. ந்யாஸ சதகம்
17. ந்யாஸவிம்சதி
18. ந்யாஸ திலகம்
19. பாதுகாஸஹஸ்ரம்
20. ஸ்ரீஸ்துதி

21. பூஸ்துதி
22. நீளாஸ்துதி
23. கோதாஸ்துதி
24. ஸீதர்சனாஷ்டகம்
25. ஷோடாசாயுத ஸ்தோத்ரம்
26. கருட தண்டகம்
27. கருட பஞ்சாசத்
28. த்ரமிடோபிஷத்தாத் ப்ரயரத்னாவளி
29. த்ரமிடோப நிஷத் ஸாரம்
30. யதிராஜஸப்ததி
31. தாபி பஞ்சகம்
32. திவ்ய தேச மங்களாசாஸன பஞ்சகம்

*****

108 திவ்யதேச வரலாறு கூறும் நூல்கள்

1. நூற்றெட்டு திவ்யதேச யாத்ராப்ரபாவ சந்திரோதயம்
   -பெங்களூர் வழக்கறிஞர் ஸ்ரீ ஜி.கே. பலிஜா
2. விஷ்ணு ஸ்தல மஞ்சரி - ஸ்ரீமான் ம. கொ. பட்டாபிராம முதலியார்
3. 108 திவ்யதேசங்களில் திருமால் திருவுருவங்கள்
   - திரு. டி.பி. இராமானுஜம்
4. 108 வைணவத் திவ்யதேச வரலாறு
   - வைணவச் சுடராழி - ஆ. எதிராஜன்
5. 108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேச வைபவமும் புராண அபிமான ஸ்தலங்களும் - தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.
6. தமிழகத் திருமால் தலங்கள் - ஜீ. ச. முரளி.
7. ஸ்ரீ வைஷ்ணவத் திவ்ய தேசங்கள்- டாக்டர். ஆர். இராமானுஜம்.
8. 108 திருப்பதிக்கோவை - திருவரங்கத் தமுதனார்.
9. 108 திருப்பதி அந்தாதி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.
10. நாலாயிரப் பாசுரப்படி - வங்கிப்புரத் தாய்ச்சி
    108 திருப்பதிக் கோவை
11. 108 திருப்பதி திருப்புகழ் - குரவை ராமானுஜதாசர்
12. 'திருவரங்கம்' பெரிய கோயிலின் கட்டிடக் கலைச்செல்வம் - வி.என். ஹரிராவ்

13. காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் திருக்கோயில் - கே.வி. இராமன்

மற்றும் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், காஞ்சி அண்ணங்கராச்சாரியார், புத்தூர் சுதரிசனர், ந. சுப்புரெட்டியார் முதலானோர் எழுதிய நூல்கள்

*****

திவ்யப் பிரபந்த உரையாசிரியர்கள்

கேள்வி ஞானமரபு

நாதமுனிகள்
உய்யக்கொண்டார்
மணக்கால் நம்பி
ஆளவந்தார்
பெரிய நம்பிகள்
திருமாலையண்டான்
இராமானுஜர்
திருக்குருகைப்பிரான் பிள்ளான் - ஆறாயிரம்
நஞ்சீயர்
வாதிகேசரி அழகிய மணவாளஜீயர்
பெரிய வாச்சான்பிள்ளை
வடக்குத் திருவீதிப்பிள்ளை
அப்பிள்ளை
பெரிய பரகால சுவாமி
அண்ணங்கராசாரியார்
கிருஷ்ணமாசாரியர். சே.
கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எஸ்.
புருஷோத்தம நாயுடு பு.ரா.
பெரிய வாச்சான் பிள்ளை
மணவாள முனிகள்
மாதவதாஸன் மயிலை
ஸ்ரீ நிவாஸய்யங்கார் சுவாமி.கி.

*****

திவ்யப் பிரபந்தப் பதிப்பாசிரியர்கள்

கோவிந்தராஜ ஐயங்கார்
திருநாராயணபுரம்
கிருஷ்ணமாசாரியா சுவாமிகள். கே.
ஸ்ரீநிவாசராகவாசாரியர்
பார்த்தசாரதி அய்யங்கார்
ராஜம்.எஸ்
கோபாலசார்ய ஸ்வாமி
திருக்கச்சி நம்பிதாஸர் கா.வெ.
காரப்பங்காடு
அண்ணங்கராசாரியர். பி.ப.
மாதவதாஸன். மயிலை

*****

பிறமொழி நூல்கள்

சீதாயணம் (ஆங்கிலம்) - டாக்டர். கே.ஆர். சீனிவாச அய்யங்கார்
பாஸ்கர சதகம் (தெலுங்கு) -
கீதகோவிந்தம் (வடமொழி) - ஹரிஜெயதேவர்.
பாதுகாசகஸ்ரம் (வடமொழி) - தூப்புல் சுவாமி தேசிகன்.
அமிர்தபலாவளி சதகம் (வடமொழி) - எறும்பியப்பா என்ற வரதாச்சா்ரியார்.
கனகதாராதோத்திரம் (வடமொழி) - ஆதிசங்கரர்.
ஸ்ரீஸ்துதி (வடமொழி) - ஸ்ரீ வேதாந்த தேசிகர் .

*****

திருவடி சரணடைந்தேன்

ஊன் இடைச் சுவர் வைத்து, என்பு தூண் நாட்டி
உரோமம் வேய்ந்து, ஒன்பது வாசல்
தான் உடைக் குரம்பை பிரியும்போது, உன்-தன்
சரணமே சரணம் என்று இருந்தேன்;
தேன் உடைக் கமலத் திருவினுக்கு அரசே!
திரை கொள் மா நெடுங்கடல் கிடந்தாய்!
நான் உடைத் தவத்தால் திருவடி அடைந்தேன் -
நைமிசாரணியத்துள் எந்தாய்!

- நைமிசாரணிய பாசுரம்



வைஷ்ணவ சமய விரதங்கள்

திருமாலுக்குரிய விரத நாட்களாகக் கொள்ளப்பெறுவன ஏழு

வார நாட்களில்	-	1. சனிக்கிழமை.
நட்சத்திரங்களில்	-	2. திருவோணம்
		3. ரோகிணி
திதிகளில்	-	4. ஏகாதசி
		5. துவாதசி
		6. அஷ்டமி
		7. நவமி

ஆகிய ஏழுமாம்.

ஏகாதசி

தேய்பிறை, வளர்பிறை ஏகாதசி திதி நாட்களில் மேற் கொள்ளப் பெறுவது. மார்கழி வளர்பிறை ஏகாதசி சிறப்பு வாய்ந்தது. இது வைகுண்ட ஏகாதசி எனவும் பெறும். அன்று ஆலயங்களில் சொர்க்கவாசல் என்னும் சிறப்பு வழி திறக்கப்பெறும்.

சிரவண துவாதசி

இவ்விரதம் முனித்ரய சிரவண துவாதசி எனவும், 'கீதா ஜயந்தி' எனவும் பெறும். ஆவணி மாதம் வரும் துவாதசி நாளன்று மேற்கொள்ளப்பெறுவது.

கோகுலாஷ்டமி

ஆவணி மாதம் தேய்பிறையில் வரும் அஷ்டமி திதி நாளன்று கண்ணனை எண்ணி மேற்கொள்ளப்பெறும் விரதம். இதனை ரோகிணி நட்சத்திர நாளன்றும் கொண்டாடுவர்.

ஸ்ரீ ராமநவமி

இந்நாள் முனித்ரய ஸ்ரீ ராமநவமி எனவும், வைணவ ஸ்ரீராம நவமி எனவும் குறிப்பிடப்பெறும். சித்திரை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்துடன் இணைந்த நவமி நாளை இராமன் ஜன்ம நட்சத்திரத் திருநாளாக எண்ணி விரதம் மேற்கொள்ளுதல் மரபு.

ஸ்ரீ ஜெயந்தி

ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி

நரசிம்மப் பெருமான் பிரகலாதனுக்குப் பிரத்யட்சமாகி அருள்புரிந்த நாள். சித்திரை அல்லது வைகாசித் திங்களில் இவ்விரத நாள் இடம்பெறும்.

திருவோணம்

அயக்ரீவர் திருநாளானஆவணி மாதத் திருவோண நன்னாளை விரதநாளாக அனுஷ்டித்தல் மரபாகும்.

சனிக்கிழமை

மாதாந்திர சனிவார நாட்களில் மேற்கொள்ளப்பெறும் இவ்விரதம் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் விசேடமாகக் கொண்டாடப் பெறும்.

விரதநாட்களில் உணவுக் கட்டுப்பாடு - மௌன நோன்பு - புலனடக்கம் - திருமால் தியானம் - திவ்ய பிரபந்தபாசுரப் பாராயணம் - ஆகியனவற்றை மேற்கொள்ளுதல் சிறப்பாகும்.

அபிதான சிந்தாமணியில் கூறப்பெற்றுள்ள வைணவ விரதங்கள் - 28

1. நக்ஷத்திர புருஷ விரதம்
2. கல்யாண வீமத்துவாதசி விரதம்
3. அசூன்யசயவிரதம்
4. விசோக துவாதசி விரதம்
5. விபூதி துவாதசி விரதம்
6. மதனத்துவாதசி விரதம்
7. பரசுராம ஜெயந்தி

8. பஞ்சமி - சித்திரை மாத்திய சுக்கில பஞ்சமி
9. நாகதஷ்ட விரதம்
10. மாகசுக்லபஞ்சமி விரதம்
11. கிருஷ்ண ஜன்மாஷ்டமி
12. அக்ஷயநவமி விரதம்
13. தசாவதார விரதம்
14. ஏகாதசி
15. கார்த்திகை சுக்ல ஏகாதசி விரதம்
16. மார்கழி ஏகாதசி விரதம்
17. வைசாக சுக்லத்வாதசி விரதம்
18. ஆஷாட சுக்ல வாதசி விரதம்
19. வாமன ஜயந்த விரதம்
20. க்ஷீராப்தி சயன விரதம்
21. நரசிம்ம ஜயந்தி
22. அநந்த சதுர்த்தசி விரதம்
23. நாக சதுர்த்தசி விரதம்
24. சனிவார வேங்கடேசுவர விரதம்
25. மாஸ உபவாஸம்
26. மகாசங்கிராந்தி
27. மௌன விரதம்
28. அனுமப்பிரதஷிணம்

ஏகாதசி

சிரவண துவாதசி

கோகுலாஷ்டமி

ஸ்ரீராமநவமி

ஸ்ரீநரசிம்ம ஜயந்தி


திருவோணம்

சனிக்கிழமை

இவற்றையும் பெருமாளுக்குரிய விரதங்களாக கொள்வர்.

வ. எண்	திங்கள்	பட்சம்	ஏகாதசி	விரதபலன்
1.	மார்கழி	கிருஷ்ண	உற்பத்தி	பரமபதம் கிட்டும்
2.	மார்கழி	சுக்கில	வைகுண்ட	தமக்கும் முன்னோர்க்கும் மோட்சம்
3.	தை	கிருஷ்ண	சபலா	சகலபாவம் தீரும்
4.	தை	சுக்கில	புத்ரதா	புத்திரப்பேறு கிட்டும்
5.	மாசி	கிருஷ்ண	ஷட்திலா	அன்னம் பஞ்சமிலா வாழ்க்கை
6.	மாசி	சுக்கில	ஜயா	பேய்களுக்கு நற்கதி
7.	பங்குனி	கிருஷ்ண	விஜயா	பெருந்துயர் நீக்கும்
8.	பங்குனி	சுக்கில	ஆமலகீ	கோதான பலன் கிட்டும்
9.	சித்திரை	கிருஷ்ண	பாபமோசனிகா	பாவம் நீங்கி விருப்பம் கூடும்
10.	சித்திரை	சுக்கில	காம்தா	கணவன் பாவம் நீங்கி நன்மை பெருகும்
11.	வைகாசி	கிருஷ்ண	வருதிநீ	வித்யாதானம் செய்த பலன்
12.	வைகாசி	சுக்கில	மோகிநீ	மோகம் அகன்று முக்தி கிட்டும்
13.	ஆனி	கிருஷ்ண	அபரா	பிரமஹத்திப் பாவம் நீங்கும்

வ. எண்	திங்கள்	பட்சம்	ஏகாதசி	விரதபலன்
14.	ஆனி	சுக்கில	நிர்ஜலா	துன்பம் நீங்கிப் பரமானந்தம் தரும்
15.	ஆடி	கிருஷ்ண	யோகநீ	தொழுநோய் அகலும்
16.	ஆடி	சுக்கில	சயநீ	ஆணவம் அழியும்
17.	ஆவணி	கிருஷ்ண	காமிகா	துளசியால் அர்ச்சித்த பலன்
18.	ஆவணி	சுக்கில	புத்ரதா	புத்ரபாக்கியம் கிட்டும்
19.	புரட்டாசி	கிருஷ்ண	அஜா	ராஜயோகம் கிட்டும்
20.	புரட்டாசி	சுக்கில	பத்மநாபா	உலகு நலம் பெறும்.
21.	ஐப்பசி	கிருஷ்ண	இந்திரா	சாளக்கிராமம் அருகில் பிதுர்க்கடன் செய்த பயன்
22.	ஐப்பசி	சுக்கில	பாபாங்குசா	சாஸ்திர முறை அறியாரும் பயன்பெறுவர்
23.	கார்த்திகை	கிருஷ்ண	ரமா	சாஸ்வத இன்பம் கிட்டும்.
24.	கார்த்திகை	சுக்கில	பிரபோதினி	விஷ்ணு லோகத்தில் வசிக்கும் பேறு
25.	கூடுதலாக	கமலா	கமலா	அபரிமிதமான செல்வம் வரும்



ஸ்ரீ வைஷ்ணவ மந்திரங்கள்

ரகசிய மந்திரங்கள் - மூன்று

1. திருமந்திரம்

தன்னைப் பற்றிய ஞானம், வாழ்வில் கைவிட வேண்டிய வற்றையும் கைக்கொள்ள வேண்டியவற்றையும் பற்றி அறிவிப்பது மூன்று பதங்கள். எட்டு எழுத்துக்கள். எட்டு இழையாய் மூன்று சரமாய்த் திகழும் மங்கல சூத்திரம் இதுவாகும்.

'ஓம் நமோ நாராயணாய'

இதன் பொருள் ஜீவாத்மா எம்பெருமானுக்கே அடிமைப் பட்டவன் என்பதும் எம்பெருமானையே உபாய மார்க்கமாக உடையவன் என்பதும் எம்பெருமானையே அனுபவிக்கத் தகுந்த பொருளாய்க் கொள்ள உரியவன் என்பதுமாகும்

ஓம்- (சேஷத்துவம்) பகலானுக்கு அடிமையாகும் திறம் } ஸ்வரூபம்
நம -(பாரதந்திரியம்) பகவானுக்கு வசப்பட்டிருத்தல்

நாராயணாய (கைங்கர்யம்)

இம்மந்திரம் எம்பெருமான் தாமே ஆசாரியனாகவும், சிஷ்யனாகவும் இருந்து பதரிகாசிரமத்தில் அருளிச்செய்ததாகும்.

2. த்துவயம்

ஆன்மா இறைவனை அடையும் வழி பற்றி விளம்புகிறது.

'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே

ஸ்ரீமதே நாராயணாய நம:'

எம்பெருமான் தம் தொடைமீது பிராட்டியாரை இருத்தி பரமபதத்தில் வெளியிட்டருளியது.

3. சரமேஸ்லோகம்

''சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம்

சரணம் வ்ரஜ்''

"அகம் த்வாசர்யபரபேப்ய மோக்ஷயிஷயாமி மாசுச"

இது குருக்ஷேத்திரத்தில் பாரத யுத்தத்தின் போது பார்த்த சாரதியாக ஸ்ரீகிருஷ்ணர் அமர்ந்து அர்ஜுனர்க்கு உபதேசித்ததாகும்.

மூன்று ரகசிய மந்திரங்களின் ஒன்பது அர்த்தங்கள்

உத்தி திகழு முறைமூன்றின் மும்
சித்த முணரத் தெளிவித்தார்-முத்திதரு
மூல மறையின் முடிசேர் முகில்வண்ணன்
சீல மறிவார் சிலர்.

- அமிருதரஞ்சனி - பா.7

திருமந்திரத்தின் அர்த்தங்கள்

1. எம்பெருமானிடம் நம் ஸ்வரூபத்தைச் சமர்ப்பித்தல்
2. நம்மை ரக்ஷிக்கவேண்டிய கடமையைச் சமர்ப்பித்தல்.
3. ரக்ஷித்தலின் பலனைச் சமர்ப்பித்தல்.

த்வயத்தின் அர்த்தங்கள்

4. உபாயம்.
5. பலன்.
6. விரோதி ஒழிகை

சரமசுலோகத்தின் அர்த்தங்கள்

7. சரணமடைபவன் செய்யுங்கார்யம்
8. சரணமடைந்தவனுக்கு எம்பெருமான் செய்யுங் கார்யம்
9. சரணமடைந்தபின் சேதநன் இருக்கவேண்டிய முறைமை.

*****

விஷ்ணு புராணம் கூறும் விஷ்ணு மந்திரங்கள் மூன்று

1. அவிகாராய சுத்தாய நித்யாய பரமாத்மநே
   ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே
2. நமோ ப்ரம்மண்யதேவாய கோ-ப்ராம்மண ஹிதாய ச
   ஜகத்ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:
3. ஓம் நமோ வாஸுதேவாய நம: ஸங்கர்ஷணாய ச
   ப்ரத்யும்நாய நமஸ்துப்யம், அநிருத்தாய தே நம:

வைணவ மங்கள மந்திரங்கள்

ஸ்ரீ ரங்கநாதர் (ஸ்ரீரங்கம்)

லக்ஷ்மி சரணா'லாக்ஷாங்கஸாக்ஷீ ஸ்ரீவத்ஸவக்ஷஸே
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீராங்கேஸாய மங்களம்.

ஸ்ரீ ஸ்ரீநிவாசர் (திருமலை)

ஸ்ரியகாந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்

ஸ்ரீ தேவராஜர் (காஞ்சிபுரம்)

அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரிவாஸனா வாஸதோரஸே
ஸ்ரீஅத்திகிரி நாதாய தேவராஜாய மங்களம்

ஸ்ரீ சம்பத்குமாரர் (திருநாராயணபுரம்)

கமலாகுச கஸ்தூரி கர்த்தமாங்கித வக்ஷஸே
யாதவாத்ரி நிவாஸாய ஸம்பத்புத்ராய மங்களம்

ஸ்ரீ தோத்தாத்ரி (வானமாமலை)

ஸ்ரீபூமி கோதாதேவிபி ஸாஹம் ஸ்ரீவரமங்கைய
திவ்யஸிம்மாஸனஸ்தாய தேவநாதாய மங்களம்

பூரி ஜகந்நாதர்

நீலாசல நிவாஸாய நித்யாய பரமாத்மநே
ஸுபத்ரா ப்ராணநாதாய ஜகந்நாதாய மங்களம்

ஸ்ரீராமர் (திருஅயோத்தி)

மங்களம் கோஸலேந்த்ராய மஹநீய குணாப்தயே
சக்ரவர்த்தி தநூஜாய ஸார்வபௌமாய மங்களம்

ஸ்ரீ ஆண்டாள் (வில்லிபுத்தூர்)

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய மநோநந்தன ஹேதவே
நந்தநந்தநஸுந்தர்யை கோதாயை நித்ய மங்களம்

நம்மாழ்வார் (ஆழ்வார்திருநகரி)

ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்ரபர்ணயுத்தரேதடே
ஸ்ரீதிந்த்ருணீ முலதாம்நே சடகோபாய மங்களம்.

திருமங்கை ஆழ்வார் (திருக்குறையலூர்)

ஸ்ரீமதாலி ஸ்ரீநகரீநாதாய கலிவைரிணே
சதுஷ்கவிப்ரதானாய பரகாலாய மங்களம்

உடையவர் (ஸ்ரீபெரும்புதூர்)

ஸ்ரீமந்மஹாபூதபுரே ஸ்ரீமத்கேஸவயஜ்வந் காந்திமத்யா
ப்ரஸுதாய யதிராஜாய மங்களம்

மணவாள மாமுனிகள்

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்ய மங்களம்

ஆசார்யர்கள்

மங்களாசாஸநபரை மதாசார்யவபரோகமை
ஸர்வைச்சபூரவைவராசார்யை ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

காயத்ரி பொதுமந்திரம்

ஓம், பூர், புவ, ஸுவஹ, தத், சவிதுர், வரேண்யம், பர்கோ,
தேவஸ்ய, தீமஹீ, தியோ யோன, ப்ரசோதயாத்

ஸ்ரீ மஹாவிஷ்ணு

ஓம் நாராயணா, வித் மஹே, வாசுதேவாய, தீமஹி,
தன்னோ, விஷ்ணு ப்ரசோதயாத்

ஸ்ரீ மகாலெட்சுமி

ஓம், மகாதேவ்யை, ச, வித்மஹே, விஷ்ணு, பதனியை, ச,
தீமஹி, தன்னோ, லெஷ்மி ப்ரசோதயாத்

ஸ்ரீ ஸ்ரீனிவாசன்

ஓம் நிரஞ்சனாய வித்மஹே, நிராபாசாய, தீமஹி
தன்னோ, ஸ்ரீனிவாச ப்ரசோதயாத்

ஸ்ரீ கருடன்

ஓம் ஆகாச, நதி, தடாக, சஞ்சாராயவித்மஹே, கம்பீர
வல்லப, பிரதக்ஷிண, தர்சனாய, தீமஹி, தன்னோ, கருட,
ப்ரசோதயாத்

ஸ்ரீ ஆஞ்சநேயர்

ஓம் அஞ்சனா தேவி, புத்ராய, வித்மஹே ராமதூதாய
தீமஹி தன்னோ ஆஞ்சநேய பிரசோதயாத்

வைணவத் தொடர்புடைய பழமொழிகள்

ஹரியும் சிவனும் ஒன்று இதை அறியாதவர் வாயில் மண்ணு.

ஆண்டியை அடித்துத் தாதனுக்குப் போட்ட கதைபோல.

கூரை ஏறிக் கோழிப்பிடிக்க முடியாதவன், வானத்தைக் கீறி வைகுந்தம் காட்டினானாம்.

எங்கு சுற்றியும் ரங்கனைச் சேவிக்க வேண்டும்.

கோடி, கோடி ஆனாலும் கோட்டியூர் ஆகாது.

படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்.

அரியென்றால் ஆண்டிக்கு ஆகாது. அரன் என்றால் தாதனுக்கு ஆகாது.

அழகர் கோயில் மாடு தலையை ஆட்டியதைப் போல.

அழகால் கெட்டாள் சீதை. வாயால் கெட்டாள் திரௌபதி.

காஞ்சிபுரம் குடை அழகு, ஸ்ரீரங்கம் நடை அழகு.

கிழிந்தது கிருஷ்ணன் வேட்டி, தைத்தது தாதன் வேட்டி.

திருப்பதியில் மொட்டைத் தாதனைத் தேடியது போல.

ஸ்ரீரங்கம் குழந்தைக்குத் திருவாய்மொழி கற்றுத்தர வேண்டுமா!

சிவன் அபிஷேகப்பிரியர், திருமால் அலங்காரப்பிரியர்.

அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடுவேனோ!

கோட்டியூர் போகான் குரங்காய்ப் போவான்

திருவணை கண்டால் அருவிணை மாயும்

மண்ணின் சொர்க்கம் மான்னார்குடி

ஸ்ரீதேவி முன்னர் மூதேவி பிறந்தாற் போல

சீதை பிறந்தது இலங்கை அழிய

ஸ்ரீரங்கத்தில் சிவதர்மம்

வீட்டுல ராமன் வெளியிலே கிருஷ்ணன்

திருமாலுக்கு மிஞ்சிய தெய்வமில்லை, திருப்பதிக்கு மிஞ்சிய மலையும் இல்லை.

திருப்பதி சென்றால் திருப்பம் கூடும்.

வைணவத் திருமடங்கள்

1. வானமாமலை மடம் (நாங்குனேரி)

இத்திருமடத்தின் முதல் பீடாதிபதி ஸ்ரீமணவாள மாமுனியின் சிஷ்யரான ஸ்ரீ ராமானுஜ ஜீயர் அவர்கள் ஆவார். இம்மடத்தில் தற்பொழுது 27வது பட்டம் ஸ்ரீசின்னராமானுஜ ஜீயர் அருள் ஆட்சி செய்து வருகின்றார்.

2. அகோபில மடம்

இம்மடத்தின் முதல் ஆச்சாரியர் ஸ்ரீசடகோபயதீந்திரர் ஆவார். இம்மடத்தின் ஆறாவது பட்டம் பராங்குசயதீந்திர மகாதேசிக சுவாமிகள். இவர் காலத்தில் தான் அகோபிலமடத் தலைமை ஸ்தானம் திருவள்ளூருக்கு மாறியது. 44வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீநிகமாந்த மகாதேசிக சம்பிரதாயத்தையொட்டிப் பணிபுரிந்து வருவது அகோபிலமடம்.

3. பரகால மடம்

ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் காலம் முதல் சரணாகதித் தத்துவத்தில் புனிதத் தொண்டாற்றி வரும் வடகலை ஸ்ரீவைஷ்ணவ மடங்களில் பரகால மடமும் ஒன்று. இம்மடத்தின் 21 வது பீடாதிபதி ஸ்ரீபெரிய பரகால சுவாமி காலத்தில் தமிழகத்திலிருந்து, மடாலயத் தலைமை ஸ்தானம் மைசூருக்கு மாறியது.

4. ஆண்டவன் சுவாமிகள் மடம்

ஸ்ரீவேதாந்த தேசிகருடைய சிஷ்யர்களில் முனித்திரய சம்பிரதாயத்தைப் (மூன்று முனிவர்கள்) பின்பற்றுபவர்கள் ஆச்சாரியராக இன்று ஸ்ரீ ஆண்டவன் சுவாமிகள் விளங்குகிறார். இவருடைய ஆசிரமம் ஸ்ரீரங்கத்தில் உள்ளது.

*****

காஞ்சியில் உள்ள வைஷ்ணவத் திருமடங்கள்

1. ஸ்ரீ நாராயண சேவாசிரமம், (ஆழ்வார் பங்களா - பெரிய காஞ்சிபுரம்)
2. இராமானுஜ மடம், சின்ன காஞ்சிபுரம்.
3. ஸ்ரீ வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் மடம் - சின்ன காஞ்சிபுரம்.
4. வானமமாமலை ஜீயர் மடம், சின்ன காஞ்சிபுரம்.
6. அஹோபில மடம், சின்ன காஞ்சிபுரம்.
7. முதலியாண்டான் திருமாளிகை, சின்ன காஞ்சிபுரம்.
8. பரகால மடம், சின்ன காஞ்சிபுரம்.
9. பிரதிவாதி பயங்கரம் அண்ணா மடம், சின்ன காஞ்சிபுரம்.
10. நம்பிள்ளை மடம், சின்ன காஞ்சிபுரம்.

*****

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன்

ஏற்றினை, இமயத்துள் எம் ஈசனை
இம்மையை, மறுமைக்கும் மருந்தினை,
ஆற்றலை, அண்டத்து அப்புறத்து உய்த்திடும்
ஐயனை, கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை, குரு மா மணிக் குன்றினை,
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை,
காற்றினை, புனலை - சென்று நாடி -
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே

வதரி வணங்குதுமே

முற்ற மூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கிவளைந்து
இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங் கிளையாமுன்,
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடு, உயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங்குதுமே.

- திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி

*****



விஷ்ணுவின் சிறப்புச் சிற்ப வடிவங்கள்

சென்னை மயிலாப்பூர் ரெங்கசாலையில் அமைந்துள்ள கிருஷ்ணர் கோவிலில் உள்ள கிருஷ்ண விக்ரகம் தங்கத்தை உரைத்துப்பார்க்கும் ''டச் ஸ்டோன்'' எனப்பெறும் உரைகல்லால் முழுமையாகச்செய்யப்பெற்றதாகும்.

காஞ்சி வரதராசர் கோவிலில் ஆனந்த புஷ்கரணி தீர்த்தத்தில் இருந்து நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை எழுந்தருளுவித்துச் சேவிக்கப்பெறும் அத்திவரதர் வடிவம் முழுமையும் அத்தி மரத்தினால் செய்யப்பெற்ற சிறப்பினை உடையதாகும்.

பூரி என்னும் வடநாட்டுத் திருத்தலத்தில் அமையப்பெற்றுள்ள பூரிஜெகந்நாதர் மரவடிவில் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை நெல்லூர் நெடுஞ்சாலையில் சோழவரத்தை அடுத்துள்ள எருமைவெட்டிப்பாளையத்தில் ஒரே சாளக்கிரமக் கல்லினால் அமைக்கப்பெற்றுள்ள சீதாராமர் வடிவம் கண்டு சேவிக்கத்தக்கதாகும்.

சென்னை பெரியபாளையம் சாலையில் உள்ள வடமதுரையில் கருப்பு வெண்கலத்தினால் உருவாக்கப்பட்ட இராம-இலக்குவனத் திருமேனிகள் அமையப்பெற்றுள்ளன.

பெரும்பாலான வைஷ்ணவக் கோவில்களில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தந்தருளும் ஸ்ரீ ஆண்டாள் மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோவிலில் அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தந்தருளுகின்றார்.

இராமாயணத்தில் கோசலை - ஆஞ்சனேயர் - மண்டோதரி ஆகிய மூவருக்கும் சதுர்புஜ இராமராக இராமபிரான் காட்சி தந்தாகக் கூறப்படுகிறது. நான்கு கரங்களுடன் கூடிய சதுர்புஜ இராமரைக் காஞ்சி புரம் மாவட்டம் பொன்பதிர் கூடம் என்னும் திருத்தலத்தில் சேவித்து மகிழலாம்.

திருக்கண்ணப்புரம் திவ்யதேசத்தில் பதினான்கு அடி உயர முள்ள நெடுமாலாகப் பெருமாள் காட்சி தந்தளுகின்றார்.

இராஜமன்னார்குடி எனப்பெறும் மன்னை இராஜகோபால சாமி கோவிலில் சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றைத் தாங்கிய சதுர் புஜ வாசுதேவர் சன்னதி சிறப்பாக அமையப்பெற்றுள்ளது.

காஞ்சியில் பாண்டவர் தூதப் பெருமான் திருவடிவமும் திருவரங்கம் ஸ்ரீஅரங்கநாதர் திருவடிவமும் சுதை வடிவச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமயம் திவ்யதேசப் பெருமான் திருமயம் குன்றிப் புடைப்புச் சிற்பமாகத் திவ்ய காட்சி தந்தருளுகின்றார்.

பெரம்பலூர் மதனகோபாலசாமி கோவிலில் பஞ்சபாண்டவர் களுடன் கிருஷ்ண வடிவம் அமையப்பெற்றுள்ளது. அவற்றுள் கிருஷ்ணரும், தருமரும் அமர்ந்த நிலையில் காட்சி தந்தருளுகின்றனர்.

மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ள சிறுபுலியூர் திவ்ய தேசத்தில் பரந்தாமன் சிறுகுழந்தை வடிவில் பள்ளி கொண்டருளும் பாலசயனத் திருக்கோலத்தினைச் சேவித்து மகிழலாம்.

திருவரங்கத்திற்கு அருகிலும் மன்னார்கோவிலிலும் உள்ள கோவில்களில் தசாவதரச் சிற்பங்களை ஒருங்கே சேவிக்கலம். அது போல அரியலூர் நரசிம்மப் பெருமாள் கோவிலில் தசாவதர மண்டபத்தில் பத்து அவதாரச் சிற்பங்களும் சிறப்புற அமைந்துள்ளன.

விஷ்ணு தருமோத்திரம் கருடன் மீது நான்கு திருமுகங்கள், எட்டுத் திருங்கரங்களுடன் தோன்றும் திருமால் வடிவினைக் குறிப் பிட்டுள்ளது. நான்கு திருமுகங்களுள் கிழக்கு முகம் சாந்த வடிவாகவும், தெற்கு முகம் நரசிம்ம வடிவாகவும், மேற்கு முகம் கபில வடிவாகவும், வடக்கு முகம் வராக முகமாகவும் சுட்டப்பெற்றுள்ளது.

*****

நவ நரசிம்ம ஸ்தலங்கள்

1. அகோபிலம்	-	காரங்கி நரசிம்மர்
2. அகோபிலம்	-	பார்க்கவ நரசிம்மர்
3. அகோபிலம்	-	இலட்சுமி நரசிம்மர்
4. கீழ் அகோபிலம்	-	பிரகலாத நரசிம்மர்
5. சோளிங்கர், சிந்தலபூடி	-	யோக நரசிம்மர்
6. நாமக்கல்	-	சந்திராந்த நரசிம்மர்
7. திருவரங்கம்	-	உக்கிரநரசிம்மர்
8. சிம்மாசலம்	-	வாரக நரசிம்மர்
9. சிங்கவேள் குன்றம்	-	பர்முலிதி நரசிம்மர்



வைஷ்ணவக் கோயில் திருவிழாக்கள்

வைஷ்ணவக் கோயில்களில் திங்கள் தோறும் கொண்டாடப்பெற்று வரும் விழாக்களில் பல குறிப்பிடத்தக்க சிறப்பினை உடையது ஆகும்.

- சித்திரை மாதப் பிறப்பு நாள் அன்றும் சித்ரா பௌர்ணமி அன்றும் சிறப்பு விழாக்கள் பல திவ்யத் தேசங்களில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன.
- வைகாசித் திங்களில் பெரும்பாலான வைஷ்ணவ ஆலயங்களில் பிரமோற்சவ விழா பத்து நாட்கள் நடத்தப்பெற்று வருகின்றன. இத்திங்களில் நடைபெறும் கருட சேவை உற்சவம் பக்தர்களால் சேவிக்கப்பெறும் சிறப்புத் திருவிழா ஆகும். ஆழ்வார் திருநகரி, காஞ்சி, திருநாங்கூர், திருநறையூர் ஆகிய திவ்யதேசங்களில் நடைபெறும் கருடசேவை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.
- ஆனித் திங்களில் நடத்தப்பெறும் திருவிழா கோடை உற்சவம் எனப்பெறும்.
- ஆடித் திங்களில் சூடிக்கொடுத்த நாச்சியாரான ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த பூர நன்னாளில் நடத்தப்பெறும் விழா ஆடிப்பூர உற்சவத் திருவிழா ஆகும். இவ்விழா ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டப்பெற்று வருகிறது.
- ஆவணித் திங்களில் நடத்தப்பெறும் திருவிழா பவித்ரோத்சவம் எனப்பெறுகிறது. இவ்விழாவினைத் தொடர்ந்து நடைபெறும் உரியடித் திருவிழா சிறப்பு மிக்கதாகும்.
- புரட்டாசித் திங்களில் திருமால் கோவில்களில் நடத்தப்பெற்று வருவது நவராத்திரித் திருவிழா ஆகும்.
- ஐப்பசித் திங்களில் திருவரங்கம் காவிரி நதியில் நடத்தப்பெற்று வரும் துலாஸ்நானம் நீராடி களிக்கத்தக்கதாகும்.
- கார்த்திகைத் திங்களில் கார்த்திகை தீப திருவிழாவினை த் தொடர்ந்து மார்கழி மாதம் நடைபெறும் உற்சவம் அத்யயன உற்சவம் ஆகும். இத்திங்களில் இடம்பெறும் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு இராப்பத்து, பகல்பத்து எனப்பெறும் அரையர் சேவை ஆகியவை குறிப்பிடத்தக்க விழா நிகழ்வுகள் ஆகும்.
- தைத் திங்களில் காரமடை ரெங்கநாதர் ஆலயத்தில் நடத்தப்பெறும் பரிவேட்டை உற்சவம் குறிப்பிடத்தக்கதாகும்.

- மாசி மாதம் தர்மபுரி மாவட்டம் ஊத்தக்கரைக்கு அருகில் உள்ள சாலமரத்துப் பட்டியில் அமைந்துள்ள மலைமீதுள்ள பெருமாள் கோவிலில் சிவன் ராத்திரி அன்று நடத்தப்பெறும் தேர்விழா சிறப்பு மிக்கதாகும்.

- பங்குனி உத்திரத் திருவிழா வைஷ்ணவர்கள் பலரும் கொண்டாடும் பெரு விழா ஆகும். பங்குனி உத்திரநாளில் இராமன் - சீதை, இலக்குவன் - ஊர்மிளை, பரதன் - மாண்டவி, சத்ருக்கன் - சுருதகீர்த்தி ஆகியோர் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. பாண்டவர்களுள் ஒருவரான வில்விஜயன் பிறந்த நாளும் பங்குனி உத்திர நாளே ஆகும். இந்நாளில் ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் பிரணய கல உற்சவம் எனப்பெறும் ஊடல் விழாவும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மட்டையடித் திருவிழாவும் கண்டு தரிசிக்கத்தக்கதாகும். இத்திங்களில் திருக்கோவிலூர் திவ்யதேசத்தில் நடத்தப்பெற்று வரும் திருமங்கை மன்னன் வேடுபறி உற்சவம் வரலாற்றுச் சிறப்புடையது ஆகும்.

இவை தவிரக் காஞ்சி வரதாஜப்பெருமாள் கோவிலில் நிகழ்த்தப்பெறும் தெட்டாச்சாரியார் சேவையும் மலைவையாவூர் வெங்கடாசலபதி கோவில் கூவத்தூர் ஆதிகேசவப்பெருமாள் கோவில் ஆகியவற்றில் நிகழ்த்தப்பெறும் திருவோண தீபத் திருவிழாவும் சிறப்பிடம் பெற்றவை ஆகும்.

மேலும் ஸ்ரீ ஜெயந்தி, ஸ்ரீராமநவமி, அனுமத் ஜெயந்தி நாட்களிலும் சிறப்பு விழாக்கள் நடத்தப்பெறுவது உண்டு.

*****

துவாதச நரசிம்ம மூர்த்திகளும் ஸ்தலங்களும்

1. சோளிங்கர்	யோகநரசிம்மர்
2. திருவல்லிக்கேணி	கெள்ளியநரசிம்மர்
3. திருநீர்மலை	சாந்தநரசிம்மர்
4. சிங்கப்பெருமாள்கோவில்	படலாத்ரீநரசிம்மர்
5. யானை மலைக்குகைக்கோயில்	ஸ்தாரகநரசிம்மர்
6. மங்களகிரி	பானக நரசிம்மர்
7. திருவரங்கம்	இரணியசம்மார உக்கிரநரசிம்மர்
8. மங்களகிரி	ஸ்ரீதேவி பூதேவி சமேத நரசிம்மர்
9. அகோபிலம்	லட்சுமி நரசிம்மர்
10. சிந்திலபூடி	யோக நரசிம்மர்
11. தாடிக் கொம்பு	சுதர்சன நரசிம்மர்
12. சீம் அகோபிலம்	பிரசலாதவரதசிம்மர்

சம்பிரதாயப் பெயர்கள்

அனுமன்	-	சிறிய திருவடி
ஆதிசேஷன்	-	அனந்தாழ்வான்
இலக்குவன்	-	இளயபெருமாள்
ஆழ்வான்	-	கூரத்தாழ்வான்
ஆச்சான்	-	கிடாம்பிஆச்சான்
அப்பன்	-	குருகைக் காவலப்பன்
ஆச்சான்பிள்ளை	-	பெரியவாச்சான் பிள்ளை
ஆண்டான்	-	முதலியாண்டான்
கருடன்	-	பெரிய திருவடி
சுக்ரீவன்	-	மஹாராசர்
ஜடாயு	-	பெரிய உடையார்
திருமலை	-	திருமலை ஆழ்வார்
ஆழ்வார் திருகரி		
உள்ள புளியமரம்	-	திருப்புளியாழ்வார்
ராமன்	-	பெருமாள்
திருஅரங்கநாதன்	-	பெரியபெருமாள்
ஆளவந்தார்	-	பெரிய முதலியார்
திருவரங்கம்	-	கோயில்
காஞ்சி (திருவெஃகா)	-	பெருமாள்கோயில்
திருவேங்கடம்	-	திருமலை
ராமானுஜர்	-	இளையாழ்வார், எம்பெருமானார், உடையவர்
கோவிந்தபட்டர்	-	எம்பார்
பட்டர்	-	பராசரப் பட்டர்

*****

ஸ்ரீ வைஷ்ணவானுஷ்டானச் சொற்கள்

1. பிரபத்தி	-	சரணாகதி
2. பரசமர்ப்பணம், பரன்யாசம்	-	மோட்சம் வேண்டி ஆச்சார்யன் மூலமாக பகவானைச் சரணடைதல்.
3. ஸமாச்ரயணம், பஞ்ச ஸம்ஸ்காரம்	-	ஆச்சார்யனை அணுகிப் பெறும் ஐந்து வகைச் சடங்குகள்
4. ஸ்ரீபாத தீர்த்தம்	-	திருநட்சத்திரம்/சிரார்த்த நாட்களில் ஆச்சார்யன் பாதுகை அல்லது கட்டைவிரல் அலம்பிய தீர்த்தம்.
5. பஞ்ச கவ்யம்	-	பசுவின் பால், தயிர், நெய், சாணம், கோமயம் இவற்றைப் பலநேரங்களில் உடல் தூய்மைக்காக வைணவர்கள் உட்கொள்வர்.



திருமாலைக் குறித்துள்ள புலவர்கள்

சற்றேறக்குறைய கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னதாக வாழ்ந்ததாகக் கருதப்பெறும் தமிழ்ப் புலவர்கள் பலருள் திருமாலைக் குறித்துள்ள சில புலவர்கள் பெயர் வருமாறு.

ஆலம்பேரிச்சாத்தனார்

அகநானூற்றுப் பாலைப் பாடல் எண் 175 இல்

'நேர் கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போர் அடங்கு அகலம் பொருந்திய தார்போல்'

என்று சக்கரத்தானுடைய திருமாலையும் தார்மாலையினையும் குறித்துள்ளார்.

இளம்பெருவழுதியார்

பரிபாடலில் 15 ஆம் பாடலை இயற்றிய திருமாலடியார்

''காரிருள் மயங்குமணி மேனியன் 15/5 என்பது இவருடைய திருமால் உருவ உவமைத்தொடர்.

இளங்கோவடிகள்

நெஞ்சயள்ளும் சிலப்பதிகார நூலாசிரியர். இவர் சமண சமயஞ் சார்ந்தவர் என்று கூறப்பெறினும் இந்நூலின் 'ஆய்ச்சியர் குரவைப்' பகுதி திருமால் திறங்கூறும் பக்திப் பாசுரமாகவே திகழ்கின்றது எனலாம்.

'நீலமேனி நெடியோன் 5-71

'அவன் துணை மலர்த் தாளிணை
ஒன்று துயர் கெடுக்கும்' 11-137

'இரண்டடியால் இருள்தீர
மூவுலகும் நடந்தனையே' 17-34

என்பன சிலம்புத் தொடர்கள்.

இன்னிலை ஆசிரியர்

திருமாலின் திருவடி நீழலைச் சேர்தற்குரிய அறவினையைப் புரிவதே மாந்தர் கடமை என்று வற்புறுத்துகின்றவிடத்து திருமாலை ''மால்'' என்று குறிப்பிடுகின்றார்.

ஊன்பொதிபசுங்குடையார்

இவர் புறநானூற்றுப் பாடல் 378 - இல் இராமாணயக் குறிப்புகளைத் தந்துள்ளார்.

கபிலர்

குறிஞ்சிக்கலியைப் பாடிய புலவர். 'மல்லரை மறஞ்சாய்த்த மால்போல்' என்பது இவர் தரும் உவமை. 'மாயோன் விழுப்புகழ் என்பது திருமாலைக் குறித்து கபிலர் தொடராகும்.

கபிலர்

நூலாசிரியர் ''சக்கரத்தானை மறப்பின்னை'' என்பது இவருடைய இன்னாநாற்பதில் ஒரு அருங்கருத்து.

கடியலூர் உருத்திராக்கண்ணனார்

பத்துப்பாட்டில் பெரும் பாணாற்றுப்படையினைப் பாடிய புலவர்,

'இருநிலங் கடந்த திருமறுமார்பின்
முந்நீர் வண்ணன் (29-30)

'நீணிற உருவின் நெடியோன்' என்பன போன்ற தொடர்களின் வாயிலாகத் திருமால் குறிப்பிடப்பெற்றுள்ளார்.

கடுவன் இளவெயினனார்

பரிபாடலில் மூன்று, நான்கு எண்களையுடைய பாடல்களின் வழித் திருமாலைப் போற்றியவர்.

'மணிதிகழ் உருவினன் மாஅயோயே' 3/4

'திருமேணி திரைபாடு அவிந்த முந்நீர்'

'வருமழை இருஞ்சூழல் மூன்றும் புரையுமாமெய்' 4/67

கண்ணன் கூத்தனார்

இவர் காற்பது நூலாசிரியர் 'பொருகடல் வண்ணன்' என்று கடவுள் வாழ்த்துப் பாடலில் இவர் திருமாலைக் குறித்துள்ளார்.

கணிமேதாவியார்

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் திணைமாலை நூற்றைம்பதினை இயற்றியவர்.

'இருள்பரந்து ஆழியான் தன்னிறம் போல (96)

என்பது திருமாலைக் குறித்த இவர் தொடர்

காரிக் கண்ணனார்

காவிரிப்பூம்பட்டிணம் புறநானூற்றில் 58 ஆம் பாடலாசிரியர்.

'நீணிற உருவின் நெடியோன்' என்பது இவர் பாடற்றொடர்.

காப்பியாற்றுக் காப்பியனார்

பதிற்றுப்பத்து நான்காம் பத்து ஆசிரியர் இப்பத்தில்.

' வண்டு ஊது பொலிதார் திருநெமர் அகலத்து
கண்பொடு திகிரி கமழ்குரற்துழாஅய் அலங்கல்
செய்தவன் சேவடி' யினைப் பரவிப் போற்றியுள்ளார்.

கீரந்தையார்

பரிபாடலில் இரண்டாவது பாடலைப் பாடித் திருமாலைப் போற்றியவர்.

'நின்னது திகழொளி சிறப்பிருள் திருமலை 2/52 என்பது திருமாலின் வண்ணம் குறித்த இவர்தொடர்.

குமட்டூர் கண்ணனார்

பதிற்றுப்பத்தில் திருமாலை 'நெடியோன் அன்ன' என்னும் உவமை வாயிலாகக் குறித்துள்ள புலவர்.

கூடலூர்கிழார்

புறநானூற்றுப் பாடல் எண் 229-இல் ''மணிவரை யன்ன மா அயோனே'' என்பது இவர் வரைந்துள்ள திருமாலியத் தொடர்.

சீத்தலைச் சாத்தனார்

இவர் மணிமேகலை நூலாசிரியர். சமயக்கணக்கர் திறங் கேட்ட காதையில் வைணவ சமயத் தத்துவத்தைக் கூறும் இவர் 'மாமணி வண்ணனாகத்' (18-65) திருமாலைச் சுட்டுகின்றார்.

தொல்காப்பியர்

இவர் தொல்காப்பிய நூல் ஆசிரியர். நால்வகை நிலங்களுள் முல்லை நிலக் கடவுளாகத் திருமாலை இவர் குறித்துள்ளார்.

'மாயோன் மேய காடுறை உலகமும்' (அகத்5)
'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் (புறத்5)

பாரதம் பாடிய பெருந்தேவனார்

நற்றிணை என்னும் எட்டுத்தொகை நூலில் கடவுள் வாழ்த்துப் பாடலைத் திருமால் வாழ்த்துப் பாடலாகப் பாடியவர்.

'மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரால் பௌவம் உடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசைகையாக
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக
இயன்ற எல்லாம் பயின்றத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே''

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பாலைக் கலியைப் பாடிய இப்புலவர் ''செய்யவன் அணி அகலம்' என்று திருமால் மார்பினைக் குறித்துப் புகழ்ந்துள்ளார்.

பூதஞ்சேந்தனார்

இனியவை நாற்பது, நூலை இயற்றிய புலவர். தொல்மாண் துழாய் மாலையானைத் தொழல் இனிது' என்பது இவர் காட்டும் நன்னெறி.

மருதனிள நாகனார்

அகநானூற்றுப் புலவர். 59வது பாடலில் 'மரம் செல மிதித்த மா அல் போல' என்னும் தொடரால் திருமாலைக் குறித்துள்ளார்.

மதுரைக் கண்ணத்தனார்

அகநானூறு பாடல் எண் 360இல்

''வெருஉரு கடந்திறல் இருபெருந் தெய்வத்து உருவுடன்

இயைந்த தோற்றம் போல்'' என்று இருபெருந் தெய்வங்கள் ஒரு பெருந்தெய்வமாகத் திருமாலைக் குறித்துள்ளார்.

மதுரைத் தமிழ்க் கூத்தனார் (கடுவன் மல்லனார்)

அகநானூற்றுபாடல் 70இல் இராமாவதாரம் பற்றிய செய்தியினைத் தந்துள்ளார்.

மாங்குடி மருதனார்

பத்துப் பாட்டில் மதுரைக்காஞ்சி நூலாசிரியர்.

'கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் (590-91)

என்னும் இப்பாடல் தொடர்கள் மாயோனையும், திருவோண நாளையும் குறித்துள்ளன.

மாறோக்கத்து நப்பசலையார்

புறநானூற்றில் 174 ஆம் பாடலை இயற்றியவர். 'அஞ்சன உருவன்' என்பது திருமாலைப் பற்றி இவர் தரும் குறிப்பு.

மாறன்பொறையனார்

இவர் ஐந்திணை ஐம்பது நூலை இயற்றியவர். இவர் முல்லையை முதலில் பாடுகின்றார். இது மாயோன் மேய காட்டில் நிகழ்வதால் 'மல்லர்க் கடந்தான் நிறம்' என அந்நிலத்துக் கருப் பொருள்களுள் முதன்மையான தெய்வத்தை முன்னர் வைத்துப் போற்றுகின்றார். கறுத்து விசும்பின் கண்தோன்றும் மேகத்திற்கு உவமையாகக் கஞ்சனாற் செலுத்தப்பட்ட மற்போர் வீரர்களை வென்ற மாயவனின் நிறத்தைக் கிருட்டிணாவதாரத்து ஆற்றலும் மறமும் தோன்ற உவமித்துப் போற்றுகின்றார்.

முத்தொள்ளாயிர நூலாசிரியர்

திவ்யப்பிரபந்த காலத்திற்கு முற்பட்ட நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

''இருள் பரந்து ஆழியான் தன்னிறம்போல (106)
'ஆழியுடையான் மாயன்'

என்பன மாலைக் குறித்த இவ்விலக்கியத் தொடர்கள் ஆகும்.

முரஞ்சியூர் முடிநாகராயர்

பாரத நிகழ்ச்சிகளைப் புறநானூற்றுப் பாடல் எண் இரண்டில் குறித்துள்ளவர்.

'அலங்குகளைப் புரவி ஐவரோடு சின்ன
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்'

மூன்றுறையரையனார்

பழமொழி நானூறு நூலாசிரியர்.

'ஆழியான் ஆயினும் செங்கோலன் அல்லாக்கால்
சேர்ந்தாரும் எள்ளுவர்' (250) என்பது

இவ்விலக்கியத் திருமால் தொடராகும்.

நக்கீரனார்: (மதுரைக் கணக்காயனார் மகனார்)

புறநானூற்றில் 56 ஆம் பாடலில் 'மண்ணுறு திருமணி புரையுமேனி' என்னும் தொடர் வாயிலாகத் திருமால் மேனியழகைப் புகழ்ந்துரைத்துள்ளார். இவர் இயற்றிய திருமுருகாற்றுப்படையிலும் திருமால் பற்றிய சிலதொடர்கள் காணப்படுகின்றன.

நப்பூதனார்

பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டுப் பாடலாசிரியர்.

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மா அல்போல் ஏழிலி'

என்பன மேகத்தை ஒத்த மால்வடிவின் பெருந்தோற்றச் சிறப்பினைக் கூறும் தொடர்கள்.

நல்லந்துவனார்

நெய்தற்கலி பாடிய இவர் 'இகன்மிருநேமியான் நிறம்போல இருள்' (2) என்னும் தொடரின் வாயிலாகச் சக்கரப் படையானைக் குறித்துள்ளார்.

நல்லுருத்திரன் (சோழன்)

முல்லைக்கலியைப் பாடிய புலவர் திருமாலை,

'வான்மதி சேரந்த அரவினைக் கோள்விருக்கும்
நீணிற வண்ணனும் போன்ம்' (6) எனவரும் தொடரால் சுட்டியுள்ளார்.

நல்எழினியார்

பரிபாடலில் 13-ஆம் பாடலைப் பாடித் திருமாலை வணங்கியுள்ளார்.

'கார்மலர்ப் பூவை கடலைஇருள்மணி
அவையைந்தும் உறழ மணிகிளர் மேனி 13(42-43)
என்பன திருமால் வண்ணத்திற்கு இவர் கூறும் ஐந்து உவமைகள்

நல்லாதனார்

திரிகடுகநூலாசிரியர். தம் நூலின் கடவுள் வாழ்த்தில் 'பூவைப் பூ வண்ணனாகத்' திருமாலைக் குறித்துப் போற்றியுள்ளார்.

விளம்பி நாகனார்

நான்மணிக்கடிகை நூலாசிரியர். நூலின் காப்புச் செய்யுளில் திருமாலைப் போற்றிப் பரவுகின்றார். இவர் வைணவர் என்பதும் இதனால் பெறப்படுகின்றது. இங்கு திருமாலின் தோற்றம் வர்ணிக்கப் படுகின்றது. நிலவு திருமாலின் வாள்முகத்தை ஒக்கும் என்று புகழுமிடத்துத் திருமால் வியக்கத்தக்க ஆற்றலுடையவன் என்ற பொருள்பட மாயவனாகக் காட்டப்படுகின்றான்.

*****



திருமாலிய நெறியாளர்கள்

அண்ணங்கராச்சார்யார்

பிரதிவாதி பயங்கரம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருவாய்மொழி நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, இராமானுச நூற்றந்தாதி, ஆசார்ய ஹிருதயம் முதலான பல நூல்களின் உரையாசிரியர்.

அண்ணாவப்பங்கார்

'ஸ்ரீவசன பூக்ஷண வியாக்யான அரும்பத விளக்கம்' என்ற நூலின் ஆசிரியர்.

அண்ணாவப்பனையர்

திருமழிசையில் பிறந்தவர். 'பழநடை விளக்கம் அல்லது குரும்பரம்பரை' என்ற நூலின் ஆசிரியர்.

அண்ணா

'ஸ்ரீமத் பாகவத ஸாரம்' என்னும் நூலாசிரியர்.

அண்ணாவியார்

இவருடைய வேறு பெயர் அண்ணாவையர். அதிவீரராமன் பட்டினத்தில் பிறந்தவர். மகாபாரத அம்மானை (1903) என்ற நூலை எழுதியவர்.

அந்தகவிராயர் (19 -நூ)

வேறுபெயர் அநந்ததேவன். உத்தர ராமாயண நாடகம் என்ற நூலின் ஆசிரியர்.

அந்தகிருட்டிண ஐயங்கார். எஸ் (19-நூ)

திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரிக்கு அண்மையில் உள்ள தென் திருப்பேரை என்ற ஊரில் பிறந்தவர். வானமாமலை

மடத்து பரமஹம்சேத்யாதி சின்னக்கலியன். இராமாநுச ஜீயர் சுவாமிகள் இவரைத் தம்முடைய ஆஸ்தான வித்துவானாகக் கொண்டார். தனிப்பாமஞ்சரி, திருவரங்கச் சிலேடை மாலை, பத்மநாப ஸ்வாமி சந்திரன் பாமாலை, திவ்யதேசப் பாமாலை, மணவாள மாமுனி ஊசற்றிரு நாமம் முதலான பல நூல்களை எழுதியவர்.

அநந்தாச்சாரியார் (19-நூ)

திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். 'சடகோபன் சந்திரகலாமாலையை' எழுதியவர்.

அநந்தாழ்வான்

'திருமலை ஒழுகு' என்ற நூலின் ஆசிரியர்.

அப்பன் சாமி

தொட்டாசாரியபுரத்தில் பிறந்தவர். 'திருமலை மகாத்மியம்' என்ற தொகுப்பு நூலை எழுதியவர்.

அப்பாவு முதலியார் (19-நூ)

இவருடைய வேறு பெயர் முடிச்சூர் அப்பாவு முதலியார். பிறந்த ஊர் முடிச்சூர். 'தென்னாசாரிய பிரபாவ தீபிகை', 'விட்டுணு தத்துவ விளக்கம்' முதலான நூல்களை எழுதியவர்.

அப்பியாச்சாரியார் (19-நூ)

'சீரங்க மகத்துவம்' என்ற புராண நூலினை இயற்றியவர். இந்நூல் 10 அத்தியாயங்களைக் கொண்டது.

அப்பிள்ளையார் (18-நூ)

'ஆழ்வார்கள் வாழித் திருநாமம்' எழுதியவர்.

அப்புவையங்கார்.ரெ. (20-நூ)

இவருடைய வேறுபெயர் நரசிம்மாச்சாரியார். இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினர். சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை, திருவேங்கடமுடையான் பதிற்றுப்பத்தந்தாதி, வானமாமலைப் பஞ்சரத்தினம், வரமங்கைக் கலம்பகம் என்பன இவரது நூல்கள் அம்பலத்தாடுமையன் - பாரதம் - ஆதி பருவத்தாதி பருவம்.

அமிர்தகவிராயர்(19-நூ)

தொண்டை நாட்டுப் பாலூரில் பிறந்தவர். 'கோகுலசதகம்' என்ற நூலை எழுதியவர். இந்நூல் ஆயர்குலப் பெருமைகளைக் கூறுவது.

அரங்க சீனி வாசன்

'திருவரங்கத்திருநூல்' ஆசிரியர்

அரங்கநாதக் கவிராயர். அட்டாவதானம்

'பாரதகாவியம்' ஆசிரியர்.

அரங்கநாதச் செட்டியார் (20-நூ)

இராமநாதபுரம் மாவட்டம், அரியக்குடியில் பிறந்தவர். தந்தையார் கிருட்டிணன் செட்டியார். 'வால்மீகி ராமாயணச் சருக்கார்த்த சங்கிரகம்', 'இராமாநுசதாசர் சரிதை' என்ற நூல்களின் ஆசிரியர்.

அரங்கநாததாசர்

'முனிவாகன போக கதா வியாக்யானம்' என்ற நூல் இவரால் எழுதப்பட்டது.

அரங்கராசன் - ஆர்

'உபதேசரத்தினமாலை' உரையாசிரியர்.

அரங்க சீனிவாசன்

'திருவரங்கத்திருநூல்' தந்தவர்.

அரங்கநார்தாச்சாரியார் (19-நூ)

இராகவாச்சாரியாரின் மகன். ஆண்டாளின் திருப்பாவைக்குத் 'திருப்பாவை வியாக்கியானம் ஆறாயிரப்படி', உரை தந்தவர். 'நிட்சேபதீபம்' என்ற நூலையும் எழுதியவர்.

அரங்கநாதன். தி. டாக்டர்

'ஆழ்வார்கள் அருளிச்செயலில் அவதாரங்கள்' ஆய்வு மற்றும் பெரியாழ்வார் பாசுரங்களில் பக்தியும் தத்துவமும் நூல்களின் ஆசிரியர்.

அரங்கநாதன் ஆ.

'ஸ்ரீ வைஷ்ணவம்'. நூலை எழுதியவர்.

அரங்கராஜன்.இரா. முனைவர்.

'நம்பிள்ளை' பற்றி ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்.

அரங்கையர் (19-நூ)

'விஷ்ணுவாலயத் தரிசன விதி' என்ற உரைநடைநூல் ஆசிரியர்.

அரிதாசர்

நாகலாபுரத்தில் பிறந்தவர். தந்தையார் - திருவேங்கட முடையார்.

சௌமிய நாராயணப் பெருமாள் கும்மிப்பாட்டு, சௌமிய நாராயணப் பெருமாள், திருநாள் வாகனக்கவி, இரு சமய விளக்கம் என்ற நூல்களை இயற்றியவர்.

அருணாசலம். ப. டாக்டர்.

'வைணவ சமயம்' நூலை ஆக்கியவர்.

அருளாளதாசர் (16 -நூ)

பாண்டிநாட்டு நெல்லிக்குப்பத்தில் பிறந்தவர். வேறுபெயர். மதுரகவி வரதராச ஐயங்கார். 'மகாபாகவதம்' என்ற நூலை வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்தவர்.

அருளாளப் பெருமாள் (14-நூ)

(அருளாளப் பெருமாளெம்பிரானார்)

ஞானசாரம் (40 வெண்பாக்கள்), பிரமேயசாரம் (10 வெண்பாக்கள்) முதலான நூல்களின் ஆசிரியர்.

அருணாசலக்கவுண்டர்.கு

'தமிழ்ப் பண்பாட்டில் வைணவம்' தந்தவர்.

அரையர்சாமி (19-நூ)

ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். வைணவ சமயம், திருவாய்மொழி முதலிய நூல்களை ஆராய்ந்து வெளியிட்டவர்.

அழகிய நம்பிதாதர் (18-நூ)

வேறு பெயர் அழகியநம்பி. 'வைஷ்ணவ குருபரம்பரை' என்ற நூலின் ஆசிரியர்.

அழகிய மணவாள இராமநுசதாசர் (19-நூ)

'உருக்மாங்கத சரித்திரம்'. இது ஏகாதசி நோன்பின் சிறப்பினைக் கூறுவது. 225 செய்யுட்களை உடையது. திருமுட்டப்புராணச் சுருக்கம்

அழகிய மணவாள ஜீயர்

திருவரங்கத்தைச் சேர்ந்தவர். இவருக்கு வாதிகேசரி என்ற சிறப்புப்பெயர் உண்டு. திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி உரை, திருவிருத்த வியாக்யானம், தத்துவதீபப் பிரகாசம், சாரீரகைக் கண்டியம், பகவத் கீதை வெண்பா முதலான நூல்களின் ஆசிரியர்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

திருவரங்கத்தைச் சேர்ந்தவர். தந்தையார் வடக்குத் திருவீதிப்பிள்ளை. திருவந்தாதி, அமலனாதிப்பிரான், கண்ணினுண் சிறுத்தாம்பு என்னும் நூல்களுக்கு உரையும், மாணிக்கமாலை, ஆசாரிய இருதயம், அருளிச்செயல் இரகசியம் முதலான நூல்களையும் இயற்றியவர்.

அனதாரியப்ப முதலியார் (19-நூ)

'பாகவதம் முதல் கந்தம்'.

அனந்தாழ்வான்

'நூற்றெட்டுத் திருப்பதியகவலும்', 'மணவாள மாமுனி நூற்றந்தாதியும்' தந்தவர்.

அரங்கசாமி க.

'கனகை' என்னும் கும்பகர்ணன் வரலாற்றைக் கூறும் கவிதை நாடக நூலாசிரியர். மூவாயிரத்து நூற்றி எண்பத்திரண்டு அடிகள், அகவற்பா, ஐந்து அங்கங்கள், பதினெட்டுக் காட்சிகள்.

ஆத்தான்சீயர்

திருவாய்மொழி, வியாக்கியான அடைய வளைந்தானரும்பத விளக்கம், திருப்பல்லாண்டு வியாக்கியான அரும்பதம் முதலான உரைநூல்களை எழுதியவர்.

ஆத்திரேய சீனிவாசச்சாரியர்

'இராமாயண சாரம்'

ஆத்ரேய ராமசேஷன்

'ஆழ்வார் கண்ட ஒப்பிலியப்பன்' என்னும் நூல் தொகுப்பாசிரியர்.

ஆலாலசுந்தரம்பிள்ளை அ.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். தந்தையார் அமிர்தாநந்தர். 'ஆசாரியப் பிரபாவம்', 'பகவத்கீதசாரம்' முதலான நூல்களின் ஆசிரியர்.

ஆளவந்தார்

பாண்டி நாட்டு வீரைநகரில் பிறந்தவர். 'ஞானவா சிட்டம்' என்ற நூலை எழுதியவர். இது வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு ஆன்ம ஞானம் உண்டாகும் பொருட்டு உபதேசித்ததை வால்மீகி முனிவர், பாரத்துவாச முனிவருக்குக் கூறியதாக அமைந்துள்ளது. 2055 செய்யுட்களைக் கொண்டது.

ஆறுமுக முதலியார்

'சகஸ்திரமுக ராவணன் கதை', 'சதமுகராவணன் கதை', 'மயில்இராவணன் கதை' முதலான உரைநடை நூல்களின் ஆசிரியர்.

ஆச்சார்யா. பி.ஸ்ரீ :

'திவ்யப் பிரபந்த சாரம்'.

இராமபத்திரன்

'வைணவம் தந்த வளம்' நூலாசிரியர்.

இராகவ ஐயங்கார். மு. (20-நூ)

பாண்டிய நாட்டில் அரியக்குடியில் பிறந்தவர். தந்தையார் முத்துச்சாமி ஐயங்கார். ஆழ்வார்களின் காலநிலை, கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை. திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் முதலான நூல்களை எழுதியவர். திருவிடைவெந்தைப்புராணம்.

இராகவ ஐயங்கார். ரா. (20-நூ)

புதுக்கோட்டை தென்னவராயனில் பிறந்தவர். தந்தையார். இராமாநுச ஐயங்கார். தாயார் பதுமாசனி அம்மையார். இவருடைய நூல்கள் 'இராமாயண சாரம்', 'பகவத்கீதை மொழிபெயர்ப்பு', 'திருவடிமாலை'.

இராகவலு இராமானுசதாசர்

'விஷ்ணு தோத்திர நாமாவளி' அல்லது 'மோட்ச சூட்சுமம்'.

இராகவாச்சாரியார்

'சாரசங்கிரக வியாக்கியானம்'.

இராசமாணிக்கம்.தி.

'திவ்யப்பிரபந்த ஒளிநெறி' நூலாசிரியர்.

இராசகோட்டியப்பப்பிள்ளை (20-நூ)

'திருவரங்கச் சிலேடை மாலை' நூலாசிரியர்.

இராஜகோபாலப்பிள்ளை (19-நூ)

சென்னைக் கோமளீசுவரன் பேட்டையில் வாழ்ந்தவர். திருவாய்மொழி முதலிய நூல்களுக்கு உரை, திருஎவ்வுளூர் வீரராகவப் பெருமாள் பேரில் ஆசிரிய விருத்தம்.

இராஜகோபால முதலியார் (19-நூ)

புதுச்சேரியைச் சேர்ந்தவர். திருவேங்கட மாலைக்கு உரை எழுதியவர்.

இராசகோபாலன் .டி.எஸ்

திருகண்ணபுரக் கலம்பகம்.

இராஜசேகர முதலியார் .ப (1-நூ)

தொண்டை நாட்டைச் சேர்ந்த பட்டூரில் பிறந்தவர். தந்தையார் பச்சையப்ப முதலியார். இராமாயண ஓரடிக் கீர்த்தனை எழுதியவர்.

இராசாராம் (19-நூ)

'ஸ்ரீராம ரகசியம்' உரைநடைநூல்.

இராமபத்திரன். ஆ. டாக்டர்.

தேரழுந்தூர் கம்பன் கவி இசைச் செல்வன். 'ஆழ்வார்கள் காட்டும் ஆராவமுதன்' நூலாசிரியர்.

இராமச்சந்திரன்.ப.

'திருவரங்கத்து அந்தாதி' ஓர் ஆய்வு நூலாசிரியர்.

இராமச்சந்திரக் கவிராயர் (19-நூ)

தொண்டைநாட்டைச் சேர்ந்த இராசநல்நூரில் பிறந்தவர். 'மகாபாரத விலாசம்' ஆசிரியர்.

இராமசாமி. எஸ்.வி. (20-நூ)

சென்னையைச் சேர்ந்தவர். தந்தையார் எஸ். வீரராகவன். ராமகானாமிர்தம் பாலகாண்டம், சுந்தரகாண்டம் இசைத்தொகுப்பு முதலான நூல்களை எழுதியவர்.

இராமசாமி உபாத்தியாயர் (19-நூ)

பொன்விளைந்த களத்தூரில் வாழ்ந்தவர். 'அரிகீர்த்தனைகள்' இயற்றியவர்.

இராமசாமி ஐயா (20 - நூ)

கீதாசாரத் தாலாட்டுக்கு உரை எழுதியவர்.

இராமசாமிப்புலவர். சு. அ.

கம்பராமாயணத்தை வசன நடையில் தந்தவர்.

இராமசாமி நாயுடு. அ. (20-நூ)

திருச்சிராப்பள்ளிப் புத்தூரில் உள்ள ஆதிவராகப்பெருமாள் மீது பதினான்கு செய்யுட்களைக் கொண்ட பதிகம் இயற்றியவர்.

இராமதாசர் (19-நூ)

'கோதண்டராம சதகம்', 'அலர்மேல்மங்கை மாலை' ஆகியன இவருடைய நூல்கள்.

இராமநாதப்பிள்ளை (20-நூ)

தொண்டை நாட்டுச் சாணாங்குப்பம். தந்தையார் பெயர். பொன்னுச்சாமிபிள்ளை. தாயார் அமிர்தவல்லி 'இராமாயண பஞ்சரத்தினம்' என்ற நூலின் ஆசிரியர்.

இராமலிங்கம்பிள்ளை (19-நூ)

மதுரையைச் சேர்ந்தவர். 'ஸ்ரீராமர் வனவாசம்' என்ற நூலை எழுதியவர்.

இராமலிங்கம்பிள்ளை.வே.

'(மோகனூர்) கம்பரும் வால்மீகியும்' என்ற நூல் ஆசிரியர்.

இராமானுசக் கவிராயர் (19-நூ)

சென்னையைச் சேர்ந்தவர். இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றவர். பார்த்தசாரதிமாலை, திருவேங்கட அனுபூதி, வரதராசப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி முதலான நூல்களை இயற்றியவர்.

இராமானுச ஐயர்

'திருவாய்மொழி வியாக்யான அரும்பத விளக்கம்' என்ற நூலை இயற்றியவர்.

இராமாநுசதாசர் - 1

'கிருஷ்ண பெருமான் பேரில் பஞ்சரத்தினம்' என்ற நூலின் ஆசிரியர்.

இராமாநுசதாசர் - 2

காயாறு என்ற ஊரில் பிறந்தவர். இவருடைய ஆசிரியர் நல்லான் சக்கரவர்த்தி சீனிவாச்சாரி. காஞ்சி அத்திகிரி மான்மியம், வரதராசப்பெருமாள் தோத்திரப் பாட்டு முதலான நூல்களின் ஆசிரியர்.

இராமாநுசதாசர் - 3

'நூற்றெட்டுத் திருப்பதிகத் திருப்புகழ்' ஆசிரியர்.

இராமாநுச நாவலர் - 1

புதுச்சேரியைச் சேர்ந்தவர். தந்தையார் வேங்கடராம நாயுடு. சுதர்சன கிரிப்புராணம், ஸ்ரீமுஷ்ணபுராணம். திருச்சித்திரக்கூட புராணம், வைணவத் தத்துவம், மணவாள மாமுனிகள் திருப்பதிகம், நம்மாழ்வார் பஞ்சரத்தினம், வரதராசப்பெருமாள் திருமாலை, வரதராசப்பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி, வைணவத் தத்துவம் முதலான நூல்களை எழுதியவர்.

இராமாநுச நாவலர் 2 (19-நூ)

புதுச்சேரியைச் சேர்ந்தவர். 'பாத்மோத்தர புராணம்' எழுதியவர்.

இராமாநுச நாவலர் ஏ.வே. (19-நூ)

சுதர்சன கிரிபுராணம், திருச்சித்திரகூடப்புராணம் முதலான நூல்களின் ஆசிரியர்.

இராமாநுச நாவலர். வே

'கொங்குநாட்டுக் கரடிவாவி' என்ற ஊரைச் சேர்ந்தவர். தந்தையார் - வேங்கடப் பிரசங்கியார். காரமடை ஸ்தலபுராணம், க்ஷத்திரிய புராணம் ஆகியவற்றை எழுதியவர்.

இராமாநுசப் பாவலர் (20-நூ)

தொண்டை நாட்டுச் சம்பாரெட்டிப்பாளையத்தைச் சேர்ந்தவர். தந்தையார் கிருட்டிணன். திருவல்லிக்கேணி வேதவல்லித் தாயார் மீது திருப்பதிகம் இயற்றியவர்.

இராமாநுஜயங்கார். திரு. கி.

குருகை மாலை உரைநூல் ஆசிரியர்.

இராமாநுசம் பிள்ளை (2) (19-நூ)

காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். சேடமலைப் பதிற்றுப்பத்தந்தாதி, கிருட்டிணகாணாமிருதம், 'வைணவ சமய வினா விடை' முதலான நூல்களை எழுதியவர்.

இராமாநுசாச்சாரியார் டி.கே.ஐ (19-நூ)

வேதாந்த தேசிகர் இயற்றிய ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் என்ற நூலுக்கு உரை எழுதியவர்.

இராமானுஜம் ஆர். டாக்டர்.

ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்கள் - ஒரு தாசானுதாசனின் பக்திப் பயணம் (மூன்று பகுதிகள்) நூலாசிரியர்.

இராமாநுசாச்சாரியார் (19-நூ)

ப்ரஹ்ம ஸூத்ர த்ராவிட பாஷ்யம், பெரிய திருவந்தாதி, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியவற்றிற்கு விளக்கம் தந்தவர்.

இராமானுஜதாசர்

'அத்திகிரி மான்மியம்' எழுதியவர்.

இராமையர்

காஞ்சி வரதராசர் மகாத்மியம்.

இராமையங்கார் 1(18-நூ)

வேறுபெயர் பால பாரதி. 'இராமாயணத் திருப்புகழ்' என்ற நூலை இயற்றியவர்.

இராமையங்கார் 2(19-நூ)

கோவிந்த நாமசங்கீர்த்தநம், ஆராவமுதன் விஷயமான பதிகம்.

இராமைய சாத்திரிகள் (19-நூ)

'வடாரண்ய மகாத்மியம்' என்ற உரைநடை நூலை எழுதியவர்.

இராமையா வஸ்தாது (19-நூ)

தஞ்சாவூர். எஸ்.ஜி. பாடசாலையின் தமிழாசிரியர்.

'ஸ்ரீபக்த லீலாமிர்தம்' என்னும் நூலுக்குச் சாற்றுக்கவி பாடியவர்.

இலக்குமணப்பிள்ளை

தென்னார்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டையைச் சேர்ந்தவர். ஆஞ்சநேய அவதார தீபிகை, இராம வைபவ சிந்தாமணி முதலான உரைநடை நூல்களின் ஆசிரியர்.

இளையபெருமாள்

வெங்கடேசப் பெருமாள் வழிபாடு, சங்கடங்கள் தீர்க்கும் சக்கரத்தார் என்பன இவருடைய நூல்கள்.

ஈசுவரமுனி

நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்குத் தனியன் செய்தவர்.

உபயகவி அப்பா (பிற்காலம்)

லெஷ்மிநரசிம்மர் வழிபாடு, திருமால் 1008 போற்றி நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு.

உருத்திரகோடிப் பிள்ளை.பு. (19-நூ)

பார்த்தசாரதிப் பெருமாள் பேரில் பதிகம்.

உய்யக்கொண்டார்

ஆண்டாள் திருப்பாவைக்குத் தனியன் இயற்றியுள்ளார்.

எதிராஜுலு நாயுடு.ஜி.

நூல் ''வைணவப்பூங்கா''

எதிராஜன். ஆ

'ஆழ்வார்கள் வரலாறு' நூலினை எழுதியவர்.

எதிராஜ ராமானுஜர்

நூல் - குருபரம்பரை வைபவம்.

ஐயாச்சாமி முதலியார் (19-நூ)

பரவாசுதேவர் திருவந்தாதியின் ஆசிரியர்.

ஐயாச்சாமி முதலியார்

பெங்களூரைச் சேர்ந்தவர். தந்தையார் முத்துராம முதலியார். தாயார் குழந்தையம்மாள். திருமலை அலர்மேலுமங்கை நாயகி மாலை, திருக்கச்சி வரதர் வெண்பா, திருநாராயணபுரத்துப் பதிற்றுப் பத்தந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதித் தோத்திரம், திருவரங்கத்துப் பதிகம், திருமலைப் பதிகம், திருநாராயணபுரத்துப் பதிகம், திருக்கச்சி மால் உயிர் வருக்கமாலை, சீரங்க நாயகி மாலை, நயனார் வரதர் பதிகம் முதலான நூல்களை எழுதியவர்.

ஐயுலு நாயகர் (19-நூ)

சேலம் மாவட்டம் தருமபுரியைச் சேர்ந்தவர். திருப்பதி வேங்கடேசப்பெருமாள்மீது 'போற்றிமாலை' பாடியவர்.

கருப்பையா .ச.

செவ்வைச் சூடுவார் பாகவதத்தின் பொருட் சுருக்கத்தினைப் பதிப்பித்து வெளியிட்டவர்.

கஸ்தூரி ரங்கையர் (20-நூ)

'மகாபாரத வினாவிடை' நூல் ஆசிரியர்.

கதிர்வேல் கவிராசபண்டிதர் (19-நூ)

'மகாபாரதக் கீர்த்தனை' நூலாசிரியர்.

கந்தசாமி முதலியார் (19-நூ)

களத்தூரைச் சேர்ந்தவர். ஸ்ரீராமர், சீதாதேவி வனவாசம் என்ற நூலின் ஆசிரியர்.

கந்தாடை இராமானுஜன்

'திருவேங் கடஉலா' நூலாசிரியர்.

களரிக்கண்ணன் (19-நூ)

திருவெஃகா திருமான்மியம்.

கல்யாணராம சாஸ்திரி (20-நூ)

சோழநாட்டில் பருத்தியூரில் பிறந்தவர். தந்தையார் கிருட்டிண சாத்திரி. 'ருக்மணி பரிணயம்' என்ற இசை நூலை இயற்றியவர்.

கம்பர்

கம்பராமாயணம், சடகோபரந்தாதி முதலான நூல்களைத் தந்தவர்.

கள்ளப்பிரான் கவிராசர்

'வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்'.

கவிக்குஞ்சரபாரதி (19-நூ)

இராமநாதபுரம் மாவட்டம் பெருங்கரையைச் சேர்ந்தவர். தந்தையார் சுப்பிரமணிய பாரதி, திருவேங்கடமாலை என்ற நூலின் ஆசிரியர்.

கவிக்குஞ்சரஐயர்

பாண்டிய நாட்டில் உள்ள வேம்பத்தூரைச் சேர்ந்தவர். அழகர் கலம்பகம், அழகர் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களின் ஆசிரியர்.

கண்ணதாசன் (கவிஞர்)

பகவத் கீதைக்கு எளிய விளக்கவுரை தந்தவர்.

கண்ணப்பன்

ஓய்வு பெற்ற கணிதப் பேராசிரியர். திருவரங்கமாலை, திருப்பதி மாலை, குருவாயூரப்பன் மாலை, அழகர்கோயில் சுந்தரராஜப் பெருமாள் மாலை, திருவாரூர் புலிவலம் வெங்கடாசலபதி மாலை, திருகண்ணப்புரம் சௌரிராஜப் பெருமாள் மாலை, குணசீலம் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் மாலை, கரூர் தாந்தோணிமலை கலியாண வேங்கடரமண சுவாமி பதிகம், திருக்கண்ணமங்கை பக்தவத்ஸலப் பெருமாள் பதிகம், உப்பிலியப்பன்கோயில் வெங்கடாசலபதிப் பதிகம். முதலான கவிதை நூல்களின் ஆசிரியர்.

கனகராஜ ஐயர்

'வானமாமாலை மான்மியம்' - நூலை எழுதியவர்.

கனகசபைப் பண்டாரம்

'இராமாயண வசனம்' எழுதியவர்.

கல்யாண சுந்தரனார் திரு.வி.

'நம்மாழ்வாரும் தமிழ்நாடும்' நூலாசிரியர்.

காசி கானந்த நானாச்சாரிய சுவாமிகள் (19-நூ)

18885 - ஆம் ஆண்டு பிறந்தவர். ஹரிஹடே ஹரிதத்துவ முக்தாவலி ஆசிரியர்.

கிருட்டிணசாமிக் கோனார் .வா

'மகாபாரதத் திருப்புகழ்ச்சிந்து' ஆசிரியர்.

கிருஷ்ணசாமி அய்யங்கார்

ஆறாயிரப்படி குருபரம்பரை ப்ரபாவம்.

கிருபானந்த வாரியார்

'கம்பன் கவிநயம்' ஸ்ரீமகாபாரதம் முதலான பல வைஷ்ணவ நூல்களின் ஆசிரியர். உபன்யாசகர்.

கிருஷ்ணசாமி தாசர்

நூற்றெட்டுத் திருப்பதி பிரபாவக் கீர்த்தனைகள்.

கிருஷ்ணபாரதி (19-நூ)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமயத்தில் 1791-இல் பிறந்தவர். 'திருவரங்க மான்மியம்.' நூலாசிரியர்.

கிருஷ்ணமாச்சாரியஸ்வாமி

'கலியனருள்பாடு' - நூலாசிரியர்

கிருஷ்ணசாமி அய்யங்கார்

'முமுக்ஷீப்படி வார்த்தாமாலை.'

கிருஷ்ணசாமி சர்மா. பா.

வைணவ சம்பிரதாய மற்றும் இலக்கிய நூல்களை எளிய முறையில் பதிப்பித்து வெளியிட்டுவரும் லிப்கோ பதிப்பக ஸ்தாபகர்.

கிருஷ்ணமாச்சாரியார் (20-நூ)

நன்னிலத்திற்கு அருகில் திருக்கண்ணபுரத்தில் உள்ள பில்லாலி என்ற ஊரில் 1876-இல் பிறந்தவர். மணவாள மாமுனி நூற்றந்தாதி, திருநறையூர்நம்பி மேகவிடுதூது ஆசிரியர்.

கிருட்டிணமூர்த்தி ஐயர் (20-நூ)

சிதம்பரத்தைச் சேர்ந்தவர். மகாபாரத சதகம் இயற்றியவர்.

கிருட்டிணர்

தந்தையார் யாமுனர். பாசுரப்படி இராமாயண ஆசிரியர்.

கிருட்டிணனம்

வல்லாம்பர் நாட்டுச் செஞ்சையில் பிறந்தவர். பாரத அம்மானை என்ற நூலின் ஆசிரியர்.

குகப்ரியை

'ஸ்ரீ மகா பக்த விஜயம்' தமிழ் நூலாக்கப்பணி செய்தவர்.

குருகைப் பெருமாள் கவிராயர்

வேறுபெயர் சடையன். திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகையில் பிறந்தவர். தந்தையார் திருக் குருகைப் பெருமாள் கவிராயர். திருப்பதிக்கோவை, நம்பெருமாள் மும்மணிக்கோவை என்ற நூல்களின் ஆசிரியர்.

குருகை வைகுண்டர்

இராமாயணச் சிந்து.

குருகைக் காவலப்பன்

பேயாழ்வாருடைய மூன்றாந் திருவந்தாதிக்குரிய தனியன் செய்தவர்.

குலசேகர ஆழ்வார் (8-நூ)

வேறுபெயர் குலசேகரப் பெருமாள். திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர். அரச மரபில் வந்தவர். பெருமாள் திருமொழி என்ற நூலினை அருளியவர்.

குலசேகரன் - எஸ். டாக்டர்

'வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை'

கேசவ அய்யங்கார்

' அடியவர்க்கு மெய்யனருள்' ஆசிரியர்.

கோபால கிருஷ்ணமாச்சாரியார். வை.மு.

கம்பராமாயணம் வில்லிபாரதம் உரையாசிரியர்.

கோவிந்தசாமி முதலியார்

'தசாவதாரத் திருவிளையாடல் சங்கிரகம்'.

கோவிந்தபட்டர் (12-நூ)

பெரிய திருமொழி தனியன்.

கோவிந்தராச முதலியார். கா.ர. (20-நூ)

1874ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தவர். பிறகு சென்னையில் வாழ்ந்தவர். தந்தையார் அரங்கசாமி முதலியார். தாய் - கமலாம்பாள்.

திருவேங்கடப் பதிற்றுப்பத்தந்தாதி - திருமகள் வெண்பாப் பத்து, திருமகள் கலித்துறைப்பத்து, ஆழ்வார் வரலாறு, ஆழ்வார் வழிக் குரவர் வரலாறு, திருப்பாவை ஆராய்ச்சி முதலான நூல்களின் ஆசிரியர்.

கோவிந்தராசலு நாயுடு

'திருப்பதித் தலபுராணம்' இயற்றியவர்.

கோனேரியப்பனையங்கார்

சீரங்கநாயகியார் ஊசற்றிருநாமம், திருவரங்கத்து ஊசல் திருநாமம்.

சந்திரமோகன். சு.

ஸ்ரீமத் பகவத்கீதைக்கு எளிய விளக்கம் எழுதியவர்.

சங்கரமூர்த்திக் கோனார்

பாகவத அம்மானை இரண்டாம் பாகம்.

சங்கரலிங்கம்பிள்ளை.அ.

தொண்டை நாட்டில் முத்தூரில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். தந்தையார் அப்பாவுப்பிள்ளை.

திருவல்லிக்கேணிக் கலம்பகம் ஆசிரியர்.

சங்கு சுப்பிரமணியன் (20-நூ)

தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரைச் சேர்ந்தவர். தந்தையார் சுந்தரம் ஐயர். தாயார் மீனாட்சி அம்மாள். கீதகோவிந்தம் நூல் ஆசிரியர்.

சடகோப ஐயங்கார்

அரியலூரில் பிறந்தவர். தந்தையார் ஐயாவையங்கார். இராமாயண வண்ணம். இராமாயணச் சிந்து, சீவப்பிரம ஐக்கிய வரலாறு நூல்களின் ஆசிரியர்.

சடகோபதாசர் (18-நூ)

நாகப்பட்டினம் கீழையூரை சேர்ந்தவர். 'அரிசமய தீபம்' எழுதியவர்.

சண்முகசுந்தரம்

வைணவ ஆலயங்கள்.

சரவணப்பிள்ளை பெ. (20-நூ)

திரிசிரபுரத்தைச் சேர்ந்தவர். தியானபந்தன மாலிகை, இராமாயண சமய உசிதகவிதை, மகாவிஷ்ணு தசாவதாரப் பதிகம் முதலான நூல்களை எழுதியவர்.

சரவணமுத்துப்பிள்ளை

அனந்த பத்மநாப சுவாமி விரத மான்மியம் மூலமும் உரையும் எழுதியவர். சாமி (ராமதூதன்) அனுமான் அனுபூதி இயற்றியவர்.

சாமிநாதன் நா. பாவலர்

திருப்பதி வேங்கடாசலபதிப் பாமாலை பாடியவர்.

சாமி ஐயங்கார்

புதுக்கோட்டையைச் சேர்ந்தவர். வைகானச்சாரியார் அந்தாதி, காரையூர் சுந்தரராசப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி, இரட்டை மணிமாலை முதலான நூல்களை இயற்றியவர்.

சாம்பசிவன்.ச.

'கண்ணன் பிள்ளைத்தமிழ்'.

சாவித்திரி மணி

சூடிக்கொடுத்த நாச்சியாரைப் பற்றிய 'அருட்பாவை' இலக்கிய ஆசிரியர்.

சிவராமகிருஷ்ணன் சர்மா

'பக்தி ப்ரபத்தி'

சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் (மாயவரம்)

'ஸ்ரீ பாகவத சங்கிரகம்' தமிழ்மொழி பெயர்ப்பாளர்.

சிங்காரசேகார்

மாபாரதம் (வழிநூல்)

சின்னைய நாயகர் (20-நூ)

ஊர் தொண்டை நாட்டில் திருவிசைநல்லூர். பகவத்கீதை உரை ஆசிரியர்.

சின்னையன்

'பாகவத வசனம்' ஆசிரியர்.

சின்னையா முதலியார்

சுந்தரராஜப்பெருமாள் கீர்த்தனம்.

சின்னைய நாவலர்

திருக்கண்ணபுரப் புராண வசனம்.

சீனிவாசய்யங்கார். சி.ஆர்.

மயிலாப்பூர் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தலபுராணம்.

சீனிவாச ஐயங்கார் . கே.

1897 - ஆம் ஆண்டு பிறந்தவர். அபயப்ரதராஜ விஜயம், நாராயண ஸுக்தவியாக்யானம், புருஷ ஸுக்த வியாக்யானம்.

சீனிவாச ராகவாச்சாரியார்

இராமாயண விசேடார்த்தங்கள் எழுதியவர்.

சீனிவாசன். க.மேஜர்

'திருமால் வழிபாடு' நூல் தொகுப்பாசிரியர்.

சீனிவாசன்

கம்பராமாயண வசனம்.

சீனிவாசன் ம.பெ (டாக்டர்)

'வைணவ இலக்கிய வகைகள்' ஆய்வு நூல் ஆசிரியர்.

சீனிவாச நம்பியார். எம்.ஏ.கே.

கூடலழகர் பெருமாள் தலபுராணம்.

சீனிவாசாச்சாரியார்

திருவாய்மொழி ஸ்வாபதேச நிர்வாகம்.

சீனிவாசன் மதி. டாக்டர்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்த உரையாசிரியர்.

சுந்தராச்சாரியார்

நடாதூரைச் சேர்ந்தவர். ஸ்ரீரங்க மகத்துவ ஆசிரியர்.

சுந்தரேசசர்மா. டி.எஸ்.

'ஸ்ரீராமகீர்த்தன மஞ்சரி' நூலாசிரியர்.

சுப்பராய ஐயர்

குன்றத்தூர் திருப்பதி வெங்கடேஸ்சுவரர் தேர் வண்டிக்கால் சரித்திரக்கீர்த்தனை.

சுப்பராயலு நாயக்கர் .த.வ

தரங்கமாநகரத்தைச் சேர்ந்தவர். உவமைச்சொல் அகராதி, மகாபாரதமென்னும் இதிகாசத்தில் முதலாவது ஆதிபர்வம், மகாபாரத மென்னும் இதிகாசத்தில் இரண்டாவது சபாபர்வம்.

சுப்பராயலு நாயுடு

திருஎவ்வுளூரைச் சேர்ந்தவர். தந்தையார் - மதுரவயல் சேஷாசலநாயுடு. திருஎவ்வுளூர் வீரராகவப் பெருமாள்மீது அந்தாதி.

சுப்பிரமணிய ஐயர் (19-நூ)

தஞ்சாவூரில் பிறந்தவர். திருவேங்கடப்புராணம். இலக்குமிபுர ஸ்தல புராணம் முதலான நூல்களின் ஆசிரியர்.

சுப்பிரமணிய தேசிகர் பொ. கரு (20-நூ)

பூவுற்றகுடியில் சிறந்தவர். இராமாயண அம்மானை ஆசிரியர்.

சுப்பிரமணிய பாரதியார் (19-நூ)

மதுரைக்கு அருகில் உள்ள மழவராயனேந்தல். தந்தையார் சொக்கைய தீட்சிதர். திருமெய்யம் விஷ்ணுகோயில் தலபுராணக் கீர்த்தனை ஆசிரியர்.

சுப்பிரமணிய பாரதியார்.சி. (20-நூ)

திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் இலக்குமி அம்மாள் சின்னசாமி ஐயருக்கு 11.12.1882 - ஆம் ஆண்டு பிறந்தவர். கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான நூல்களை எழுதியவர்.

சுப்பிரமணிய முனிவர் (18-நூ)

கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ஆசிரியர்.

சுப்பிரமணிய சாஸ்திரி - ஸ்ரீகண்ணபிரான் சரித்திரம்.

சுப்பிரமணியன் க. (திருநெல்வேலி)

ஆண்டாள் கவிதை வரலாற்று நாடகம் எழுதியவர். 2500 அடிகள் அகவற்பா ஐந்து அங்கங்கள் இருபத்தி நான்கு காட்சிகளில் சூடிக்கொடுத்த நாச்சியாரின் சுவையான வரலாறு.

சுப்பு ரெட்டியார். ந. டாக்டர்.

திருமலை திருப்பதி தேவஸ்தான நிதியுதவி பெற்று திருமாலியநெறிகள்/ திவ்யதேசங்கள் பற்றிய நூல்கள் பலவற்றை எழுதியவர்.

செல்லையா (20-நூ)

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார் பண்ணை தந்தையார் - வைத்தியலிங்கம். தாய் - சீனியம்மாள். வண்ணைத் திருமகள் இரட்டை மணிமாலை.

செவ்வைச் சூடுவார் (16-நூ)

வேறுபெயர் மாதவபண்டிதர். இராமநாதபுர மாவட்ட வேம்பற்றூர். வடமொழியிலிருந்து பாகவத புராணத்தின் தமிழாக்கம். இந்நூல் விண்டு பாகவதம் என்று அழைக்கப்படும்.

செல்லையா - வண்ணை

'அரிநாம தோத்திரம்' திருமால் அவதார நாமாவளி நூல்களைத் தந்தவர்.

சென்னகேசவலு நாயுடு ஆ.மே.(20-நூ)

சென்னை சிந்தாதிரிப்பேட்டை. அனுமான் அந்தாதி பாகவதம். ஆசிரியர்.

சேஷாசலம்பிள்ளை

அத்யாத்ம ராமாயண ஆசிரியர்.

சேஷாத்திரி ஐயங்கார். நா. (19-நூ)

தொண்டை நாட்டைச் சேர்ந்த செங்காடு. தந்தையார் நாராயண ஐயங்கார். ரங்கநாதர் சிந்து என்ற நூல் ஆசிரியர்.

சொக்கலிங்கம்

துரோபதை அம்மானை.

சௌரிராஜப் பெருமாள் தாசர்

ஸ்ரீபார்த்தசாரதி மாலை.

ஞானிசித்த சுவாமிகள்

திருக்குருகூர் - திருவரங்கத்திருமாலை.

தராசன்

திருமாலின் அவதாரக் கதைகள்.

தணிகை ராய நாவலர்

கஜேந்திர மோக்ஷ கீர்த்தனம்.

தனபாக்கியவதி. த.

தமிழ் இலக்கியத்தில் திருமால் வழிபாடு நூலாசிரியர்.

தனபால பதுமாவதி அம்மையார் (20-நூ)

சென்னையைச் சேர்ந்தவர். தாய். காமாட்சி. தந்தை புட்பால அப்பாயி நாயுடு. 1896-ஆம் ஆண்டுப் பிறந்தவர்.

பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர்.

தாமோதரன்.கு

திருவாய்மொழித்திறன்.

தாண்டவேசர்

பாகவத சாரம்.

தாத தேசிக தாதாசாரியார் (20-நூ)

வால்மீகி ராமாயண வசனம்.

திம்மப்ப அந்தணனார் (20-நூ)

சமயசங்கிலி என்ற ஊரைச் சேர்ந்தவர். 'திருவேங்கட மும்மணிக்கோவை' ஆசிரியர்.

தியாகப்ப தாசன். வீ. (19-நூ)

இராமாநுஜ மிட்டாய் சிந்து.

தியாகராசசாமி மாடிக் ராவ் சாகேப் (19-நூ)

அநுமார் விரத மான்மிய ஆசிரியர்.

திருக்குருகூரார்

விட்டுணு புராண வசனம்.

திருக்குருகைப் பிரான் பிள்ளான் (13-நூ)

தந்தையார் பெரிய திருமலை நம்பி. திருவரங்கத்தைச் சேர்ந்தவர். ஆறாயிரப்படி வியாக்கியானம் என்ற திருவாய்மொழிக்கு வியாக்கியானம்.

திருக்கோனேரி தாஸ்யை

திருவாய் மொழி வாசகமாலை.

திருச்சிற்றம்பல தேசிகர் (19-நூ)

கம்பராமாயண வசனம், உத்தரகாண்ட வசனம்.

திருசிரபுரம்.வீ. கோவிந்தப் பிள்ளை

இராஜமன்னார்கோயில் தலபுராணம், கம்பராமாயணம், சுந்தரகாண்ட உரை.

திருஞானசம்பந்தப் பிள்ளை (20-நூ)

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். 1849-ஆம் ஆண்டு பிறந்தவர். அரிகரதாரதம்மியம், நாராயண பரத்துவ நிர்ணயம் முதலான நூலின் ஆசிரியர்.

திருநின்றவூரர்

அரி தசாவதார வாத்சல்ய சாரம். திருக்கண்ணமங்கை யாண்டாள் நாச்சியார் திருமொழிக்குத் தனியன் செய்தவர்.

திருமங்கையாழ்வார் (9-நூ)

